தரமிகு புட்பராகம் தண்ணொளிர் வைடூரிய மாய்
விரவுகோ மேதகமென்னும் விரிகதிர் மணியிற்றோன்றும்
அருள்நவ சக்திகள் தம் அடிகளைப் போற்றி வாழ்வாம்.

நவ வீரர்கள்

மாணிக்கவல்லி மகன் வீரவாகு
முத்துவல்லி மகன் வீரசேகரி
புட்பராகவல்லி மகன் வீரமகேந்திரர்
கோமேதகவல்லி மகன் வீரமகேசர்
வைடூரியவல்லி மகன் வீரபுரந்தரர்
வைரவல்லி மகன் வீரராக்கதர்
மரகதவல்லி மகன் வீரமார்த்தாண்டர்
பவளவல்லி மகன் வீரபுராந்தகர்
நீலவல்லி மகன் வீரதீரர்

செங்குந்தர் சிறப்பு

சிவனருளாற் தோன்றுநவ வீரர் தங்கள்
திருமரபின் வழியினர் செங்குந்தர் தாமும்
நவமுறத்தம் உறவின்முறைச் சோழரோடும்
நாள்தோறும் சிவபூசை நெறியிற் செய்தும்
பவமதிலே ஊன்புசியாய் புனித ரென்றும்
பண்பொபற் பதிகளிலும் சிறப்பின் மிக்க
தவக்கோயில் நிர்வாகத் திறமும் பெற்றுச்
சான்றோரென் புகழினையும் தாம் பெற்றாரே.

செங்குந்தர் பேரரசு முறைமை

காஞ்சிபுரம் பெருநாடு

திசை நாடுகள் நான்கு

1. சிவபுர நாடு
2. தொந்திரபுர நாடு
3. விரிஞ்சிபுர நாடு
4. சோளிங்கபுர நாடு

1. சிவபுர நாடு (கிளை நாடுகள்)

சிவபுரம்

1. மேல்படப்பை, கீழ்ப்படப்பை, ஆத்தஞ்சேரி
2. மானாம்பதி, செம்பாக்கம், மூணத்தொன்று, அகரம்
3. முன்னூர், பரமேஸ்வர மங்கலம், மதுராந்தகம்
4. திண்டிவனம்
5. வக்கரைப்பத்து
6. திருவக்கரை, புதுச்சேரி, ஒழுகரை
7. திரிபுவனம், நல்லாத்தூர்
8. திருப்பாலூர்
9. மிடையாத்தூர், திருவெண்ணெய்நல்லூர்
10. பனைமுலை, அனந்தபுரம்
11. வழுதிலைப்பட்டு
12. மாப்பரை, வரமாகூர்
13. பட்டணம், கருங்குழி
14. மன்னார்கோவில்
15. பாளையம்
16. குப்பாக்கம்
17. சம்பை, திருவரங்கம்

2. தொந்திபுர நாடு (கிளை நாடுகள்)

தொந்திபுரம்

1. முருகமங்கலம்
2. திருவாமாத்தூர்
3. திருவண்ணாமலை
4. செங்குறிஞ்சி
5. கச்சித்திரல்
6. சேலம்
7. திட்டக்குடி
8. திருமலைப்பாடி
9. திருக்கோவில்
10. திருநாகேசுவரம்
11. திருச்செம்பள்ளி
12. சீர்காழி
13. மாப்பிள்ளைக்குப்பம்
14. தேவூரு
15. காட்டூர்
16. போலகம்
17. நல்லாச்சேரி

3. விரிஞ்சிபுர நாடு

விரிஞ்சிபுரம்

1. ஆமூர்
2. வாணியம்பாடி
3. கொரட்டை
4. தர்மபுரி
5. பவானி
6. தாரமங்கலம்
7. ஏழாநாடு
8. புகழாரை
9. பூரதிரை
10. திருச்செங்கோடு
11. வையாபுரி
12. அவிநாசி
13. நஞ்சுண்ட குடி
14. வகவங்கபாளையம்
15. கருவூர்
16. நாமக்கல்
17. காங்கேயம்

4. சோளிங்கபுர நாடு

சோளிங்கபுரம்

1. திருத்தணிகை
2. தெளிநாடு
3. நெறிநாடு
4. திருவடிநாடு
5. திருமழிசை
6. கொந்தம்பாக்கம்
7. திருக்காளத்தி
8. தொண்டமாநாடு
9. வரைநாடு
10. வெங்கட்டகிரி
11. திருப்பதி
12. ஜெகந்நாதம்
13. சீட்டம்பள்ளி
14. செம்புரம்
15. வரதபுரி
16. சந்திரகிரி
17. காசி

திருமழிசை நாட்டைச் சேர்ந்த 18 பேரூர், சிற்றூர்கள்

1. திருமழிசை
2. வடதிருநாகேஸ்வரம்
3. திருமயிலாப்பூர்
4. திருக்காரணி
5. மாம்பலம்பேட்டை, தோப்பேட்டை
6. திருவல்லிக்கேணி
7. சென்னைப்பட்டினம்
8. சிந்தாதிரிப்பேட்டை
9. எழும்பூர்
10. புதுப்பேட்டை
11. ஆலந்தூர்
12. அனகாபுத்தூர்
13. திருநீர்மலை
14. மூன்றாம் கட்டளை
15. மேப்பூர்
16. பம்மல்
17. காரணீஸ்வரன்பேட்டை
18. பழைய மாம்பலம்

இந்த உடம்பு <u>அசித்து</u>, ஆன்மா <u>சித்து</u>, அசித்தாகிய உடம்போடு சித்தாகிய ஆன்மா சேர்ந்திருக்கிறது. வண்டிக்கு அறிவு கிடையாது. எருதுக்கு அறிவு உண்டு (ஐந்தறிவு) எருது தானேபோய் வண்டியில் நுழையாது. வண்டிக்கும் மாட்டுக்கும் உடையவன் ஒருவன் இருக்கிறான். அவன் அந்த வண்டியிலே மாட்டை நுழைத்து பூட்டாங்கயிற்றைப் பூட்டி வண்டியை ஓட்டுகிறான். அதுபோல சரீரமாகிய வண்டியிலே ஜீவாத்துமாகிய எருதை நுழைத்து பிராணவாயு என்னும் பூட்டாங்கயிற்றைப் பூட்டி பகவான் நம்மை நடத்துகிறான். எந்தப்பக்கம் ஓட்டுவான், எப்போது அவிழ்த்துவிடுவான் என்று வண்டிக்கோ, எருதுக்கோ தெரியாது.

மரணம் வருவதற்குள்ளாக ஆண்டவன் சரணத்தை நினைக்கவேண்டும்.

செங்குந்தர் குலத்துச் சீலர்கள்

ஒரு சமூகத்திற்குப் பெருமையும், மதிப்பும், உயர்வும், அந்தஸ்தும் ஏற்படுவது அச்சமூகத்தில் தோன்றும் குலத் தோன்றல்களான சான்றோர்களால்தான் என்றால் அது சாலப் பொருத்தமுடையதாகும். செங்குந்தர் குலத்தில் அவ்வக்காலங்களில் சான்றோர் பலர் தோன்றியுள்ளனர். அவ்வரிசையில் நம் சமூகத்திற்குப் பெருமை சேர்த்த 'செங்குந்தர் குலச் சீலர்கள்' பெயர்களைக் கீழே கண்டு மகிழலாம்.

1. நவவீரர்
2. இலக்க வீரர்
3. ஆயிரத்துத் தொள்ளாயிரவர்
4. திருக்கச்சி ஆளவந்த வள்ளலார் மடாலயச் சைவாச்சாரியர்
5. திருவாலங்காடு கார்கோடக மடாலயச் சைவாச்சாரியர்
6. திருவழுவூர் வேதநாயக மடலாயச் சைவாச்சாரியர்
7. மெய்கண்ட சிவாச்சாரியர்
8. கிளைநாட்டு மடாலயச் சைவாச்சாரியர்
9. திருக்கச்சி மாவடித் தேவசிங்காசனாபதிகள்
10. திருவாரூர் முதலிய சத்தவிடங்கத் தாபகர்
11. சிவலாய குகாலய தர்மகர்த்த தத்துவ பரிபாலன ஆட்சியோர்
12. தில்லைக்கொடி ஏற்றுவித்தோர்
13. திருமூல தேவர்
14. காரித் தேசிகர்
15. நரசிங்க முனையரையர்
16. இடங்கழிப் பெருமாள்
17. முனைய வள்ளல்
18. பெருமிழலைப் பெருந்தகை
19. மெய்ப்பொருள் மூர்த்தி
20. சத்தியண்ணல்
21. செருத்துணைக் குரிசில்
22. கோட்புலிச் செம்மல்
23. கூற்றுவத் தலைவர்
24. எறிபத்த நாயனார்
25. கணம் புற்றாபதர்
26. ஒட்டக்கூத்தர்
27. குகனேரியப்ப நாவலர்
28. காங்கேயர்
29. தண்டியடிகள்
30. பொய்யாமொழிப்புலவர்
31. பகழிக்கூத்தர்
32. இரட்டைப் புலவர்கள்
33. படிக்காசுப் புலவர்
34. கச்சியப்ப முனிவர்
35. சிதம்பர சுவாமிகள்
36. பிறசை அருணாசல சுவாமிகள்
37. பாரதிதாசன்
38. கிருபானந்தவாரியார்

கல்வெட்டுகளில் கைக்கோளர்

கைக்கோளர்கள், படை வீரர்களாகவும், நெசவாளர்களாகவும், இருந்து வந்தவர்கள். இவர்கள் கந்த புராணத்தில் வரும் வீரவாகுவின் மரபினைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் நமக்குச் சோழர்கள் காலம் முதற்கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கிடைக்கின்றன. இருந்தாலும், மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில்தான் சற்று அதிகமாக இவர்களைப் பற்றிய கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

படையில் பங்கேற்றமை

கை+கோள், கை=சேனை, கோள் = வலிமை. அதாவது படை வலிமை உடையவர்கள், போர்க்காலங்களில் அரசர்களுக்குத் தங்கள் வலிமை மூலம் உதவி செய்வதே கைக்கோளின் பணியாக இருந்தது. அவர்களுக்குக் கைக்கோள் படை அல்லது உதவிப்படை என்று பெயர். வேண்டும்போது, அரசர்களால் அழைக்கும் போது சென்று உதவும் படை என்பதாம். உயிர் காக்கும் உழவுத் தொழிலும் மானம் காக்கும் நெசவுத் தொழிலும் தமிழ்நாட்டின் சிறந்த தொழிலாகும். அதில் அவர்களின் பரம்பரைத் தொழில் நெசவுத் தொழில். அத்துடன் அவர்கள் போர்க்களப் பயிற்சியும் பெற்றிருந்தனர் என்பது வரலாற்று உண்மை. கைக்கோளர் என்பது கல்வெட்டுகளில் கல் தச்சர்களால் தவறாக எளிமையை ஒட்டி 'கைக்கோலர்' என்று கல்வெட்டுகளில் பொறித்திருக்க வேண்டும். கைக்கோளர் என்பதே சரியான சொல்.

படைப்பிரிவின் பெயர்கள்

பெரும்பாலும் ஆட்சியில் இருந்த அல்லது இருக்கும் மன்னனின் பெயரிலோ அவனது சிறப்புப் பெயர்களாலோ இப்பிரிவுகள் அழைக்கப்பட்டன. உதாரணமாக மேற்கண்ட படைப்பிரிவுகளில் சமரகேசரி, விக்கிரமசிங்கம், வீரசோழர் போன்றவை முதலாம் பராந்தகச் சோழனின் பட்டப் பெயர்களாகும். அருள்மொழி என்பது முதலாம் இராஜராஜ சோழனின் இயற்பெயராகும். வீர ராஜேந்திரன் என்பது மற்றொரு சோழ அரசனின் பெயராகும். இவ்வாறு ஆட்சியில் இருக்கும் அல்லது இருந்த மன்னர்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இக்கைக்கோளர் பிரிவுகள் பல்வேறு காலங்களில் உதவியாகச் செயல்பட்டு வந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

நினைவுச் சின்னங்களும் மானியமும்

இக்கைக்கோளர் படையானது போர்க்காலங்களில் ஒரு முன்னணிப் படையாக விளங்கியது. போரில் உயிர் துறந்த கைக்கோளர்களின் ஞாபகார்த்தமாக அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் (நடுகல்) எழுப்பப்பட்டன. அதுமட்டும் அல்லாது இறந்த கைக்கோளரின் சந்ததியாருக்கும், நல்வாழ்வுக்கெனத் தனியாக நிலமும் தானமாக அளிக்கப்பட்டது. இவர்கள் அரசருக்கு எல்லாவகையிலும் நெருங்கி அவரது நல்லாசியைப் பெற்றிருந்தனர்.

தறிக்கு வரியும், தனி நபர் வரியும்

இரண்டாம் சுந்தர பாண்டியன் காலத்தில் ஒரு தறிக்கு வருடத்திற்கு ஆறு பணம் வரியாக வசூலிக்கப்பட்டது. பின்பு விஜயநகர பேரூராட்சியில் அரிஹரராயர் காலத்தில் இவ்வரியானது 4 பணமாகியது. ஆனால் இதே பேரரசில் இந்நான்கு பணமானது இரண்டாகப் பிரிந்து, 2 பணம் ஒவ்வொரு தறிக்கும், 2 பணம் ஒவ்வொரு கைக்கோள நபர் மீதும் மன்னர் புக்கன்னன் காலத்தில் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வரி திட்டத்தின்படி தறி அல்லாத ஒரு கைக்கோளர் குடும்பத்தைச் சார்ந்த ஒவ்வொரு நபரும் வரி செலுத்த வேண்டியதாயிற்று. இதனால் அரசிற்கு நல்ல வருவாய் கிடைத்துள்ளது என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

கோயில் நிர்வாகத்தில் பங்கேற்றமை

கைக்கோளர்கள் நிர்வாகப் பொறுப்பிலும் தங்களது. ஆதிக்கத்தை வளர்த்து வந்தனர். உதாரணமாக, புதுக்கோட்டை குடுமியாமலையிலுள்ள மேலைக் கோயிலுக்குத் தினம் தேவையான பொருட்களைக் கொடுக்க இரண்டு பிரதிநிதிகள் மூன்று படை பொற்கோயில் கைக்கோளர் பார்வையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இச்செய்தியை அக்கோயில் கல்வெட்டு மூலம் அறியலாம்.

கோயில் கட்டுவதில் பங்கு

கைகோளர் அனைவருமே தங்கள் நிலைக்கேற்ப கோயில்களுக்குப் பல்வேறு வகைகளில் உதவி புரிந்து வந்துள்ளனர் என்பதைப் பல கல்வெட்டுச் சாசனங்கள் நிரூபிக்கின்றன. கி.பி.1507ஆம் ஆண்டு திருநெல்வேலி அம்பாசமுத்திரத்திலுள்ள லட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலைச் சுற்றி வசிக்கும் கைக்கோளர்கள் வேளகுறிச்சி என்னும் இடத்தில் புதியதாக பூதள வீரராம பிள்ளையார் கோயில் மற்றும் அன்ன வினோதீஸ்வரர் கோயில்களை முழுவதுமாகக் கட்டினர். இதற்கு முந்தைய காலமாகிய கி.பி.1130ஆம் ஆண்டு பொள்ளாச்சி தாலுக்காவிலுள்ள ஆதிபுரீஸ்வரர் கோயிலிலுள்ள ஒரு மண்டபத்தின் வாயிலை இரு கைக்கோளச் சகோதரர்கள் கட்டியுள்ளனர். இது போல ஏற்கனவே உள்ள கோயில்களிலும் புதியதாகப் பல கட்டிடக் கோப்புகள் சேர்க்கப்பட்டதோடு சில கற்சிலைகளையும் இக்குல மக்கள் அங்கு நிறுவியுள்ளனர். அதோடு சுவாமிக்கு அணிவிக்க சில ஆபரணங்களையும் சிலர் அளித்துள்ளனர். திருப்பாதரிலுள்ள அருள்மிகு வாகீஸ்வரர் கோயிலில் குடி கொண்டுள்ள பனைமுலை நாச்சியாருக்குக் காது, கழுத்து அணிகலன்கள் செய்ய 9 கழஞ்சு பொன் கன்னனராசு என்னும் ஒரு கைக்கோளரால் அளிக்கப்பட்டள்ளது. இது மட்டுமல்லாது 19,908 முத்துப் பரல்களாலான ஒரு குடையுடன் 25¾ கழஞ்சு எடையுள்ள ஒரு தங்க ஆபரணமும் உடையார்குடியிலுள்ள கோயிலுக்கு ஓர் ஊரைச் சார்ந்த கைக்கோளர்களால் தானமாக அளிக்கப்பட்டுள்ளன.

கோயிலுக்குப் பலவகை உபயங்கள்

கோயில்களைக் கட்டியது மட்டும் அல்லாது பூஜை வழிபாட்டிற்கும் பல்வேறு உபயங்களைச் செய்துள்ளனர். தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ஜம்பை

என்னுமிடத்திலுள்ள ஒரு சிவன் கோயிலில் விளக்கு எரிவிக்க 15 கழஞ்சு பொன் தானமாக அளிக்கப்பட்டது. இதே போல 12 பணம் கி.பி.1336இல் ஈரோடு, குன்னத்தூரிலுள்ள குன்றபுரீஸ்வரர் கோயிலில் விளக்கேற்ற அளிக்கப்பட்டது. திருத்தணி, ராமகிருஷ்ண ராஜபேட்டையிலுள்ள விசாலேஸ்வரர் கோயிலில் குறிப்பாக அந்தி தீபம் ஏற்றும் செலவிற்காக நஞ்சை நிலமானது தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது போன்ற விவரங்கள் மற்ற கோயில்களிலும் கிடைக்கின்றன. விசேஷ சந்தி பூஜைகளையும் இச்சமூகத்தைச் சார்ந்த மக்கள் பல ஆலயங்களுக்குச் செய்துள்ளனர். கி.பி.1274ஆம் ஆண்டு திருநெல்வேலி, குற்றாலத்திலுள்ள குற்றாலநாத சுவாமி கோயிலில் காலாமுக்கள தோழன் சந்தியும், கி.பி.1354ஆம் ஆண்டு திருவடனையிலுள்ள ஒரு சிவன் கோயிலில் கொல்லாதேனித்தான் சந்தியும் செய்ய சில நிலங்களில் விளையும் நெல் தானமாகக் கொடுக்கப்பட்டது. ஒரு நந்தவனம் அமைக்க நிலமானது ஒரு கைக்கோள சேனாதிபதியிடமிருந்து வாங்கி அம்பாசமுத்திரத்திலுள்ள அம்மநாத சுவாமி கோயிலுக்கு அளிக்கப்பட்டது போன்ற இன்னும் பல செய்திகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

கோயில் திருவிழாக்களில் பங்கு

கோயில் திருவிழாக்களிலும் நம் குல மக்களின் பங்கு கணிசமான அளவிற்கு உள்ளது என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம். குலோத்துங்க சோழன் காலத்தில் மூன்று படைக் கைக்கோளர்கள் குடுமியாமலையிலிருக்கும் ஒரு கோயிலுக்கு ஒரு கிராமத்தையே தானமாக அளித்துள்ளனர். அதோடு தானமிட்ட கிராமத்தில் எல்லாரிடமிருந்தும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் படையின் கணக்காளரே வசூல் செய்து அக்கோயில் மார்கழி, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களில் திருவிழாக்கள் நடத்த வழிவகைகள் செய்துள்ளனர். இதே போல அளிக்கப்பட்ட ஒரு தானமானது குடுமியாமலையிலுள்ள சிகரநாத சுவாமி கோயில் திருவிழா நடத்த வழி கோலியது. புரட்டாசி மாத திருவிழாவிற்காக 44 பணம் தானமாக அளிக்கப்பட்ட விவரம். ஆத்தூர் முத்தேஸ்வரர் கோயிலில் கிடைக்கிறது.

திருக்கோவிலூரில் அமைந்துள்ள திருவிக்கிரமன் கோயிலை ஒட்டி வாழ்ந்த கைக்கோளர்கள் தறி வரிப்பணத்தை, கோயிலைப் பழுதுபார்க்க கி.பி.1445ஆம் ஆண்டு அரசர் ஆணையின் பேரில் அக்கோயிலாரிடமே செலுத்தியுள்ளனர். இதே போல் விழுப்புரத்திலுள்ள திருபுராந்தகேஸ்வரர் கோயிலைச் சுற்றி வாழ்ந்த கைக்கோளர் குலமக்கள் கோயிலின் செலவுக்காகத் தாங்கள் அரசருக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தைக் கோயிலுக்கே அளித்து வந்துள்ளனர். இச்செய்திகள் அந்தந்த கோயில் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

தஞ்சாவூர் ஆபத்சஹாயேஸ்வரர் கோயிலில் பணிபுரியும் பிராமணர்களுக்கு உதவிபுரியும் பொருட்டு அங்கு வசிக்கும் சில கைக்கோளர்கள் விளை நிலங்கள் சிலவற்றைத் தானமாக இப்பிராமண மக்களுக்கு அளித்தாக, சோழர் காலத்திய கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இந்நிலங்களின் மூலம் கிடைக்கும் அனைத்து லாபங்களும் அப்பிராமணர்களை அடைய எல்லா வழிவகைகளையும் செய்துள்ளனர்.

இவ்வாறு கோயில்களுக்குச் சிறப்பான வகையில் தொண்டு புரிந்த கைக்கோளர்களுக்குச் சில சலுகைகளும் மரியாதைகளும் அளிக்கப்பட்டன. கி.பி.1507ஆம் ஆண்டு அம்பாசமுத்திரத்தில் பூதளவீரராம பிள்ளையார் கோயிலைக் கட்டியதால் அக்கைகோளர்களுக்குப் பரம்பரையாக அக்கோயிலில் மாலை மரியாதையும் மற்றும் சில சலுகைகளும் அளிக்கப்பட்டன. மேலும் கி.பி.1532ஆம் ஆண்டு கண்ணன் என்னும் கைக்கோளர் சேலத்தில் கரிவரதராஜ பெருமாள் கோவிலில் புதியதாக தேர்த்திருவிழாவினைப் புகுத்தியதற்காக அவருக்கும் அவருடைய சந்ததியினருக்கும் ஒரு வீடும், ஒரு தறியும், சிறிது நிலமும் மற்றும் கோயிலில் சில மரியாதைகளும் அளிக்க அக்கோயில் நிர்வாகத்தினரால் முடிவு செய்யப்பட்டது. இதே போல் செங்கற்பட்டு குன்றத்தூரிலுள்ள திருநாகேஸ்வரர் கோயிலுக்குத் தானம் செய்த ஒரு கைக்கோளருக்கு விஜய நகர காலத்தில் பரிவட்ட மரியாதையினைக் கோயிலார் அளித்து, தானம் அளித்தோரைக் கௌரவித்தனர்.

கைக்கோளர்கள் கோயில் நிர்வாகத்திலும் தங்களைச் சோழர் காலம் முதற்கொண்டே ஈடுபடுத்திக் கொண்டனர். இருந்தாலும் பாண்டியர்களது காலத்தில் கி.பி.1573ஆம் ஆண்டு திருநெல்வேலி, சோழபுரத்திலுள்ள விக்கிரம பாண்டியேஸ்வரர் கோயிலுக்கு, ஒரு கைக்கோளர் நிர்வாகியாகிய நியமிக்கப்பட்டார் என்பதை ஒரு கற்சாசனம் கூறுகிறது.

இவ்வாறு நாட்டிற்கு நற்பணி ஆற்றிவந்த கைக்கோளர்களுக்கு மன்னரது ஆசி எப்போதும் இருந்து வந்தது. உதாரணமாக கி.பி.16ஆம் ஆண்டு செங்கற்பட்டு மானாமதியிலுள்ள திருக்காரீஸ்வரர் கோயில் நிர்வாகத்திலிருந்த கைக்கோளருக்கும் மற்றும் அவ்வூரில் வசிக்கும் சில வியாபாரிகளுக்கும் இடையே கோயில் நிர்வாகம் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டது. இதன் விளைவாக கைக்கோளர்கள் அக்கோயில் பொறுப்பு அனைத்தையும் விடுத்து அவ்வூரை விட்டே செல்ல ஆயத்தமாயினர். ஆனால் இவ்விஷயத்தில் மன்னர் உடனடியாகத் தலையிட்டு கைக்கோளர்களை ஊரை விட்டு வெளியேற வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதோடு வியாபாரிகள் இனி இக்கோயில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்றும் ஆணை பிறப்பித்துள்ளார். (விஜய நகர காலம்).

அக்காலத்தில் கைக்கோளர்கள் மட்டும் அல்லாது கைக்கோள முதலிகளும் இருந்துள்ளனர். இக்கைக்கோள முதலிகளைப் பற்றிய கல்வெட்டுகள் பெரும்பாலும் பாண்டிய மற்றும் விஜயநகரப் பேரரசு காலங்களைச் சார்ந்தவையாகவே காணப்படுகின்றன. முதலி என்பது 'தலைவர்' அல்லது பெரியோர் என்னும் பொருளைக் கொடுக்கக் கூடியதாகும். ஆக இதிலிருந்து கைக்கோளர்கள் அரசரின் கீழ் சிறு தலைவர்களாகவும் பணியாற்றி உள்ளனர் என்பது நன்கு புலனாகிறது. இக்கைக்கோள முதலிகள் பெரியோர்கள் ஆதலால் கோவில் நிர்வாகத்திலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

கைக்கோளர்கள் அக்காலத்திலேயே தங்கள் சமூகத்தில் ஒருவித ஒற்றுமையுடன் கூடிய சமூக அமைப்பின் கீழ் வாழ்ந்ததாகத் தெரிகிறது. சமூகத்தில் தங்களைச் சார்ந்த ஒருவரைத் தலைவராக ஏற்று அவர் கீழ் வாழ்ந்தனர். இத்தலைவர், கைக்கோளர்களின் முதல் குடிமகன் என அழைக்கப்பட்டார். அம்பாசமுத்திரம், மேலச்சேவலிலுள்ள ஆதித்ய வருணேஸ்வரர் கோயிலுக்கு அவ்வூரிலுள்ள கைக்கோளர்களின் முதல் குடிக் கணக்காளராக நியமிக்கப்பட்டதாக கி.பி.1506ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கூறுகிறது. கைக்கோளர்கள் பெரிதும் கோயிலை ஒட்டிய பகுதிகளிலேயே வாழ்ந்தனர். கோயிலுக்கு வேண்டிய பாதுகாப்பு மற்றும் துணிகளை இவர்களே அளித்து வந்தனர். மேலும் இவர்களுக்கெனத் தனியானதொரு வீதி மாடம்பாக்கத்தில் (செங்கல்பட்டு மாவட்டம்) இருந்ததற்கான சான்றுகள் இவ்வூரிலுள்ள தேனுபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டில் உள்ளது.

சமூகத்தில் கைக்கோளருக்கெனத் தனி மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்பட்டது. காஞ்சி மற்றும் விரிஞ்சிபுரத்தில் வசிக்கும் கைக்கோளர்கள் சங்கு மற்றும் பல்லக்கினை உபயோகிக்க அரசரால் அனுமதிக்கப்பட்டனர். அக்காலத்தில் சங்கினையும் பல்லக்கினையும் உபயோகிக்க அனுமதிக்கப்பட்டால், அது அவர்களுக்குச் சமூகத்தில் அளிக்கப்படும் மரியாதையாகவே கருதப்பட்டது. கி.பி.1485-86ஆம் ஆண்டு இதே மரியாதையானது வழுதிளம்பட்டு ராஜ்ய கைக்கோளருக்கும், கி.பி.1503-04இல் பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்துள்ள மூன்று ஊர்களிலுள்ள கைக்கோளர்களுக்கும், கி.பி.1552 இல் திருவாமாத்தூரிலுள்ள கைக்கோளருக்கும் அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வாறு பல்வேறு காலங்களில் சிறந்து விளங்கிய இக்கைக்கோளர்களின் சிறப்பு இன்றளவும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

பேச்சின் சிறப்பு

கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய் !
அதிகமாகப் பேசினால் அமைதியை இழப்பாய் !
வேகமாய் பேசினால் அர்த்தத்தை இழப்பாய் !
வெட்டியாகப் பேசினால் வேலையை இழப்பாய் !
ஆணவமாகப் பேசினால் அன்பை இழப்பாய் !
பொய்யாய் பேசினால் பேரை இழப்பாய் !
சிந்தித்து பேசினால் சிறப்பொடு இருப்பாய் !
சிரித்துப் பேசினால் அன்பொடு இருப்பாய் !

செங்குந்தர் - கொடி வரலாறு

நமது செங்குந்தர்களுக்கு உரிய கொடி வெள்ளை நிறத் துணியில் நடுவே குந்தப் படையும் அதன் வலப்புறம் சேவலும் இடப்புறம் புலியும் சின்னங்களாக அமைந்து பட்டொளி வீசிப் பறக்கக் காணலாம். கொடியின் இச்சின்னங்களும் நிறமும் நம் இயக்கத்தின் குறிக்கோள்களைத் தெற்றென விளக்குவன. அவற்றை நாம் ஒவ்வொருவரும் அறிந்து அக்கொடியை நம்முயிரைப் போல வணங்கிப் போற்றுதல் நமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

குந்தச் சின்னம்

குந்தம் என்பது ஈட்டி. அது முற்காலத்தில் நமது முந்தையோர்களான கயிலாயப் பரம்பரையில் வந்த வீரவாகு தேவர் உள்ளிட்ட நவவீரர்கள் கைகளில் திகழ்ந்து சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் முதலிய அசுரர்களை அழித்தும் பிற வேந்தர்களை வென்றும் முருகவேளின் அன்புக்குப் பாத்திரமான முசுகுந்தச் சோழனைச் சக்கரவர்த்தியாகுமாறு உலகெங்கும் வலம் வந்து எதிர்த்தவர்களையெல்லாம் அழித்தொழித்த வீரமும் நிறைந்த சிறப்பினையுடையது. உமையம்மையால் நவவீரர்களுக்கும் கொடுக்கப்பட்டது. எனவே செங்குந்தர் வீரவாகு தேவர் வழிவந்தோர் என்பதையும் கயிலாயப் பரம்பரையினர் என்பதையும் விளக்குவதற்காக இக்குந்தச் சின்னம் நம் கொடியில் நடுநாயகமாக விளங்குகின்றது.

சேவல் சின்னம்

சேவல் என்பது பறப்பனவற்றுள் ஆண்பாலைக் குறிக்கும் ஒருபொதுச் சொல். ஆனால் இங்கு நாம் கோழிச் சேவலைக் குறிப்பிடுகின்றோம். கந்தவேள் சூரபத்மனைக் கொல்வதற்காகத் தம் வேலாயுதத்தை அவன் மேல் எறிய அவன் அவ்வேலுக்கு அஞ்சியோடி கடலுக்குள் சென்று மாமரமாய் நிற்க, அவ்வேல் அம்மரத்தை இரண்டாகப் பிளந்தது. மரத்தின் ஒரு பகுதி கோழிச் சேவலாகவும் மறு பகுதி மயிலாகவும் மாறியது. சேவலைத் தம் கொடியிலும் மயிலைத் தம் வாகனமாகவும் அமைத்துக்கொண்டார். சேவல் முருகவேள் கொடியின் சின்னம். நாம் முருகவேளின் தம்பிமார். எனவே இச்சேவல் நமக்குரியதாயிற்று.

புலிச்சின்னம்

சூரபத்மனுக்கு உரியது புலிக்கொடி. முருகக் கடவுள் அவனை வென்றதும், தாம் அவனை வெல்வதற்குத் துணை செய்த வீரவாகு தேவருக்கு அச்சூரனின் புலிக்கொடியைப் பரிசாக அளித்தார். நாட்டில் அறத்திற்கு அழிவு நேர்கின்றபோது தெய்வம் தலையிட்டு அறத்தை நிலை நிறுத்தும். அதன்படி சூரபத்மன் முதலிய அசுரர்கள் ஆட்சியால் நாட்டில் அதர்மம் தலை தூக்கி நின்றபோது, முருகக் கடவுள் அவ்வதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்தினார். அத்தகைய அறச்செயலுக்குத் துணை நின்றவர்கள் வீரவாகு உள்ளிட்ட நவ வீரர்கள்.

மேலும் சோழ மன்னர்களுக்கும் புலிச்சின்னம் கொடிச்சின்னமாக விளங்கியிருந்தது. நமது முன்னோர்களாகிய நவ வீரர்கள் முசுகுந்தச் சோழ மன்னனுக்குப் படைத் துணைவர்களாகவும் உறவினர்களாகவும் விளங்கி, அம்மன்னனைச் சக்கரவர்த்தி எனும் நிலைக்கு உயர்த்தியவர்கள். முசுகுந்தனின் மகனும், வீரவாகு தேவரின் மகள் (சித்திரவல்லி) வயிற்றுப் பெயரனும் ஆகிய அங்கிவன்மனும், வீரவாகு தேவர்க்கு புட்பகந்தியிடத்துத் தோன்றிய மகன் அனகனும் முறையே கருவூரிலும், காஞ்சிபுரத்திலும் அரசு வீற்றிருந்து பேரரசு நடத்தியுள்ளனர்.

இவ்வாறு செங்குந்தர் மரபு, சோழ மரபு ஆகிய இரண்டிற்கும் புலிக்கொடி உரியதாய் இருந்தது. இதனை ஈட்டி எழுபது எனும் நூலில் ஒட்டக்கூத்தர்.

> "கலிக்குறும் படுவள வனுக்குங் காதுசூர்
> வலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
> பலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
> புலிக்கொடி மரபிரண் டினுக்கும் போந்த தால்" (பாட்டு எண்-37)

என்று சிறப்பித்துப் பாடுகிறார். எனவே புலிச்சின்னம் நாம் முருகவேளிடத்துப் பெற்ற பரிசுப் பொருள் அன்றியும் செங்குந்தர், சோழர் எனும் இரு மரபுக்கும் உரிய சின்னம். நாமும் முற்காலத்தில் அரசச் செல்வத்தைப் பெற்று இந்த அவனியை ஆண்டவர்கள். இக்குறிப்புகளையும் கொண்டே நாம் நமது கொடியில் புலிச்சின்னத்தையும் பொறித்துள்ளோம்.

வெண்மை நிறம்

"குந்தன்" என்றால் தூய்மை உடையவன் என்பது பொருள், தூய்மையைக் குறிக்கும் நிறம் வெண்மை, செங்குந்தர் கொடியின் நிறம் வெண்மை. கலைமகள் வெள்ளைக் கலையுடுத்து வெண்டாமரையில் வீற்றிருப்பவள் என்று கவிஞர்களால் பாராட்டப் பெறுகிறார்.

சிவபெருமான் வெண்ணீறு அணிந்த மேனியன். எனவே நாம் உடலில் தூய்மையும் உள்ளத்தில் தூய்மையும், ஆன்மாவில் தூய்மையும் கொண்டு விளங்க வேண்டும் என்பதை அறிவுறுத்தவே நமது கொடியை வெண்மை நிறத்தில் தேர்ந்தெடுத்துள்ளோம். இக்கொடியைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியதும் நம் கடமையாகும்.

> கங்கைக்கு மேற்பட்ட நதியில்லை,
> இமயத்திற்கு (கைலாயம்) மேற்பட்ட மலையில்லை,
> மாணிக்கத்திற்கு மேற்பட்ட மணியில்லை, அதுபோல
> பஞ்சாட்சரத்திற்கு (நமசிவாய) மேற்பட்ட மந்திரமில்லை.

செங்குந்தர் பிரபந்தத் திரட்டு

செங்குந்தர் பிரபந்தத் திரட்டு என்னும் இந்நூல் ஸ்ரீமத் காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. பண்டைக் காலத்தில் வீரத்தின் விளை நிலமாய்த் திகழ்ந்த செங்குந்த மரபினரது அறிவாற்றல், பெருமை, புகழ், வீரம் முதலியவற்றைச் சிறப்பித்துப் புலவர் பலரால் பாடப்பட்ட செய்யுள் திரட்டாகும். செங்குந்தர் குல வரலாறுகளாக வழங்கும் நூல்கள் பல உள்ளன என்பதும், அம்மரபின் முன்னோரது சரித்திரங்களும் பல என்பதும் இவற்றால் அறியப்படும். குன்றுதோராடும் குமரனாம் முருகக் கடவுளின் துணைவர்களான வீரவாகு முதலான நவ வீரர்களின் வழித்தோன்றலாகத் தங்களைப் பழங்காலம் முதற்கொண்டு வழங்கி வருவதையும், சோழ அரசர்கள் காலத்தே அவ்வரசர்களது வெற்றிகளுக்குக் காரணகர்த்தர்களான படை வீரர்களாய் அவரது அன்பிற்கும், அபிமானத்திற்கும் பாத்திரர்களாய் இருந்தமையும் இந்நூல்களில் பரக்கக் காணலாம்.

ஈட்டியெழுபது

செங்குந்தர் மரபைச் சிறப்பித்துப் பாட உடன்படாத ஒட்டக்கூத்தரைக் கொலை செய்ய ஆவூர்ச்செங்குந்தர் முயன்றனர். இதனையறிந்த கூத்தர் ஓராயிரத்தெண்மர் சிரங்களை அறுத்து ஒன்றாகக் குவித்துச் சிரச்சிங்காதனம் அமைப்பின், அதன்கண் இருந்து ஈட்டிப் படையைக் குறித்து ஒரு பிரபந்தம் பாடுவேன் என்று கூறினார். அதனைக் கேட்ட செங்குந்த மரபினர் அனைவரும் ஒருங்கு திரண்டு சென்று புலவரின் விருப்பத்தின்படியே தங்கள் தலைகளையரிந்து வைத்துச் சிரச் சிங்காதனமிட்டுத் தம் வீரத் திறத்தைக் காட்டி நின்றனர். அப்போது அச்சிரச்சிங்காதனத்தில் வீற்றிருந்து புலவர் பெருமான் செங்குந்தர் மரபினரது வீரம், பெருமைகளை எல்லாம் ஈட்டியெழுபது என்ற நூலில் பாடினார்.

எழுப்பெழுபது

சோழவேந்தன் முன் தங்களின் வீரத்தின் திறம் துலங்கும்படி சிங்காதனமிட்ட செங்குந்த வீரர்களது வெட்டுண்ட தலைகள் உயிர்பெற்றெழுந்து ஒட்டிக்கொள்ளுமாறு கலைமகள் முதலிய கடவுளரை வாழ்த்திப் பாடப்பட்டதாகும். இந்நூலைப் பாடியதும் அறுபட்ட தலைகள் உறையூரினின்றும் பறந்தோடி ஆங்காங்கே விழுந்து கிடந்த உடல்களோடு சேர்ந்து ஒட்டிக்கொண்டு உயிர்பெற்றன. இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் குன்றுதோராடும் குமரவடிவேலனின் வீறு செவ்வையாகக் கூறப்பட்டுள்ளது. எழுபது செய்யுள்கள் கொண்ட இந்நூலில் தற்போது பதின்மூன்று செய்யுள்களே கிடைக்கப் பெற்றுள்ளன. சிறப்புமிகு இந்நூலை இயற்றியவர் ஒட்டக்கூத்தராவார்.

களிப்பொருபது

இது சிரச்சிங்காதனமிட்ட செங்குந்த வீரர்களின் பெருமையையும், அவ்வீரர்களின் அறுபட்ட தலைகளை ஒட்டப் பாடிய ஒட்டக்கூத்தரது தெய்வீகச்சக்தியையும் சிறப்பித்து

அசரீரி, ஔவையார் முதலியோர் பாடியனவாம். இதில் கம்பர், புகழேந்தி, அம்பிகாபதி, சேரன், சோழன், பாண்டியன், அஞ்சனாட்சி, சைவாச்சாரியார் பெயர்களும் காணப்படுகின்றன. இந்நூல் பத்து செய்யுள்களையுடையது. தொகுத்தவர் குலோத்துங்கன் என்பர்.

திருக்கை வழுக்கம்

இந்நூல் செங்குந்த மரபினருள்ளே மேம்பட்டவர்களது கைவண்மைகளைச் சிறப்பித்துப் பாடப்பட்டதாகும். இது கலிவெண்பாவால் அமைந்த பிரபந்தமாகும். இது கம்பர் பாடிய திருக்கை வழக்கம் போன்றது. இது செங்குந்தரைப் பற்றியதாய் ஒவ்வொரு கண்ணியும் 'கை' என்ற சொல்லால் முடிவுறுவது. இது புகழேந்தியாரால் பாடப்பட்டது.

பிள்ளைத் தமிழ்

இந்நூல் செங்குந்த வீரர்களது பிள்ளைமைப் பருவங்களைச் சிறப்பித்துப் பாடியது. அவ்வீரரது வீரம், நியாயம், தியாகம் முதலிய சிறப்புகளைப் பலபடப் பாராட்டுவது. ஆண்பாற் பிள்ளைக் கவி பத்துப் பருவங்களை உடையது. வீரவாகு தேவர் முதலிய ஒன்பதின்மர், முருகக் கடவுள் ஆகிய இவர்கள் மரபில் வந்தவர் செங்குந்தர் என்னும் செய்தியைத் தெரிவிக்கின்றது. இதனை

“மயில்வாகனத்தோன் துணையாக வந்தோர் தாலோ தாலேலோ”

என்னும் அடியால் அறியலாம்.

“சங்குந்து வயல்மேவு செங்குந்த வளநாடர் சப்பாணி கொட்டியருளே”

எனக் கூறப்படுவதால் செங்குந்த நாடு என்று ஒரு நாடு இருந்தது என்பதும் செங்குந்தர் அந்நாட்டிற்குரிய சிற்றரசராயிருந்தனர் என்பதும் விளங்குகிறது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்நூல் இயற்றப்பட்டது என்பதனை இந்நூலின் இறுதியில் வரும் பாடலினால் அறியலாம். இந்நூலை இயற்றிய ஆசிரியர் ஞானப்பிரகாச முனிவர் ஆவார்.

கலித்துறை மாலை

இந்நூலில் செங்குந்த மரபினரின் சிறப்புகளும் வீரதீரங்களும் சொல்லப்படுகின்றது. ஈட்டியெழுபது முதலிய நூல்களை இம்மரபினர் பெற்ற வரலாறுகள் இதில் கூறப்படுகின்றன.

'தப்பில் புராணம் பரணி உலா பிள்ளைத் தண்டமிழ்முன்
செப்பும் பிரபந்தம் எண்ணில பெற்றவர் செங்குந்தரே'

என்னும் செய்யுளடிகள் இதனை விளக்கும். இதன் ஆசிரியர் நாகை முத்துக்குமார தேசிகர் ஆவார்.

தசாங்கம்

இது செங்குந்தர் மரபினர்க்குரிய தசாங்கங்களைக் கூறும். இதில் மலை, ஆறு, நாடு, நகர், மாலை, குதிரை, யானை, முரசு, கொடி, செங்கோல் ஆகிய பத்தும் கூறப்படும். இவற்றில் செங்கோல் ஒழிய மற்றைய ஒன்பதும் இவ்விரண்டாக கூறப்படும் சிறப்பினை

உடையது. விண்ணரசுக்கு ஒன்றும், மண்ணரசுக்கு ஒன்றுமாகப் பாடப்பெறும் இதனைச்

''செப்புத் தசாங்கம் இருவகைப் பெற்றவர் செங்குந்தரே'

என்ற செய்யுள்அடி விளக்கும். ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு பறவையை முன்னிலைப் படுத்திக் கூறும் சிறப்பினை உடையது. இதனை இயற்றியவர் ஸ்ரீ சத்யந்தர் என்பவர் ஆவார்.

ஊசல்

இது செங்குந்த குலத்தவரைப் பெரும்பாலும் மன்னராகக் கொண்டு பாடப்பட்ட செய்திகளை விளக்குகிறது. செங்குந்தர் உமாதேவியின் புத்திரர் என்றும் சோழ மண்டல முதலிகள் என்றும் கூறப்படுகிறது. இக்குலத்து வீரர்களைப் பற்றிப் பாடப்பட்ட ஊசல், வாழ்த்து, பெரிய கட்டியம், சின்னகட்டியம், மங்களம் என்ற செய்திகள் அடங்கப் பாடப்பட்ட செய்யுள் தொகுதியாகும்.

இந்நூல்களேயன்றித் ''திருவொற்றியூர்ச் செங்குந்த விநாயகர் மாலை'', ''செங்குந்த சிலாக்கியர் மாலை", 'செங்குந்தர் வேற்பதிகம்', 'செங்குந்தர் மரபு விளக்கம்', 'சேனைத் தலைவர் மரபு விளக்கச் சூறாவளி', 'செங்குந்த வேலவர் திருக்கை வழக்கத்தந்தாதி', செங்குந்த குலமாட்சி என்னும் பிரபந்தங்களும் செங்குந்தர் பிரபந்தத் திரட்டில் அடங்கியுள்ளன. இவைகள் முன்னர்க் கூறிய நூல்களில் உள்ள செங்குந்த மரபினரைப் பற்றிய செய்திகளை விரித்தும் தொகுத்தும் கூறுகின்றன.

நமச்சிவாய மந்திர மகிமை

சிவாயமென்ற அட்சரம் சிவனிருக்கும் அட்சரம்
உபாயமென்று நம்புதற்கு உண்மையான அட்சரம்
கபாடமற்ற வாசலைக் கடந்துபோகும் வாயுவை
உபாயமிட்டு அழைக்குமே சிவாயஅஞ் செழுத்துமே!

ஓம் நமச்சிவாயமே யுணர்ந்து மெய்யுணர்ந்தபின்
ஓம் நமச்சிவாயமே யுணர்ந்து மெய்தெளிந்தபின்
ஓம் நமச்சிவாயமே யுணர்ந்து மெய்யுணர்ந்தபின்
ஓம் நமச்சிவாயமே யுட்கலந்து நிற்குமே!

சிவாய மஞ்செழுத்திலே தெளிந்து தேவராகலாம்
சிவாய மஞ்செழுத்திலே தெளிந்து வானமாளலாம்
சிவாய மஞ்செழுத்துளே தெளிந்து கொண்டவான்பொருள்
சிவாய மஞ்செழுத்துளே தெளிந்து கொள்ளுமுண்மையே!

– சிவ வாக்கியர்

கெடுவதற்கு இவ்வளவு விஷயங்களா?
நமது தமிழ் மூதாட்டி ஔவையார் அழகாக சொல்லி இருப்பதை அறிந்து கொள்வோம்

01. பார்க்காத பயிரும் கெடும்.
02. பாசத்தினால் பிள்ளை கெடும்.
03. கேளாத கடனும் கெடும்.
04. கேட்கும்போது உறவு கெடும்.
05. தேடாத செல்வம் கெடும்.
06. தெகிட்டினால் விருந்து கெடும்.
07. ஓதாத கல்வி கெடும்.
08. ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்.
09. சேராத உறவும் கெடும்.
10. சிற்றின்பன் பெயரும் கெடும்.
11. நாடாத நட்பும் கெடும்.
12. நயமில்லா சொல்லும் கெடும்.
13. கண்டிக்காத பிள்ளை கெடும்.
14. கடன்பட்டால் வாழ்வு கெடும்.
15. பிரிவால் இன்பம் கெடும்.
16. பணத்தால் அமைதி கெடும்.
17. சினமிகுந்தால் அறமும் கெடும்.
18. சிந்திக்காத செயலும் கெடும்.
19. சோம்பினால் வளர்ச்சி கெடும்.
20. சுயமில்லா வேலை கெடும்.
21. மோகித்தால் முறைமை கெடும்.
22. முறையற்ற உறவும் கெடும்.
23. அச்சத்தால் வீரம் கெடும்.
24. அறியாமையால் முடிவு கெடும்.
25. உழுவாத நிலமும் கெடும்.
26. உழைக்காத உடலும் கெடும்.
27. இறைக்காத கிணறும் கெடும்.
28. இயற்கையை அழிக்கும் நாடும் கெடும்.
29. இல்லாளில்லா வம்சம் கெடும்.
30. இரக்கமில்லா மனிதம் கெடும்.
31. தோகையினால் துறவு கெடும்.
32. துணையில்லா வாழ்வு கெடும்.
33. ஓய்வில்லா முதுமை கெடும்.
34. ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்.
35. அளவில்லா ஆசை கெடும்.
36. அச்சப்படும் கோழை கெடும்.
37. இலக்கில்லா பயணம் கெடும்.
38. இச்சையினால் உள்ளம் கெடும்.
39. உண்மையில்லா காதல் கெடும்.
40. உணர்வில்லாத இனமும் கெடும்.
41. செல்வம் போனால் சிறப்பு கெடும்.
42. சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்.
43. தூண்டாத திரியும் கெடும்.
44. தூற்றிப்பேசும் உரையும் கெடும்.
45. காய்க்காத மரமும் கெடும்.
46. காடழிந்தால் மழையும் கெடும்.
47. குறி பிறழ்ந்தால் வேட்டை கெடும்.
48. குற்றம் பார்த்தால் சுற்றமும் கெடும்.
49. வசிக்காத வீடும் கெடும்.
50. வறுமை வந்தால் எல்லாம் கெடும்.
51. குளிக்காத மேனி கெடும்.
52. குளிர்ந்து போனால் உணவு கெடும்.
53. பொய்யான அழகும் கெடும்.
54. பொய்யுரைத்தால் புகழும் கெடும்.
55. துடிப்பில்லா இளமை கெடும்.
56. துவண்டிட்டால் வெற்றி கெடும்.
57. தூங்காத இரவு கெடும்.
58. தூங்கினால் பகலும் கெடும்.
59. கவனமில்லா செயலும் கெடும்.
60. கருத்தில்லா எழுத்தும் கெடும்.

இந்த 60ஐயும் அறிந்து கொண்டு, நமது வாழ்க்கையைக் காப்போம்.

அறுபத்து மூவருள் பதின்மர்

உலகைக் காக்கும் முழு முதற்கடவுள் சிவபெருமான் உறையும் கோயில்களில் வரிசையாக அறுபத்து மூன்று நாயன்மார்கள் நின்றுள்ள சந்நிதியை நாம் காணலாம். திருமயிலாப்பூரில் அறுபத்து மூவர் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருவதையும் நாம் அறிவோம். இந்த அறுபத்து மூன்று நாயன்மார்களில் பத்து நாயன்மார்கள் நம் செங்குந்த மரபைச் சார்ந்தவர்கள் என்பது வியப்புக்குரிய ஒன்று. ஆனால் அது முற்றிலும் உண்மை. புகழேந்திப் புலவர் வேளாண் மரபினைச் சார்ந்தவராயினும் செங்குந்த மரபினரைப் பற்றிச் செய்துள்ள திருக்கை வழக்கம் என்னும் நூலில் இப்பதின்மரைப் பற்றிக் குறித்துள்ளார். இதுபோலவே கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் வேளாண் மரபினரைப் புகழ்ந்து பாடிய திருக்கை வழக்கத்தில் செங்குந்தர் எண்மரைக் குறித்துள்ளார். இவ்விருவரும் பாடிய பிரபந்தத்தில் குற்றம் கற்பிப்பதற்கு எவராலாகும்?

பதின்மர் துதி

மலர் வீழ்த்தயானைகரந் துணித்தோர் வேதமந்திர
மாப்பகர்ந்தோர் நீற்றுண்மை கொண்டோர்
வலமை பெறுமாரூரர் முன்படர்ந்தோர் வாவியினாற்
கண் பெற்றோர் மாதேவன்றா
ணிலவுமுடி யெனப் பூண்டோ ராதிரை கணீனிதிய
மளிப்போர் புற்றீப மெரிப்போர்பாப்
பலமூவேந்தர்க்குரைப் போர முதளிப்போர் குந்தப்படைக்
குலத்திலவதரித்த பதின்மரையும் பணிவாம் – புகழேந்தி.

<u>இப்பாடலுக்கு அதில் கண்டுள்ள சொற்றொடர்கள் வாரியாக விக்கம்:</u>

மலர் வீழ்த்தயானைகரந் துணித்தோர்

சிவகாமியாண்டார் கொண்டுவந்த பள்ளித் தாமத்தைப் (கோயிலில் சாற்றும் மாலை) பறித்துச் சிதறிய யானையைத் தடிந்த (வெட்டிய) எறிபத்த நாயனார்.

வேதமந்திர மாப்பகர்ந்தோர்

வேத தாற்பரியங்கள் (கருத்துகள், நோக்கம்) அனைத்தையும் மூவாயிரம் திருமந்திரமாகத் திருவாய் மலர்ந்தருளிய திருமூல நாயனார்

நீற்றுண்மை கொண்டோர்

திருவெண்ணீற்றின் உண்மையைக் கடைப்பிடியாகக் கொண்டிருந்த மெய்ப்பொருள் நாயனார்.

வலமை பெறுமாரூரர் முன்படர்ந்தோர்

ஆளுடைய நம்பிகள் திருக்கயிலைக்கு எழுந்தருளுவது உணர்ந்து யோகத்தால் அவரைத் தியானித்துக் கொண்டு அவர்க்கு முன் சென்றருளிய பெருமிழலைக் குறும்பு நாயனார்.

வாவியினாற் கண் பெற்றோர்

சமணர்களுடன் வாதிட்டுக் குளந்தோண்டிக் கண்பெற்றுக் கொண்ட தண்டியடிகள் நாயனார்.

மாதேவன்றா ணிலவுமுடி யெனப் பூண்டோர்

சிவபெருமான் திருவடி சூட்டப் பெற்றமையையே முடியாகக் கொண்டு உலகாண்ட கூற்றுவ நாயனார்.

ஆதிரைக் கணீனிதிய மளிப்போர்

பிரதி திருவாதிரை நட்சத்திரத்தினத்தன்றும் சிவனடியார்கட்குப் பொருளளித்து வந்த நரசிங்க முனையரைய நாயனார்.

புற்றீப மெறிப்போர் (புல் + தீபம் = புற்றீபம்)

கணம்புல்லெரித்து சிதை நீட்டி முத்தி பெற்ற கணம் புல்லர் நாயனார்.

பல மூவேந்தர்க்குரைப்போர்

தமிழில் கோவை பாடி மூவேந்தர்க்கும் பொருளுணர்த்தி வந்த காரியர் நாயனார்.

அமுதளிப்போர்

சிவனடியார்க்கு அமுதளித்துவந்த இடங்கழி நாயனார்.

ஆக சிவனடியார்களான இப்பதின்மரும் செங்குந்தர் குலத்தில் தோன்றியவர்கள் ஆவர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இந்த பத்து நாயன்மார்கள் செங்குந்தர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது நாமெல்லாம் பெருமை படக்கூடிய ஒன்று. நாயன்மார்களைப் போற்றித் துதிப்போம்.

அணிகலன்கள்

கண்ணுக்கு அணிகலன்	–	கண்ணோட்டம் (கருணை)
காதுக்கு அணிகலன்	–	நல்ல கேள்வி
நாவிற்கு அணிகலன்	–	உண்மை
கரத்திற்கு அணிகலன்	–	தானதருமம்
மனத்திற்கு அணிகலன்	–	தியானம்

சென்னைப் பெருநகர் செங்குந்தர்
சங்கத்தின் பொன்விழா ஆண்டு
அதன் பணி மேலும் தொடர வேண்டும்
பல நூறு ஆண்டுகள் நீண்டு

பொன் விழா வாழ்த்துகள்



GKR MAHAL A/c

Survey No.92/2D, Thiruvallur High Road,

Thirumazhisai - 600 124.

Near Sundaram Govt. H.S. School & Elankaliamman Koil

9171002999

T.G. KANAGASABAI


TT
SPORTS ACADEMY
CERTIFIED EXPERTISE
THE RIGHT PLATFORM FOR YOUNG PLAYERS
BADMINTON
SWIMMING POOL
ZUMBA
YOGA
ARCHERY
KICK BOXING
KARATE
JOIN NOW
WHAT WE OFFER:
SEPARATE BATCHES FOR:
BEGINNERS > INTERMEDIATE > ADVANCED
SPECIAL COACHING FOR EVERY STUDENT.
FLEXIBLE TIMINGS.
CONTACT US
7305011619 | 8072046626
NO.26, 7TH STREET, RKV AVENUE, OLD PALLAVARAM, CHENNAI
WWW.TTSPORTSACADEMY.COM



GURU
TOP BRAND
LUNGIES
THE GURU LUNGI COMPANY
TOP
BRAND
SINGAPORE. PALICAT
MADE IN INDIA
TRADE MARK
REGD No 16534
লাটু মার্কা
94, RABINDRA SARANI.CAL
গুরু
گرو
THE GURU LUNGI COMPANY
Export Quality
THE GURU LUNGI COMPANY
HEAD OFFICE
76/38, NMM Street, Pichanoor (P.O.),
GUDIYATTAM - 632 602.
04171 - 224734, 221015
94430 99674, 94424 12368
BRANCH OFFICE
132, Coral Merchant Street,
Mannady, CHENNAI - 600 001.
044 - 25230372, 25272284
99943 40461
KOLKATA OFFICE
94, Rabindrasarani (PO),
Chittaranjan Avenue, KOLKATA - 700 073.
033 - 22354032, 22686008
94336 30852 63839 64577
E-mail : gurulungi6@gmail.com
GURU
BRAND
Handloom Lungies
THE GURU LUNGI CO
TOP BRAND
LUX
BRAND
Handloom Lungies
THE GURU LUNGI CO.,
JOKER
Madina Brand
EED
BRAND

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின்

50வது ஆண்டு பொன்விழா

இனிய நல்வாழ்த்துகள்

Builders & Promoters



கல்வி வள்ளல்

P.T. ராஜன்

மாநில செயற்குழு உறுப்பினர், திட்டக்குடி – கடலூர் மாவட்டம்

ஸ்ரீ நாகமுத்து மணி முனி துணை
ஸ்ரீ கிருஷ்ணமாரியம்மன் துணை

வாழ்க வையகம்!



வாழ்க வளமுடன்!!

நாள்: 28.04.2022
இடம்: சென்னை - 33.

ஆயிரம் பிறைக்கு மேல் கண்ட அற்புதர் ஆறுமுகம்

சீர்மிகு தீநகர் அடுத்த மேற்கு மாம்பலம், பெருமைமிகு கிருஷ்ணசாமி, செங்குந்தர் ருக்குமணி அம்மாள் ஈன்றெடுத்த நாலாவது மகன் ஆறுமுகம், சேக்கிழார் புகழ் குன்றத்தூர் சிவலிங்க செங்குந்தர் பட்டம்மாள் செல்வ மகளாம் சகுந்தலாவை இல்லத்தரசியாக்கி இனிதே வாழ்ந்துவந்தீர்!...



அன்புக்கு	இலக்கணமாக	வாழ்பவர்	நீர்
ஆசைக்கு	அடிபணியாமல்	வாழ்பவர்	நீர்
இறைபணியிலும்	முத்திரை	பதித்தீர்	இயற்கைக்கும்
ஈடு	இணையற்ற	சேவை	செய்தீர்
உங்களிடம்	கற்பதற்கு	நிறைய	உண்டு
ஊருக்கு	உழைப்பதே	உங்கள்	லட்சியம்
எல்லாம்	நன்மைக்கே	என்பதுங்கள்	மந்திரம்
ஏமாற்ற	தெரியாது	நம்பி	ஏமாந்ததுண்டு
ஐந்து	தலைமுறைக்கும்	உதவி	செய்தவர்நீர்
ஒப்பில்லா	உடற்பயிற்சி	மனவளக்கலை	கற்றீர்
ஓயாமல்	சேவகம்	செய்வதில்	இன்பம்கண்டீர்
ஔவியம்	என்றென்றும்	உங்களுக்கு	தேவையில்லை
அஃறினையையும்	அறவனைக்கும்	அன்பர்	பண்பாளர்.

இல்லறத்தை நல்லறமாக நடத்தி சகுந்தலாவுடன் இணைந்து மகன்: சந்திரசேகரையும், மகள்: லோகேஸ்வரியையும் பெற்றீர் அவர்கள் நல்வாழ்வுக்கு நாளும் உழைத்தீர்...

கார் மெக்கானிக்காக வாழ்க்கையை துவக்கி
வாழ்க்கையில் பல படிகளை கடந்து வந்தீர்.
கடைசியில் காசாளராக கரம் சிவந்த நாட்கள் பல
படிப்படியாக உயர்ந்த நீங்கள் வியர்வை சிந்தியுள்ளீர்
ஒருநாளும் யாரையும் கண்ணீர் சிந்தவிட்டதில்லை



உங்கள் மணிமகுடத்தில்,வைரமும், வைடூரியமும்,
வேதாந்திரியம் கற்பதற்கு முன்பே சகிப்புத் தன்மை கற்றவர்
தமிழ்ப்பற்றும் நகைச்சுவை உணர்வும் உங்கள் இரு கண்கள்
இனிப்பு கூழ் செய்து எங்களை திந்திக்க வைத்தீர்!
திருமண பத்திரிக்கைஎழுதுவதில் வல்லவர் நீங்கள்
எங்களில் பலரின் வரவேற்பறைகளை அலங்கரிக்கும்
நீங்கள் எழுதித்தந்த திருமணவாழ்த்தை கண்டு மகிழ்கிறோம்...
திருமண பொருத்தம் பார்த்து பலரை திருப்தி செய்துள்ளீர்!
யாமறிந்தவரை உங்களை போல் பன்முக பண்பாளர் யாருமுண்டோ?

நீவீர் வாழ்க பல்லாண்டு! வாழ்க வளமுடன்!!

அருள்மிகு கிருஷ்ணமாரியம்மன், காஞ்சிவாயல் ஸ்ரீ நாகமுத்துமணி அம்மன் அருளாசிகளால் உடல் நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன்!...

மருமகன்	மகள்	மகன்	மருமகள்
T.K.சிவக்குமார் -	S.லோகேஸ்வரி &	A.சந்திரசேகர் -	C.ஸ்ரீவித்யா

பேரக்குழந்தைகள் S.ஜனனி, S.ராகேஷ், C.லக்க்ஷய், C.S.ரசிகா





செய்யாறு குறிஞ்சி குகன் மேட்ரிமோனி

(செய்யாறு வட்டச் செங்குந்தர் நலவாழ்வு சங்கத்தால் இயக்கப்படுகிறது)

(செங்குந்தர் திருமண தகவல் மையம்)

குறிஞ்சி குகன் நிலையம்

15/2, கோபால் தெரு, கிருபானந்தவாரியார் நகர்,
ரேணு மஹால் அருகில், செய்யாறு – 604 407. தி.மலை மாவட்டம்.
மேலும் தொடர்புக்கு: **04182 - 222784, 89739 32751, 94871 07254**

www.cheyyarkurinjikuganmatrimony.com

E-mail : sengunthar smanamaalai@gmail.com

அன்புள்ள சொந்தங்களே,

தங்கள் வீட்டில் திருமணத்திற்குக் காத்திருக்கும் வரனின் முழு ஜாதக விபரத்துடன் (Bio Data) + புகைப்படத்தை (Post Card Size) இணைத்து நேரில் (அல்லது) ஆன்லைனில் (Online) பதிவு செய்யுங்கள். பொருத்தமான வரன் உள்ளது. வரனின் திருமணம் முடியும் வரை பதிவு நீடிக்கும்.

திருமணம் நடந்து முடிந்த உடன் நீக்க தகவல் தெரிவிக்கவும்.

சேவைக் கட்டணம்: ரூ. 1000/- மட்டுமே!

CHEYYAR TALUK SENGUNTHAR WELFARE SOCIETY payable - CHEYYAR என்ற பெயருக்கு DD (or) Postal Money Order (or) Indian Overseas Bank (IOB), Cheyyar Branch, A/c No. 189101000007819 IFSC CODE: IOBA0001891 NEFT/IMPS Banking ஏதாவது ஒன்றிற்கு சேவை கட்டணம் அனுப்பலாம்.

வரன் பார்க்க வாங்க:

பகல் 10:00 - 1:00 மாலை 4:00 - 7:00 மணி வரை

விடுமுறை: பிரதி சனிக்கிழமை மற்றும் நமது பண்டிகை நாட்கள்.


With best compliments
from
T.S.G.
GROUP
OF FIRMS
ANDAMAN & NICOBAR ISLANDS
80



S. Sundaram
Partner
+91-98410 71715

VSK

V.S.K. Exports

Mfrs. & Exporters of Ready Made Garments, Fabric & Lungies

109/140, Coral Merchant Street,
2nd Floor, Mannady, Chennai - 600 001.
Cell : 89398 17151
E-mail : vskexporters2006@yahoo.co.in



with

Best Compliments

from

Shola Gardens

K.Rajasekaran

Kanuvatty Estate, Konavakarai

Kothagiri



சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம்

தோற்றம் - வளர்ச்சி

D. ஆறுமுகம் செங்குந்தர் - தலைவர், சென்னைப் பெருநகர் மகாஜன சங்கம்

தோற்றம்:

நம் சமுதாய முன்னேற்றத்தை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்டதே சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம். இச்சங்கம் 26.03.1972 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் திருமயிலை வெள்ளீஸ்வரன் திருக்கோயில் திருமண மண்டபத்தில், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர் திரு. தி.அ.சண்முக செங்குந்தர் தலைமையில் சமுதாயப் பிரமுகர்களின் கூட்டம் கூட்டப்பட்டது. அன்று "**சென்னை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்**" என்ற அமைப்பை ஏற்படுத்துவது என்றும் சென்னையைச் சுற்றியுள்ள பதினெட்டு கிராமங்களை அதில் இணைத்துக்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டு அன்றே சென்னை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

முதல் நிர்வாகிகள்:

சாதாரண உறுப்பினர் ஆண்டு சந்தா ரூ.1, ஆயுள் சந்தா ரூ.25 என தீர்மானிக்கப்பட்டது. அன்றே உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். 20 ஆயுள் உறுப்பினர்களும் சேர்ந்தனர். அக்கூட்டத்தில் திரு. P.S.பாலசுப்பிரமணிய செங்குந்தர் தலைவராகவும், திரு. M.K.பாலசுந்தர செங்குந்தர் மற்றும் V.N.ஆறுமுக செங்குந்தர் துணைத்தலைவர்களாகவும், திரு.சரவண பழனிவேலு செங்குந்தர். T.V.கந்தசாமி செங்குந்தர் ஆகியோர் செயலாளர்களாகவும், திரு. A.B.தண்டபாணி செங்குந்தர் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இடவசதி சட்டதிட்டங்கள் உருவாக்கம்:

சங்கத்திற்குத் தனி இடம் ஏற்படுத்தும் வரை தலைவர் திரு. P.S.பாலசுப்பிரமணிய செங்குந்தர் அவர்களின் இல்லத்திலேயே (எண்.10,T.S.V. கோயில் தெரு, மயிலாப்பூர்) அலுவலகம் இயங்கிவரத் தீர்மானிக்கப்பட்டது. பின்பு செயற்குழு உறுப்பினர்களால் சங்கத்தின் சட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. 07.07.1974 அன்று சைதாப்பேட்டை திருக்காரணீஸ்வரர் திருக்கோயில் மண்டபத்தில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் துணைத் தலைவர் திரு. C.நடராஜ செங்குந்தர், B.A., B.L., அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அச்சட்ட திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலில் திரு. P.S.பாலசுப்பிரமணிய செங்குந்தர் தலைவராகவும், M.K.பாலசுந்தர செங்குந்தர், திரு. V.N.ஆறுமுக செங்குந்தர் திரு. S.D.பொன்னுசாமி செங்குந்தர், திரு. S.V.இராஜபாதர் செங்குந்தர், திரு.தர்மலிங்கம் செங்குந்தர் ஆகியோர்

துணைத் தலைவர்களாகவும், பொதுச்செயலாளராக திரு.சரவண பழனிவேலு அவர்களும், செயலாளராக திரு. M.வேதாச்சலம் செங்குந்தர் அவர்களும், பொருளாளராக திரு. A.B.தண்டபாணி செங்குந்தர் அவர்களும் மற்றும் ஒன்பது செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு மாநில செயற்குழு உறுப்பினர்களாக ஐந்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டனர்.

செயல்பாடுகள்:

13.06.1976 அன்று சென்னை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் துணைத்தலைவர் திரு. S.D.பொன்னுசாமி செங்குந்தர் அவர்கள் இல்லத்திலேயே (17, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15) சங்க அலுவலகம் பெயர்ப் பலகையுடன் திறக்கப்பட்டது. அன்று திரு. M.P.புனிதவேலு செங்குந்தர் முதன் முதலாக ரூ.501/- அளித்து கல்வி நிதியைத் தொடக்கி வைத்தார். பலர் ரூ.250 கல்வி நிதியாக அளித்தனர். தொடர்ந்து உறுப்பினர்கள், ஆயுள் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். கல்வி நிதியும் வசூலிக்கப்பட்டது.

13வது மாநில மாநாடு ஈரோட்டில் 26.12.1976இல் நடைபெற இருந்தது. அதற்கு முன்பாக 12.12.1976 அன்று சென்னை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் சென்னையில் பெரிய அளவில் ஒரு **கருத்தரங்கம்** ஏற்பாடு செய்யப்பட்டு, பல மாவட்டங்களிலிருந்தும் நம் சமுதாயப் பேச்சாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.

கருத்தரங்கு வெகு சிறப்பாக நடந்தேறியது. அதனையொட்டி **கருத்தரங்கு மலர்** ஒன்றும் வெளியிடப்பட்டது. இதனால் சங்கத்தின் செயல்பாடுகள் பிற மாவட்டங்களுக்கும் தெரிய வந்தது. 1976 டிசம்பர் 25, 26 தேதிகளில் ஈரோட்டில் நடைபெற்ற மாநாட்டில் சென்னை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் சிறப்பாகச் செயல்படுவதைப் பாராட்டினர். சங்கத்தின் செயல்திறனை அறிந்த தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்திலிருந்து அனுப்பப்பட்ட மாநில செயற்குழு உறுப்பினர் திரு.தி.ரா.செல்வராஜன் செங்குந்தர் அவர்களை தலைமைச் சங்கச் செயலாளர்களுள் ஒருவராக நியமித்தனர்.

சங்கப் பெயர் மாற்றம்:

சென்னை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தோடு இணைந்து செயல்பட்டு வந்த திருமழிசை, திருநாகேஸ்வரம், மேப்பூர், அனகாபுத்தூர் போன்ற கிராமங்கள் செங்கை மாவட்டத்தில் இருந்தமையால் அக்கிராமங்களின் விருப்பத்திற்கிணங்க 08.02.1977 அன்றுமுதல் **சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்** எனப் பெயர் மாற்றப்பட்டது. 21.07.1978 அன்று சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக இருந்த திரு.க.முருகேச செங்குந்தர் அவர்கள் முயற்சியால் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

கல்வி உதவிகள்:

10ஆம் வகுப்பு, +2 தேர்வில் 60-க்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கப் பரிசும், முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு ரொக்கப் பரிசும், ஏழை மாணவர்களுக்கு ரூ.15 உபகாரத் தொகையும் அளிப்பதென 18.06.1978 அன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. இத்தொகை காலத்திற்கு ஏற்றாற்போலவும், இருக்கும் பொருளாதார நிலைக்கு ஏற்பவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இன்று +1, +2 பயிலும் மாணவர்களுக்கு ரூ.1000 ஊக்கத்தொகையும், B.E. பயிலும் மாணவர்களுக்கு ரூ.5000 உதவித்தொகையும், B.Sc., B.Com. பயிலும் மாணவர்களுக்கு ரூ.3000 உதவித்தொகையும் ஆக கிட்டத்தட்ட ரூ.3,00,000-க்குமேல் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்தும் நன்கொடை பெற்றே வழங்கப்படுகிறது.

முன்னேற்றச் செயல்பாடுகள்:

சங்கத்தின் 7ஆம் ஆண்டுவிழா 26.12.1979 அன்று சைதாப்பேட்டை அருள்மிகு சொர்ணாம்பிகை காரணீஸ்வரர் திருமண மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதோடு திருநாகேஸ்வரம் திரு. P.கிருஷ்ணமூர்த்தி செங்குந்தர் அவர்களின் மணிவிழாவும் சேர்த்துக் கொண்டாடப்பட்டது. அன்று இரண்டாம் முறையாகச் சங்கத்தின் சார்பில் **7ஆம் ஆண்டுவிழா மலர்** வெளியிடப்பட்டது. சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தில்தான் முதன்முதலில் நம் சமூகத்தைச் சேர்ந்த உயர்அதிகாரிகளை அழைத்து ஆண்டுவிழாக்களில் கலந்துகொள்ளச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றால் அது மிகையில்லை.

1984 பிப்ரவரியில் நடந்த தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தேர்தலில் இச்சங்கத்தைச் சேர்ந்த மாநில செயற்குழு உறுப்பினர் திரு.தி.ரா.செல்வராஜன் அவர்கள் தலைமைக் கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வந்தார். இவரே செங்குந்த மித்திரன் இதழ் ஆசிரியராகவும், சபாபதி மெட்ரிக் பள்ளியின் தாளாளராகவும் பணியாற்றி அனைவரின் பாராட்டையும் பெற்றார். 1987-இல் சென்னை-செங்கை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் 15ஆம் ஆண்டு நிறைவு விழாவின்போது, **15ஆம் ஆண்டு நிறைவு விழா மலர்** வெளியிடப்பட்டது. ஒவ்வொரு செங்குந்தரும் போற்றிப் பாதுகாக்கவேண்டிய பொக்கிஷமாக, போற்றத்தக்கதாக அம்மலர் இருந்தது. இதற்கு இச்சங்கத்தின் முன்னாள் பொருளாளர் திரு. A.V.இராமநாதன் செங்குந்தர் அவர்களின் தனிப்பட்ட முயற்சியே காரணம்.

சங்கப் பெயர் மாற்றம்:

1987 அன்று சைதாப்பேட்டையில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் - நம் சங்கத்தின் பெயரில் இரண்டு மாவட்டங்களின் பெயர்கள் இருப்பதாலும், செங்கை

மாவட்டத்தில் உள்ள ஊர்கள் சென்னையை ஒட்டியே உள்ளதாலும் இச்சங்கத்தின் பெயர் "**சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம்**" எனப் பெயர் மாற்றம் செய்வதென தீர்மானிக்கப்பட்டது. பின்னர் தலைவரின் விலகலைத் தொடர்ந்து 16.07.1989 அன்று திரு. S.D.பொன்னுசாமி செங்குந்தர் அவர்கள் தலைவராகவும், திரு.பொ.க.சாமிநாதன் அவர்கள் செயலாளராகவும், திரு. A.V. இராமநாதன் செங்குந்தர் அவர்கள் பொருளாளராகவும் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டில் சங்கத்தின் பங்கு:

20.08.1989 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் 15வது மாநில மாநாடு சென்னையில் நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. 01.10.1989 அன்று நடைபெற்ற 17வது ஆண்டுவிழா அன்று சைதாப்பேட்டை, 54, ஜோன்ஸ் ரோட்டில் 15வது மாநில மாநாட்டு அலுவலகத் திறப்பு விழாவும் நடைபெற்றது. பின் 10.12.1989 அன்று நடைபெற்ற சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் J.சுத்தானந்தம் அவர்கள் தலைமை வகித்தார். அதுபோது 1990ஆம் ஆண்டு மே மாதம் 12, 13 ஆகிய தேதிகளில் சென்னையில் மாநில மாநாட்டை நடத்துவது என ஒரு மனமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறிப்பிட்ட நாளில் சென்னை, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் 15வது நெசவாளர், சமூக, மகளிர், இளைஞர் மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு, சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம் முழுமையாக ஈடுபட்டு அனைத்து செயல்பாடுகளிலும் முன்னின்று மாநாடு வெற்றி பெற உறுதுணையாக இருந்தது.

நம் இனத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று கோரி 15.11.1990 அன்று மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உண்ணாவிரதப் போராட்டம் செய்வதென்று தலைமைச் சங்கத்தின் முடிவை ஆதரித்து, சென்னை மாவட்டத்தின் சார்பில் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம், சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்திற்கு அருகில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தக் கோரி, மாநிலத் தலைவர் திருமிகு.J.சுத்தானந்தம் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

27.11.1994 அன்று நடைபெற்ற கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. அதில் தலைவராக திரு. இராஜாபாதர் செங்குந்தர் அவர்களும், திரு. D.நாகப்பன் செங்குந்தர் செயலாளராகவும், திரு. M.B.பாண்டுரங்கம் செங்குந்தர் அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1995இல் திரு. D.நாகப்பன் செங்குந்தர் அவர்களின் விலகலையடுத்து 30.04.1995 முதல் திரு.சரவண பழனிவேலு அவர்கள் செயலாளர் பொறுப்பினை ஏற்றார்.

நிரந்தர அலுவலகக் கட்டடம்:

சைதாப்பேட்டை திரு.A.நடராஜ செங்குந்தர், சைதாப்பேட்டை, சுப்புராய முதலித் தெருவில், எண்.75 இல் உள்ள 20X20 = 400 சதுர அடி கொண்ட வீட்டை, சங்கத்திற்குத் தருவதாகக் கூற, 16.11.1990 அன்றைய செயற்குழுக் கூட்ட தீர்மானத்தின்படி சங்கத்தின் மிகுதிப் பணத்திலிருந்து வாங்கப்பட்டது. 16.04.1994 அன்று நடைபெற்ற கூட்டத் தீர்மானத்தின்படி கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டுவது என முடிவு செய்யப்பட்டு, நன்கொடை பெற்று கட்டடப் பணி நடைபெற்றது.

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க புதிய கட்டடப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் திருப்பணித் திலகம் திருமதி.பரமேஸ்வரி இரத்தினவேலு (சின்னி) ரூ.60,000 நன்கொடை அளித்தமையால் சங்கத்தின் முதல் மாடிக்கு "திருமயிலை வள்ளல் P.இரத்தினவேலு செங்குந்தர் (சின்னி) அரங்கம்" என்று பெயர் சூட்டப்பட்டது. மேலும் விடாமுயற்சியினாலும், வட்டியில்லாக் கடனாகப் பலர் பணம் கொடுத்து உதவியதாலும் முதல் மாடி, இரண்டாவது மாடி எனக் கட்டி முடிக்கப்பட்டு 02.10.1996 அன்று நடைபெற்ற 24ஆம் ஆண்டுவிழாவின் போது திரு. A.V.Rm.V.சங்கரநாராயணன் செங்குந்தர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதோடு பொதுச்செயலாளர் திரு.தி.ரா.செல்வராஜன் அவர்களின் மணிவிழாவும் சேர்த்துக் கொண்டாடப்பட்டது.

வெள்ளி விழா:

1997ஆம் ஆண்டு நாட்டின் சுதந்திர தினப் பொன்விழா ஆண்டாக அமைந்ததால் 02.10.1997 அன்றைய ஆண்டு விழா 1.சுதந்திர தினப் பொன்விழா, 2.சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க **வெள்ளிவிழா**, 3.மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா என முப்பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் 25 ஆண்டுகள் நிறைவடைந்து வெள்ளிவிழாவை முன்னிட்டு **வெள்ளிவிழா சிறப்பு மலர்** 02.10.1997 அன்று வெளியிடப்பட்டது.

பொன் விழா:

சங்கம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் 2-10-2022 அன்றைய ஆண்டுவிழா, சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் பொன்விழா, சிறப்புப் பெற்றவர்களுக்குப் பாராட்டு விழா, மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா, கல்வி உதவித்தொகை வழங்கும் விழா, நன்கொடையாளர்களுக்குச் சிறப்பு செய்யும் விழா என ஐம்பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அவ்விழாவில் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் பொன்விழா மலர் வெளியிடப்படுகிறது. பொன்விழா மலரைத் தயாரிக்கும் பணியில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் திருமழிசை திரு. S.ஜெயக்குமார் அவர்கள் மேற்கொண்டுள்ளார். இது சங்கத்தின் சார்பாக வெளியிடப்படும் ஐந்தாவது மலர் ஆகும்.

தொடர்ந்து பொறுப்பு வகித்த நிர்வாகிகள்:

27.11.1994 முதல் 05.07.2007 வரை திரு. S.V.இராஜாபாதர் செங்குந்தர் அவர்கள் தலைவராகப் பணியாற்றினார்கள். ஆகஸ்ட் 2007 முதல் அக்டோபர் 2010 வரை திரு. M.வேதாச்சலம் செங்குந்தர் அவர்கள் பணியாற்றினார்கள். அக்டோபர் 2010 முதல் இன்று வரை மேற்கு மாம்பலம் திரு. **D.ஆறுமுகம் செங்குந்தர்** அவர்கள் தலைவராக பணியாற்றி வருகிறார்.

செயலாளராக 30.04.1995 முதல் 21.12.1997 வரை திரு.சரவண பழனிவேலு அவர்கள் பணியாற்றினார்கள். 26.01.1998 முதல் 25.03.2000 வரை திரு. மு.பஞ்சாட்சரம் செங்குந்தர் அவர்களும், 26.03.2000 முதல் அக்டோபர் 2010 வரை மேற்கு மாம்பலம் திரு. D.ஆறுமுகம் செங்குந்தர் அவர்களும் பணியாற்றினார்கள். அக்டோபர் 2010 முதல் 2013 வரை குன்றத்தூர் திரு. மோகன் செங்குந்தர் அவர்கள் பணியாற்றினார். 2014 முதல் இன்று வரை குன்றத்தூர் திரு. T.V.சரவணன் செங்குந்தர் அவர்கள் பணியாற்றி வருகிறார்.

27.11.1994 முதல் 29.12.2002 வரை மயிலை திரு. M.B.பாண்டுரங்கம் செங்குந்தர் அவர்களும், 29.12.2002 முதல் மார்ச் 2005 வரை திரு. P.R.வெங்கடேஸ்வரன் செங்குந்தர் அவர்களும், 03.07.2005 முதல் 30.10.2010 வரை மயிலை திரு. M.ஜெகதீசன் செங்குந்தர் அவர்களும், 2010 முதல் 2016 வரை திருமழிசை திரு. T.K.விஜயபாரதி செங்குந்தர் அவர்களும் பொருளாளராகப் பணியாற்றினர். 2017 ஜனவரி முதல் இன்றுவரை சைதை திரு. S.ரமேஷ் செங்குந்தர் அவர்கள் பொருளாளராகப் பணியாற்றி வருகிறார். தற்போது சைதை திரு. S.தங்கராஜ், திருமழிசை திரு. S.ஜெயக்குமார், அனகை திரு. P.R.ரவி ஆகியோர் மாநில செயற்குழு உறுப்பினர்களாகப் பணியாற்றுகின்றனர்.

பொதுச் சிறப்பு:

தொடர்ந்து இச்சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சிறிய அளவில் நடத்தப்பட்டு வந்த ஆண்டுவிழா கடந்த 7 ஆண்டுகளாக சைதாப்பேட்டை திரு. S.தங்கராஜ் செங்குந்தர் அவர்களின் மண்டப நன்கொடையின் பேரில், திருமழிசை, சடையப்பா திருமண மண்டபத்தில், பெரிய மண்டபத்தில் பெரிய அளவில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்னைப் பெருநகரைச் சேர்ந்த அத்தனை கிளைகளிலிருந்தும் ஆயிரத்திற்கும் மேலாக மாணவர்கள், பெற்றோர்கள் பெருமளவில் கூடும் ஒரு சிறிய மாநாடு போன்று நடைபெற்று வருவதும் பல மாவட்டங்களிலிருந்தும் நிறைய பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பதும் இச்சங்கத்திற்குப் பெருமை தருவதாக அமைகிறது.

நெசவாளர் நேசன் உத்யோக்ரத்னா

தெய்வத்திரு. ஜெ. சுத்தானந்தன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

பிறந்த நாள்: 21.09.1944, மறைவு : 25.06.2010



ஜவுளி நகரமாம் ஈரோடு மாநகரில் திரு. ஜெகந்நாத முதலியார் முத்துலட்சுமி தம்பதியருக்கு 21.09.1944-ஆம் நாள் மூத்த திருமகனாய்ப் பிறந்தவர். நெசவாளர்நேசன் எனப் புகழ்பெற்ற திரு. ஜெ.எஸ். அவர்கள், பள்ளிக் கல்வியை ஈரோட்டிலும் புதுமுக வகுப்புக் கல்வியை (PUC) கோவையிலும், அறிவியல் பட்டப்படிப்பை சென்னையிலும் பயின்றார். திரு. ஜெ.எஸ். அவர்களின் குடும்பம் மூன்று தலைமுறைகளாக பொது வாழ்வில் ஈடுபாடும் அக்கறையும் கொண்ட குடும்பமாகும். இவரது பாட்டனார் தெய்வத்திரு. மொட்டையப்ப முதலியார் அவர்கள், ஈரோட்டில் செங்குந்தர் மாநில மாநாட்டை முன்னின்று நடத்தினார். இவரது தந்தை தெய்வத்திரு. ஜெகந்நாத முதலியார் அவர்கள் அரசியல் கூட்டுறவு ஆன்மீகம் போன்ற பொது நிகழ்வுகளில் நாட்டமுடையவராக இருந்தார். இத்தகைய பரம்பரையில் பிறந்த திரு. ஜெ.எஸ். அவர்களுக்கு நெசவாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பது குறித்து நாட்டம் ஏற்பட்டு, நெசவாளர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட தன்னை முழுமையாக அர்பணித்துக் கொண்டார். இதன் காரணமாகவே பேரூர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் 1985ஆம் ஆண்டில் திரு. ஜெ.எஸ். அவர்களுக்கு **நெசவாளர் நேசன்** என்ற பட்டம் சூட்டினார்.

உத்யோக்ரத்னா திரு. ஜெ.எஸ். அவர்கள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்ற பின் ஈரோட்டில் தான் பயின்ற செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி மற்றும் செங்குந்தர் கல்விக்கழக தாளாளராகவும் பொறுப்பேற்றார். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்ற முதுமொழிக்கேற்ப செங்குந்தர்களின் கல்விச் சேவையில் தனிமுத்திரை பதித்தவர் தலைவர் திரு. ஜெ.எஸ். அவர்கள். ஈரோட்டில் இரண்டு பள்ளிகளுடன் செயல்பட்ட கல்விக்கழகத்தில் மேலும் நான்கு பள்ளிகளைப் புதிதாக உருவாக்கி மொத்தம் ஆறு பள்ளிகளுக்கும் தாளாளராகத் திறம்பட செயல்பட்டவர். மேலும் MPNMJ பாலிடெக்னிக் கல்லூரியை ஏற்படுத்தினார். பின்னர் அதனை பொறியியல் கல்லூரியாகத் தரம் உயர்த்தி அதன் தாளாளராகச் செயலாற்றினார். ஈரோடு செங்குந்தர் கல்லூரியை உருவாக்கி அதன் தாளாளராகவும் பணியாற்றினார். திரு. ஜெ.எஸ். அவர்கள் சென்னை வள்ளல் சபாபதி மெட்ரிக் பள்ளித் தலைவராகவும் வள்ளிபுரத்தான்பாளையம் மொட்டையப்பர் நடுநிலைப் பள்ளி செயலாளராகவும் இருந்து செங்குந்தர்களின் கல்விக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தார். இவரது கல்விச்சலுகையைப் பயன்படுத்தி ஏராளமான செங்குந்த மாணவர்கள் பொறியியல் பட்டம் பெற்று தம் குடும்பப் பொருளாதாரத்தைத் தரம் உயர்த்தியுள்ளார்கள். அம்மாணவர்கள்

மற்றும் குடும்பத்தினர் மனதில் என்றென்றும் தெய்வமாக நிலைத்து நிற்பவர் தலைவர் திரு.ஜெ.எஸ். அவர்கள்.

ஜெ. சுத்தானந்தன் அவர்கள் ஓர் இந்தியக் கல்வியாளரும், அரசியல்வாதியும், மக்கள் சேவகரும், தொழிலதிபரும் ஆவார். இவர் பல கூட்டுறவு சங்கங்களின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். மேலும் பல கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளார். இவரின் சேவைகளைப் பாராட்டி முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் ஜெயில் சிங்கிடம் **உத்யோக்ரத்னா** என்ற விருதைப் பெற்றார்.

ஈடிலா பணிகள்

பாரம்பரிய நெசவாளர் குடும்பத்தில் செங்குந்த கைக்கோளர் குலத்தில் பிறந்தவர் இவர். இவரது தந்தை மொ. ஜகந்நாதன் முதலியார், பத்மஸ்ரீ எம்.பி.நாச்சிமுத்து முதலியார் ஆகியோரைத் தீவிரமாக பின்பற்றியவர். நெசவாளர் சமூகத்தின் நலனுக்காகப் பாடுபட்ட ஒரு தீவிர சோலிஸ்ட் ஆவார். இவரது தந்தை 1947-இல் "ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம்(ஈரோடெக்ஸ்)" தொடங்கினார்.

தந்தையின் மரணத்திற்குப் பிறகு சுத்தானந்தன் ஈரோடெக்ஸின் இயக்குநராக 1967 முதல் 1975 வரையும் இருந்தார். ஈரோடெக்ஸின் தலைவராக, தமிழ்நாட்டின் பல நகரங்களில் (மதுரை, திருச்சி, சேலம் போன்றவை) மற்றும் ஆந்திரம், கர்நாடகம் போன்ற பிற மாநிலங்களிலும் கிளைகளைத் தொடங்கியதன் மூலம் ஏழை நெசவாளர்களின் தயாரிப்பு விற்பனையைப் பெருமளவில் அதிகரித்தார்.

ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி, எம்.பி.நாச்சிமுத்து எம்.ஜெகநாதன் பொறியியல் கல்லூரி போன்ற கல்லூரிகளை நிறுவினார்.

வி.வி.சி.ஆர். முருகேச முதலியார் மற்றும் எஸ்.மீனாட்சிசுந்தர் முதலியார் உடன் சேர்ந்து ஈரோடு செங்குந்தர் கல்விக் கழகத்தைத் துவக்கினார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் புதிய நீதிக் கட்சி சார்பில் பவானி தொகுதியில் போட்டியிட்டு இரண்டாம் இடம் பெற்றார்.

வகித்த பதவிகள்:

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் (ஈரோடெக்ஸ்) இயக்குநராக 1967 முதல் 1975 வரை 8 ஆண்டுகள் வரையிலும், சங்கத்தின் தலைவராக 1975 முதல் 1989 வரை 14 ஆண்டுகளும் பிறகு, 1991 முதல் 1996 வரை 5 ஆண்டுகளும் பணியாற்றினார். இவரது காலகட்டத்தில் ஈரோடெக்ஸ் மாநில அளவில் 3 முறை மற்றும் மாவட்ட அளவில் பல முறை சிறந்த நெசவாளர்களின் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

1979 முதல் 1989 வரை தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலைகள் இயக்குநராக இருந்தார்.

குஜராத்தின் பரோடாவில் உள்ள பெட்ரோபில்ஸ் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட் நிறுவனத்தில் 1986 முதல் 20 வரை 15 ஆண்டுகளாக பல்வேறு வகையான பாலியஸ்டர்

நூல்களைத் தயாரிப்பதற்கான தென்னிந்திய பிரதிநிதியாக இந்திய அரசாங்கத்தால் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

1999 முதல் 2002 வரை புது தில்லியில் அகில இந்திய கைத்தறி கூட்டுறவு சந்தைப்படுத்தல் சங்கத்தின் இயக்குநராக இருந்தார். ஜப்பானின் எம்.எஸ். சுமிடோமோ கார்ப்பரேஷன் மற்றும் அகில இந்திய கைத்தறித் துணி சந்தைப்படுத்தல் கூட்டுறவு சங்கம் லிமிடெட், டெல்லி இணைந்து நடத்திய சென்னை அகில இந்திய கைத்தறி மற்றும் நிப்பான் அப்பரல்ஸ் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 2000 முதல் இயக்குநராக இருந்தார்.

1979 முதல் 1981 வரை துணைத் தலைவராகவும், பெரியார் மாவட்ட கைத்தறி நெசவாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் கூட்டமைப்பின் இயக்குநராகவும் 1981 முதல் 1989 வரை செயல்பட்டார்.

1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்தபடி, கைத்தறி நெசவாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக தமிழ்நாடு அரசு அமைத்த கைத்தறிக்கான உயர்மட்டக் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

மேலும், 1997 முதல் 2001 வரை, 2005 முதல் 2006 வரை தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

இவர் தமிழ்நாடு அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நூல் விலை நிர்ணயக் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

1997 முதல் 20 வரை ஈரோடு மாவட்டத்தின் மூலப்பொருட்களுக்கான விலை நிர்ணயக் குழுவில் உறுப்பினராக இருந்தார்.

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு கடைகளின் தலைவராக 19 ஆண்டுகள் என நீண்ட காலம் செயல்பட்டார்.

1980 முதல் 1989 வரை ஈரோடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் தலைவராக செயல்பட்டார்.

தொல்துறை தொழிலாளர் தொடர்பான திட்டங்களுக்கான சென்னை அகில இந்திய வானொலியின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்.

ஈரோடு மாவட்டத்திற்கான விற்பனை வரி தொடர்பான ஆலோசனைக் குழு உறுப்பினர்.

ஈரோடு மாவட்ட தலைமையக மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினர்.

கல்வித்துறை:

ஜெ. சுத்தானந்தன் அவர்கள் கல்வித்துறையில் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கிறார். சமூகம், சாதி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்குத் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதே இவரது

நோக்கமாக இருந்தது. தொழில் கல்வி என்பது ஒரு கனவாக இருக்கும் மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்க இவர் விரும்பினார். கல்வி இல்லாமல் சமூகத்தின் முன்னேற்றம் சாத்தியமில்லை என்று இவர் தீவிரமாக நம்பினார். எனவே, கல்வி அறக்கட்டளைகளை நிறுவியதன் மூலம் அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் கல்வியை வழங்குவதற்கான தனது தீவிர முயற்சியை மேற்கொண்டார். தேவைப்படுபவர்களுக்குக் கல்வியை வழங்குவதில் இவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்ததால், பல்வேறு கல்வி நிறுவனங்களை நிறுவுவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இந்த பணியை மேற்கொள்ள, இவர் பின்வரும் நிறுவனங்களின் நிறுவனராக செயல்பட்டார்.

ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி, துடுபதி, ஈரோடு - 638 057, 1995 முதல் 2010 வரை 15 ஆண்டுகள்.

எம்.பி. நாச்சிமுத்து எம். ஜெகந்நாதன் பொறியியல் கல்லூரி, சென்னிமலை, ஈரோடு - 638 112, 2001 முதல் 2010 வரை 10 ஆண்டுகள்.

எம்.பி. நாச்சிமுத்து எம். ஜெகந்நாதன் பாலிடெக்னிக் கல்லூரி 1984 முதல் 2003 வரை 19 ஆண்டுகள்.

செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.

செங்குந்தர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.

மீனாட்சி சுந்தரனார் செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.

செங்குந்தர் கல்வி நிலையம் தொடக்கப்பள்ளி, ஈரோடு.

செங்குந்தர் நர்சரி & தொடக்கப்பள்ளி, ஈரோடு.

மொட்டையப்ப உயர்நிலைப்பள்ளி, வள்ளித்தான்பாளையம்.

லலிதா கல்வி நிலையம் நடுநிலைப்பள்ளி, ஈரோடு.

மேலும், சென்னையின் வள்ளல் சபாபதி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஈரோட்டில் உள்ள செங்குந்தர் மேல்நிலைப்பள்ளியின் முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

கல்வியாளர் திரு. ஜெ.சுத்தானந்தனின் மிகப் பெரிய சாதனை எம்.பி. நாச்சிமுத்து எம்.ஜெகந்நாதன் பாலிடெக்னிக் கல்லூரி தோன்றியது. இது 1984-ஆம் ஆண்டில் எம்.பி.நாச்சிமுத்து எம்.ஜெகநாதன் கல்வி அறக்கட்டளை மூலம் தனது குரு பத்மஸ்ரீ எம்.பி.நாச்சிமுத்துடன் தொடங்கப்பட்டது.

பரோபகாரரின் அயராத முயற்சியால், பாலிடெக்னிக் கல்லூரி 20-ஆம் ஆண்டில் ஐந்து யுஜி படிப்புகளுடன் பொறியியல் கல்லூரியாக மேம்படுத்தப்பட்டது. பின்னர் பல புதிய படிப்புகள் தொடங்கப்பட்டன.

விருதுகள்:

ஈரோடு பகுதியில் ஜெ.சுத்தானந்தன் நகர் என்று ஒரு பகுதி உள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு இவர் செய்த சிறந்த சேவையை அங்கீகரிக்கும் விதமாக, 1985-ஆம் ஆண்டில் அப்போதைய இந்திய ஜனாதிபதி கியானி ஜெய்ல் சிங் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட இந்திய பொருளாதார ஆய்வுக் கழகம் **உதயோக ரத்னா** விருதை வழங்கியது.

நெசவாளர் நேசன் என்ற பட்டத்தை இவருக்கு 1985-இல் கோயம்புத்தூரைச் சேர்ந்த சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வழங்கினார்.

சென்னை லயன்ஸ் கிளப் ஆஃப் பீச் பார்க் வழங்கிய **லைஃப் டைம் சமூக சேவகர்** விருது.

லயன்ஸ் கிளப் ஆஃப் ஈரோட்டின் **சேவை செம்மல்** (சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆத்மா) விருது.

காவிரி லயன்ஸ் கிளப் ஆஃப் ஈரோடு வழங்கும் **சேவை செம்மல்** (சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆத்மா) விருது.

ஆனந்த சேவக் விருது பரமஹம்சா நித்யியானந்த சுவாமிஜி பெங்களூர்.

கல்விக் காவலர் (கல்வியின் சிறந்த நிர்வாகி) விருது.

தமிழன் தொலைக்காட்சி மற்றும் விஸ்வவா சேவா டெலிமீடியா இணைந்து தொலைக்காட்சி கலைஞர்களால் வழங்கப்பட்ட **செங்கோல் ஏந்திய செங்குந்த செம்மல்** (செங்குந்தரின் ஒரு உன்னத ஆத்மா).

லயன்ஸ் கிளப் ஆஃப் ஈரோடு சங்கத்தின் **சாதனையாளர் விருது**.

லைஃப் டைம் சாதனையாளர் விருது 2008 தமிழ் பேரவை, ஈரோடு.

கல்வி இன்று சிறந்த கல்விக்கான விருது.

எம்.ஜி.ஆர். 20-இல் மனிதாபிமான விருது இதயக்கனி தமிழ் இதழ்.

இவரைப் போற்றி வணங்குவோம்!

ஒற்றுமை

வாரியார்	சுத்தானந்தன்
நீறு இட்ட நெற்றி	இவரும் எப்போதும் நீறு இட்ட நெற்றியுடன் இருப்பவர்
சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்	இவர் பிறந்த நட்சத்திரமும் சுவாதி
கிருபானந்தன் - 7 எழுத்து	சுத்தானந்தன் - 7 எழுத்து
முருக பக்தர்	இவரும் முருக பக்தர்
ஏழைகளின் கல்விக்கு உதவியவர்	இவரும் ஏழை மாணவர்கள் இலவசமாக கல்வி கற்க உதவியவர்

தலை தந்தார்; கலை தந்தார்

அருட்சொல்லரசு ச. திருச்சுடர் நம்பி
B.A., CS., M.Com., M.Phil.(com), Dip.in Multimedia, Web Master,
Dip. Saiva Sithandhan, M.A., Tamil.

உலகம் தோன்றிய பின் மக்கள் தோன்றி மனித சமுதாயம் வாழ்க்கையை வாழத் தொடங்கிய காலம் முதல் இன்று வரை பல பரிணாம வளர்ச்சியைக் கண்டிருக்கின்றது. வெவ்வேறு மக்கள் வெவ்வேறு குழுக்களாக வாழ்ந்தாலும் பிரிவுகள் எல்லாம் இல்லாமல் வேற்றுமையின்றி ஒற்றுமையோடே வாழ்ந்தனர். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற உயர்ந்த சிந்தனையைக் கொண்டவன் தமிழன்.

ஆக சங்க காலத்தில் இருந்த தமிழனுக்குச் சாதியில்லை. சாதி என்ற சொல்லே தமிழ்ச் சொல் அல்ல. ஜாதகம் என்பதை எப்படி சாதகம் என்று தமிழ்ப்படுத்த முயல்கிறோமோ அதுபோலத்தான் ஜாதி என்பதைச் சாதி என்று சொல்ல முயன்றனர். சாதி என்பது பிறப்பின் அடிப்படையிலானது. மதத்தின் பின்புலம் கொண்டது. தமிழர்கள் "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" என்ற சிறந்த கொள்கையோடு வாழ்ந்தவர்கள். பழங்காலத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகை பாகுபாடு இருந்தது இவை செய்கின்ற தொழிலால் வந்த பாகுபாடேயன்றி பிறப்பால் அல்ல.

தமிழர் சொன்ன நால்வகை பாகுபாடு என்பது "குலம்"; வடவர் சொன்னது 'சாதி'. தமிழர்களிடம் காணப்பட்ட குலக்குழுக்கள் பிறப்பின் அடிப்படையிலானது அல்ல. மாறாக செய்கின்ற தொழிலால் அமைந்தது. அவ்வகையில் யார் வேண்டுமானாலும் அரசர் ஆகலாம். அந்தணர் ஆகலாம். அதே போல் வணிகரின் வாரிசுகள் வணிகராகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவர் வேளாளராகவோ அரசராகவோ ஆகலாம் என்ற சமத்துவத்தைக் கட்டுக்கோப்பாகச் சமைத்து வைத்தச் சமூகம் தமிழ்ச் சமூகம் என்பதில் அளவிறந்த பெருமை நமக்கு உண்டு.

அப்படியானால், செங்குந்தர் என்ற சாதியை உயர்த்திப்பிடித்து விழா கொண்டாடுதல் தமிழர் முறைமைக்கு எதிரானதல்லவா என்ற கேள்வி எழலாம். முதலில் நாம் உணரவேண்டியது **செங்குந்தர் என்பது சாதியல்ல அது உயர்ந்த குலம், உன்னத மரபு**. அது எப்படிச் சொல்லுகிறீர்கள் என்றால், அதற்கு பதில் இக்கட்டுரையைத் தொடர்ந்து படிக்க கிடைத்துவிடும்.

சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் தோன்றிய முருகப்பெருமானுடைய துணைவர்களாக வந்த நவவீரர்களின் மரபில் தோன்றியவர்கள் செங்குந்தர்கள் என்று பல புராணங்கள் கூறுகின்றன. முருகப்பெருமான் சூரனோடு போர் புரிந்த சமயம் அச்சேனைக்குத் தலைமை ஏற்ற சேனைத்தலைவர் எனவும், இரத்தத்தால் சிவந்த ஈட்டியைக் கையில் ஏந்தியமையால் செங்குந்தர் எனவும் பெயர் பெற்றனர் என்று வரலாறு கூறுகிறது. (செம்=சிவந்த + குந்தம்=ஈட்டி = செங்குந்தம்).

செங்குந்தர் என்ற சொல்லுக்கு பொருள் உரைக்க வந்த சேந்தன் திவாகரம் என்ற நிகண்டு, " செங்குந்தப்படையர் சேனைத் தலைவர் தந்துவாயர் காருகர் கைக்ளோர்" என்று பொருளுரைக்கிறது. செங்குந்தர். சேனைத்தலைவர், தந்துவாயர் (நெசவாளர்). காருகர் (நெசவாளர்), கைக்கோளர் ஆகிய ஐந்து பெயர்களும் ஒரே மக்களைக் குறிக்கும் பெயர்கள் என அறியமுடிகிறது.

நிகண்டு மொழிந்ததற்கு ஏற்ப இடைக்காலச் சோழர் காலத்தில் கைக்கோளர் இராணுவத்தில் பணியாற்றியுள்ளார்கள். பல செங்குந்தர்கள் சேனாதிபதிகளாகவும், படைத்தளபதிகளாகவும், படைத்தலைவர்களாகவும், சோழர்களின் அரசில் பணி செய்து இருந்திருக்கின்றனர் என்று வரலாறு கூறுகிறது. பல கல்வெட்டுச் செய்திகளும் ஆதாரங்களாக உள்ளன. அதோடு மட்டுமல்லாமல் செங்குந்த மரபினர் / குலத்தவர் குறுநில மன்னர்களாகவும், புலவர்களாகவும், நாயன்மார்களாகவும், நெசவாளர்களாகவும் பல துறைகளில் சிறந்து விளங்கியதாக வரலாறுகளும் இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன.

இந்த செங்குந்த குலம் மற்றும் குலத்தவர் பெருமையையும் பல புலவர்கள் பல நூல்களுள் பாடியுள்ளனர். அவ்வாறு செங்குந்த வேலர் திருக்கை வழக்கத்தந்தாதி என்ற நூலில் அவர்களின் பெருமையை இவ்வாறு பாடியிருகின்றார் புலவர்.

நற்குலஞ் செங்குந்தர் கச்சிப் பதிவளர் நாயகியாள்
பொற்சிலம்(பு) உற்பனர் மாமணிப் பாலகர் பூமிசையில்
விற்குலந் தாங்கிய திண்புயத் தார்குந்த வேற்கரத்தார்
சொற்குலத் தோர்க்குச் சிரந்தந்த கந்தன் துணைக் கையரே.

இந்த செங்குந்தர்கள் யார் தெரியுமா என்று அறிமுகப்படுத்துகிறார் நூலாசிரியர். காஞ்சி நகரில் கோயில் கொண்டுள்ள அம்பிகையின் பொற் சிலம்பிலிருந்து உதிர்ந்த மணியிலிருந்து உதித்தோர். இவ்வுலகில் வீரத்துடன் வில்லைத் தாங்கிய வலிய தோள்களை உடையவர்கள். செங்குந்தம் என்னும் வேல் அல்லது ஈட்டியைக் கையில் கொண்டவர்கள். முருகப்பெருமானுக்குத் துணைவர்கள். அது மட்டுமல்ல தங்கள் குலத்தவர்க்காகக் தலையைத் தந்தவர்கள் என்று அறிமுகம் செய்கிறார். இதில் பல பெருமைகள் இருந்தாலும் நாம் கவனிக்க வேண்டிய ஒரு பகுதி குலத்துக்காக தலையைத் தந்தார்களா? அது என்ன வரலாறு என்று நாம் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

ஒருமுறை செங்குந்த மரபினர் பின் வரும் சந்ததியினர் தம் குலப் பெருமையை அறிந்திட ஒரு நூல் பாடித்தர தம் மரபின் கவிச் சக்கரவர்த்தியாகிய கூத்தர் பெருமானை அணுகினார்கள். அதற்கு கூத்தர் "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்று தமிழ் வழங்கக் கூடிய புலவர்கள் வழி வந்த யான் ஒரு குலத்திற்கு நூல் இயற்றுவது முறையாகாதென மறுத்தார். இது கேட்டு மனம் அமைதியடையாத அவர்கள் பல விபரீத முயற்சிகளில் ஈடுபட கூத்தர் பெருமான் இதனை தவிர்க்க யாராலும் எண்ண முடியாத கடினமான செயலைச் சொல்லி அது நிறைவேறுமாயின் யாம் செங்குந்தர் பெருமை குறித்த நூல் ஒன்றை

இயற்றுவேன் என்றார். அதாவது செங்குந்த குலத்தவர் ஆயிரத்து எண்மர் தலைகளை கொய்து சிரசிங்காதனம் அமைத்தால் அதன் மீதிருந்து நூல் இயற்றுவேன் என்றார். இதனைச் செய்ய ஒருவரும் துணிய மாட்டார் என்று கருதி இதனை முன் வைத்தார் கூத்தர். ஆனால் வீரத்தில் சிறந்த செங்குந்த மரபினர். குலோத்துங்கச் சோழன் அவையில் அரசனோடு வீற்றிருந்த கூத்தர் மற்றும் ஏனையோர். முன்னிலையில் தங்களின் தலையை அரிந்து வைத்து சிரசிங்காதனத்தை இட்டு தம் சுத்த வீரத்தைத் காட்டி சபையோரைப் பிரமிக்கச் செய்தனர்.

அதனைக் கண்ட கூத்தர் இதற்கு மேலும் செங்குந்தர் கோரிக்கையை புறந்தள்ளல் ஆகாதென, அந்த சிரசிங்காதனத்தில் அமர்ந்து தம் மரபாகிய செங்குந்தர் வீரப் பெருமைகளை எல்லாம் அரசனும் சபையாரும் வியக்கும் படி "ஈட்டி எழுபது" என்னும் நூலைப் பாடினார். இதனை அந்நூல் பாடல்கள் விவரிக்கின்றன.

"... ஆவாணர் செங்குந்தர் ஆயிரத்து எண்தலை கொய்திரத்தப்
பாவாடை இட்டது உலகமெல்லாம்புகழ் பாலித்ததே"

என்று இந்நூலின் தற்சிறப்பு பாயிரத்தே கூத்தர் பாடியுள்ளார்.

முத்தமி ழிராசரா சேந்திரன் முன்னமே
சுத்தவீ ரத்திறம் குலங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலில் புகழ்பெ றாதென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே" - ஈட்டியெழுபது (60)

இந்த செங்குந்தர்கள் தங்கள் சுத்த வீரம் துலங்க வல்லான் காவியத்தில் உள்ள பொய்த்தலை கொடுத்ததைப் போல் அல்லாமல் மெய்த்தலை கொடுப்பதே சிறப்பு என்று தங்கள் தலையை அரிந்தனர் என்றார்.

வரச்சிங் காதன வளவர் தம்பிரான்
தரச்சிங் காதனம் தன்னில் ஏறியே
துரைச்சிங் காதன் தொழும்க விக்கிடும்
சிரச்சிங் காதனச் சீர்செங் குந்தமே" - ஈட்டியெழுபது (64)

மேலும் உலகை ஆளும் மன்னர்களுக்குச் சிங்காதனம் இருப்பது போல், அவ்வரசர்களும் வணங்க வீற்றிருந்த கவியாகிய எனக்கும் சிரசிங்காதனம் இட்ட பெருமையை உடையவர் செங்குந்தத் தலைவர்கள் என்று பாடினார்.

இவ்வளவு வீரமா நம் செங்குந்தர்க்கு என்று தோன்றும் அதே வேளையில், ஒரு நெருடல், அவ்வளவு பேர் தலை கொடுத்து தான் இப்படி ஒரு தமிழ் வாங்க வேண்டுமா? கூத்தர் பெருமான் இதற்கு ஏதும் செய்யவில்லையா? என்று கேள்வி எழலாம்.

இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும் என்ற பொருளுக்கேற்ப தமிழ் வழங்கும் புலவராகிய கூத்தர் இதுகண்டு கல்நெஞ்சராக இருப்பாரா என்ன? பாடலால் ஒருவன் வீழவும் எழவும் செய்யும் ஆற்றல் கொண்டத் தமிழால் அவர்களை மீண்டெழச்

செய்யலாகாதா என்ன? தமிழ் வேண்டி தலைதந்த செங்குந்தர் கோரிக்கைக்கு ஏற்ப "ஈட்டி எழுபது" பாடிய கூத்தர் பெருமான் அவர்கள் தலையையும் உடலும் ஒன்று சேர்ந்து உயிர்பெற்றெழுந்திட கலைமகளை வேண்டி "எழுப்பெழுபது" என்று ஒரு நூல் அங்கேயே பாடினார். ஆனால் நம் தவக்குறை அதில் வெறும் 13 பாடல்கள் மட்டுமே நமக்குக் கிடைத்தது.

பலபல மதங்கள் தோறும் பற்பல வடிவமாகி
அலகிலா விளையாட் டென்றும் ஆடிடும் முருக வேட்கு
நலமுறும் அனுச ரான **நம்குல முதலி** தங்கள்
தலைதனை உடலிற் கூட்டித் தந்தருள் வாணித் தாயே" – எழுப்பெழுபது

இப்படி பல அற்புதத் தமிழ்ப் பாடல்களைக் கேட்ட பின் இறை பொறுத்திருக்குமா என்ன? உடனே உடல்கள் தலையோடு ஒட்டி அவர்கள் அனைவரும் உயிர்பெற்றெழுந்தனர். இந்நிகழ்விற்குப் பின்னரே கூத்தர் என்ற பெயர் மாறி உடலோடு தலை ஒட்டப் பாடியதால் "ஒட்டக்கூத்தர்" என்று அழைக்கப்பட்டார். இதனை அவரே ஒரு பாடலில் "எனக்கொட்டக் கூத்தனெனும் பெயரினையும் தாம்தந் தாரே" என்று பதிவு செய்துள்ளார்.

இந்நிகழ்வு எல்லோரும் அறிய அவையில் நிகழ்ந்தது. இதனை அறிந்த அக்காலப் புலவர்கள் ஔவையார், கம்பர், புகழேந்தி, அம்பிகாபதி, சோழ அரசன், பாண்டிய மன்னன், சேர அரசன் எனப் பலரும் வியந்து ஒட்டக் கூத்தரைப் பாராட்டிப் பாடல்கள் இயற்றினர். இப்பாடல்களையெல்லாம் கூத்தர்பெருமானின் சீடரான குலோத்துங்கச் சோழன் பெற்று தானும் ஒரு பாடல் பாடி மற்றவர் பாடலையும் தொகுத்து "களிப்பொருபது" என்னும் நூலை உருவாக்கினான்.

இந்தக் கைக் கோளர் இசைக்கெண் கணன் படைத்த
எந்தக் கைக் கோளர்இணை ஆவாரே அந்திப்
பிறையணிகைக் கோளனுருப் பெற்றவன்பால் வைகும்
நிறையணிகைக் கோளரே நேர் – களிப்பொருபது

அதாவது, இந்த கைக்கோளரது செய்கையும் அதனால் அடைந்த புகழும் பிரம்மன் படைத்த எவராலும் ஈடு செய்யலாகாத புகழ். சிவபெருமான் அருள் பெற்று, அவரது உருவம் பெற்று (சாரூப முத்தி அவரருகில் இருக்கும் உருத்திரர்களே இந்த செங்குந்தர்க்கு இணையானவர்கள் என்று இந்நூல் தொடங்குகிறது. இந்தப் பாடல் அசரீரி என்ற ஒரு செய்தியும் கிடைக்கிறது. இது ஆராய்ச்சிக்குரியது.

சிறப்பின் சிகரமாக விளங்கும் அந்த செங்குந்த மரபினரின் குணமாட்சி என்பதனை முழுமையாகச் சொல்ல ஏடு இடந்தராது. இருப்பினும் கூத்தர்பெருமான் பாடிய ஒரு பாடல் நமக்கு அதனை எடுத்துரைக்க உதவுகிறது.

நிலைதந்தார் புவியினுக்கு யாவருக்கும் அபிமானம் நிலைக்கத் தந்தார்;
கலைதந்தார் வணிகருக்குச்; சீவனம் செய் திடவென்றே கையில் யாண்டும்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்தர் என்கவிக்கு விலையா கத்தான்
தலைதந்தார்; எனக்கொட்டக் கூத்தனெனும் பெயரினையும் தாம்தந் தாரே

செங்குந்தர்கள், உலகம் நிலைபெற்று வாழ வழி செய்தனர். அனைவரிடமும் நிலையான அன்பு பெருகச் செய்தனர். அனைவருக்கும் மானம் காக்கும் ஆடை நெய்து தந்தனர் (கலை ஆடை); அந்த ஆடையைக் கொண்டு வாணிபம் செய்து தொழில் செய்ய வழி தந்தனர்; தமிழுக்காக தலையே தந்தனர். இதை விட செங்குந்தர் சிறப்பை எவ்வாறு சொல்ல முடியும்?

ஆக ஈடிணையில்லா சிறப்புகளை உடைய மரபினில் வந்த இந்த செங்குந்தர் பெருமைகளை எல்லாம் உலகறியச் செய்ய வேண்டிய கடமை நம்முடையது. அதனைச் செவ்வனே செய்து வரும் இந்த சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம் பொன்விழா காணுகின்றது என்றால் அது தமிழுக்குத் தலைதந்த செங்குந்த மரபிற்குப் பெருமை! செங்குந்தர் எங்கும் வளர்ந்து வருதலால் எங்கும் வளமே பெருகும்.

வானம் வளரும்; பசுக்கள் வளரும்; மகம் வளரும்;
தானம் வளரும்; தருமம் வளரும்; தமிழ்முதலாம்
ஞானம் வளரும்; சிவஞான போத நலம்வளரும்;
மானம் வளர்க்கின்ற செங்குந்த ரெங்கும் வளர்தலினே

என்ற செங்குந்த மரபு விளக்க வரிகளை நினைவு கூர்ந்து இச்சங்கம் மென்மேலும் சிறந்த முறையில் பணிகள் பல ஆற்றி தமிழையும் தமிழர் மரபையும் காத்திட வேண்டும் என்று எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டி அமைகின்றேன்.

வாரியார் பொன்மொழிகள்

1. உணவு தேடுவதோடு இறை உணர்வும் தேடு.
2. மாசிலா மனமே ஈசன் கோயில்.
3. பயிருக்கு முள் வேலி, பணத்துக்கு தர்மம் வேலி.
4. பாலும் தேனும் உடலுக்கு உறுதி, வேலும் மயிலும் உயிருக்கு உறுதி.
5. உள்ளம் வசமானால் உலகம் வசமாகும்.
6. ஒருமை உணர்வு இருமையும் தரும்.
7. ஆறுதலை அமலன் ஆறுதலை அருள்வான்.
8. எல்லா உயிரும் ஈசன் கோயில்.
9. அயர்ச்சியில்லா முயற்சி உயர்ச்சி தரும்.
10. வேலை உடையவனிடத்தில் வேலை கேள்.



சென்னைப் பெருநகர்
செங்குந்த மகாசன சங்கம்
பொன்விழா ஆண்டு
02-10-2022 அன்று நடைபெறும்
ஐம்பெரும் விழா
மாபெரும் வெற்றியடைய
புதுச்சேரி மாநில
செங்குந்தர்களின் சார்பில்
இனிய நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்புடன்
வி.பி.இராமலிங்கம் MLA
தலைவர்
ப.இராஜக்கண்ணு
பொதுச்செயலாளர்
த.மாணிக்கவாசகன்
பொருளாளர்
புதுவைச் செங்குந்தர் கல்வி, நலச்சங்கம்
101

செங்குந்தர் குலம் வாழ்க ! செங்குந்தர் ஒற்றுமை ஓங்குக! செங்குந்தம் வெல்க !



செங்குந்தர் பேரவை
திருமழிசை

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம்
திருமழிசை செங்குந்தர் பேரவை அதில் முக்கிய அங்கம்
முப்பத்தொன்பதாண்டு ஆற்றி வருகிறது சேவை
சமுதாயத்தை உயர்த்துவது இன்றைய அவசியத் தேவை
பொன்விழா காணும் தலைமைச் சங்கத்துக்கு
திருமழிசை கிளையின் பொன்விழா வாழ்த்துகள்.

இங்ஙனம்,

T.N.சண்முகம் செங்குந்தர் (தலைவர்) **T.K.விஜயபாரதி செங்குந்தர்** (செயலாளர்) **Dr. T.K.தேவராஜன் செங்குந்தர்** (செயலாளர்)

சென்னைப் பெருநகர் செயற்குழு உறுப்பினர்கள்

T.V.கருணாகரன், S.கோபாலகிருஷ்ணன், S.குருமூர்த்தி
S.ஜெயக்குமார், மாநில செயற்குழு உறுப்பினர்



சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் பொன்விழா சிறப்புற்று விளங்க வாழ்த்துகிறோம்

பொன்விழா வாழ்த்துகள்

ஸ்ரீ வைசியா பார்மா & சர்ஜிகல்ஸ்
பூவிருந்தவல்லி, சென்னை - 600 056.
மயிலாப்பூர், சென்னை - 600 004.
R. மகேஷ்
செயற்கு உறுப்பினர், அகில இந்திய மருந்து வணிகர்கள் சங்கம்

மகாலஷ்மி மெடிக்கல்ஸ்
நெ.258, T.H. ரோடு, வெள்ளவேடு, சென்னை-600 124.
R. சுதாகர்
போன் : 9884117421

ஸ்ரீ காமாட்சி ஹோமியோ பார்மஸி
12, (ST-05) துரைசாமி தெரு, குன்றத்தூர்,
சென்னை-600 069.
R. சேகர்
செல் : 9884389929

மித்ரன் மெடிக்கல்ஸ்
Plot No.1, காளாஸ்திரி பேபி நகர்,
காவல்சேரி ரோடு, திருமழிசை - 600 124.
R. தங்கவேல்

மகாலட்சுமி மெடிக்கல்ஸ்
5/1, ரோட்டு தெரு, வெங்கட்டாபுரம், குன்றத்தூர் - 600 069.
R. மணிவண்ணன்

ஐம்பதாவது ஆண்டு பொன் விழா கொண்டாடும்

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்திற்கு

எங்களது சங்கம் சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எங்கள் சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் குத்தகை முறையில் பெரிய திருமண மண்டபம் (V.K.M. மஹால்) என்ற பெயரில் (குளிர்சாதன வசதியுடன்) இயங்கி வருகிறது. அதில் வரும் வாடகையில் எங்கள் சங்க உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகையும் மற்றும் முதியோர் உதவித்தொகையும் வழங்கி வருகிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். உங்கள் சங்கம் மேலும் மேலும் வளரவும் பவளவிழா கொண்டாட வாழ்த்துகிறோம்.

இவண்,

சைதாப்பேட்டை கைத்தறித்துணி உற்பத்தி விற்பனையாளர் சங்கம்

எண்.88/82, கோடம்பாக்கம் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை-600 033. போன்: 9003049364, 9884148902







D.ஆறுமுகம் — தலைவர்

K.மனோகரன் — துணைத்தலைவர்

E.ஆனந்தகுமார், V.சங்கர் — இணை செயலாளர்கள்

K.நடராஜன் — பொருளாளர்

நிர்வாகக்குழு உறுப்பினர்கள்







D.கருணாநிதி V.கோபு G.சுப்பராயன் K.அன்பழகன்






S.ஜெகநாதன் A.பழனி V.குமார் S.குணசேகரன்

மற்றும் சங்க உறுப்பினர்கள்


AUM
SARAVANA
BUILDERS
REAL ESTATES & FLAT PROMOTERS
No.3, Sadaiyandeswaran Koil Street,
Kundrathur, Chennai - 69.
Phone : 24780175 / 24780900
Mobile : 9444021756
Email : terajbabu@yahoo.co.in


MARCHING TOWARDS
50
YEARS
SINCE 1979
MRC TEXTILE CORPORATION
Manufacturers of
LUNGIES,TOWELS, HANDKERCHIEFS
GAMCHAS & HOSIERY
16,AKILMEDU STREET-2,SAIT COLONY,
ERODE -638004 (TN)



நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்



சென்னைப் பெருநகர் செங்குந்த சங்கம்
சமுதாய மக்களுக்கு ஆற்றுகிறது தொண்டு
என்றும் அதையே கொள்கையாகக் கொண்டு
கல்வியால் உண்டு சமுதாய உயர்வு
கல்விக்கு உதவுவதில் காட்டுவதில்லை அயர்வு

பொன்விழா சிறக்க ஞானப் பூங்கோதை
காளத்திநாதன் கருணையை வேண்டுகிறோம்.

பொன்விழா வாழ்த்துகள்

அன்புடன்,
Dr. T.K. தேவராஜன் மற்றும் **குடும்பத்தினர்**
திருமழிசை



மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். - குறள்

பொன்விழா கொண்டாடும் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்திற்கு
எங்கள் இதயங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
"பொன்விழா வாழ்த்துகள்"

பிரசன்னா மெடிக்கல்ஸ்

73, T.H. ரோடு. திருமழிசை-600 124.
K. மனோகரன் - போன்: 984 08786

ஸ்ரீ பிரசன்னா மெடிக்கல்ஸ்

48, ஈஸ்வரன் கோயில் தெரு, திருமழிசை-600 124.
M. சசிக்குமார்
போன்: 95661 16060

வாழ்க செங்குந்தர்!

வாழ்க வளமுடன்!

50ஆம் ஆண்டு பொன்விழா வாழ்த்துகள்



தென்னிந்திய மகாசன சங்க முன்னாள் பொதுச் செயலாளர்

டாக்டர் தெய்வத்திரு. தி.ரா.செல்வராசன் அவர்கள்

மலர்ந்தது : 20.07.1936 உதிர்ந்தது : 29.05.2000

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கப் பொன்விழா நன்னாளில்
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க
முன்னாள பொதுச் செயலாளர் தி.ரா.செல்வராசன் அவர்களின்
நினைவைப் போற்றி என்றும் மகிழும்

அருள்நிதி K. ஆறுமுகம் செங்குந்தர்

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம்

"சீர்பணிச் செம்மல்" சுத்தானந்தமும் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கமும்

தொகுப்பு : S. **ஜெயக்குமார்,** மாநில செயற்குழு உறுப்பினர், திருமழிசை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

எனும் பொய்யாமொழிப் புலவர் வாக்கிற்கு இணங்க தோன்றல்கள் தோன்றி தம் புகழுடம்பை மண்ணுலகில் விட்டு, விண்ணுலகம் அடைந்தோர் பலர். அத்தகு பெருஞ்சிறப்பு உடையோரில் நம் குந்தக்குலத் தோன்றலாக, திரு மொட்டையப்ப முதலியார் பெயரனும், திரு.ஜெகந்நாத முதலியார் திருமகனுமான, நடுவண் அரசால் உத்தியோக ரத்னா எனறு பாராட்டப்பட்டவரும், பேரூர் மடத்ததிபதியால் நெசவாளர் நேசன் என்று பெயர் சூட்டப்பட்டவருமான தெய்வத்திரு. J.சுத்தானந்தம் அவர்கள் மிக முக்கியமானவர் ஆவார். சிதறிக் கிடந்த செங்குந்த குலத்தை ஒன்றுபடுத்திய உத்தமர். பட்டி, தொட்டிகளிலெல்லாம் பயணம் செய்தவர். அவர்தம் கால் தடம் பதியாத பகுதியே இல்லை எனலாம். எங்கெல்லாம் செங்குந்தர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் சென்று தன்னாலான தொண்டினைச் செய்து முத்திரை பதித்தவர். பல கிளைச் சங்கங்களை உருவாக்கியவர். நம் குலம் உயரவும், நலிவடைந்த நெசவுத் தொழிலுக்காவும், நெசவாளர் பெருமக்கள் தரம் உயரவும் குரல் கொடுத்தவர். அத்தகு மாமனிதர் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்துடன் கொண்ட உறவு மறக்க இயலாத வரலாற்று நினைவலைகள். அவ்வுறவு நிகழ்வுகளை இங்கே நினைவு கூர்வது பெருமையுடைத்து.

தருமபுரியில் 1986-இல் இளைஞர் பேரணி நடைபெற்ற சமயம். அந்நிகழ்ச்சிக்குச் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்திலிருந்து தலைவர் T.K.ஞானவேல் அவர்கள் தலைமையிலும், சைதாப்பேட்டை கைத்தறித் துணி உற்பத்தி, விற்பனையாளர் சங்கத் தலைவர் திரு. D.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையிலும் 50 பேர் ஒரு பேருந்து ஏற்பாடு செய்துகொண்டு அந்நிகழ்ச்சிக்குச் சென்றோம். அந்நிகழ்ச்சியே திரு. J. சுத்தானந்தன் அவர்களோடு சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்திற்குத் தொடர்பு ஏற்பட்ட காலமாக அமைந்தது.

மாநாடுகளில் தலைவர் சுத்தானந்தம் அவர்களும்
சென்னை பெருநகர் சங்கமும்:

1987-இல் தலைவர் J.சுத்தானந்தன் அவர்கள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவரானார். அவர் தலைமைப் பொறுப்பு ஏற்ற பிறகு முதன்முதலில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் "**எழுச்சிப் பேரணி மாநாடு**" நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அம்மாநாடு சென்னை பெரியார் திடலில் நடைபெற்றது. 3.12.1988 அன்று மாலை 3.00 மணிக்கு நாடே வியக்கும் வண்ணம் மாபெரும் எழுச்சிப்

பேரணி தொடங்கியது. சென்னை மாநகரம் குலுங்க, அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான செங்குந்தர்கள் நூற்றுக் கணக்கான லாரிகள், பேருந்துகள் போன்ற பல்வேறு வாகனங்கள் மூலம் வந்து குவிந்தனர். சென்னை மாநகரப் போக்குவரத்து சுமார் 5.00 மணி நேரம் ஸ்தம்பித்துவிட்டது. திரு.சுத்தானந்தம் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்று அவர் தலைமையில் நடைபெற்ற முதல் எழுச்சிப் பேரணி மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. அதுவும் சென்னையில் நடைபெற்றதும், அதில் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம் முக்கிய பெரும்பங்கு வகித்ததும் வரலாற்றுப் பெருமையாகக் கருதுகிறது. தலைவர் சுத்தானந்தம் அவர்களுடன் இருந்து செயல்பட்ட பொதுச்செயலாளர் திரு.தி.ரா.செல்வராஜன் அவர்கள் சென்னை பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தைச் சேர்ந்தவர் என்பதில் சங்கத்திற்கு இரட்டிப்புப் பெருமை ஆகும்.

எழுச்சிப் பேரணி செம்மையாக நடைபெற திரு.சுத்தானந்தம் அவர்கள் வள்ளல் சபாபதி மெட்ரிக் பள்ளியில் பல ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தினார். அதில் சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தைச் சேர்ந்தோர் பெருமளவில் கலந்து கொண்டனர். அத்தருனத்தில் தலைவர் திரு.சுந்தானந்தம் அவர்கள் Reporters conference நடத்தினார். அதில் 40 பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர். அது முதற்கொண்டு சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம் மேலும் வளர்ச்சிப் பாதையை நோக்கி நடைபோடத் தொடங்கியது.

மாநாட்டுக்கு நம்குல மக்களைத் திரட்ட சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தில் அங்கம் வகிக்கும் 18 பேரூர் சிற்றூர்களைச் சேர்ந்த நம் சமுதாய மக்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று ஒத்துழைப்பு நல்கிட கேட்டுக்கொண்டார். ஒரே நாளில் அனகாபுத்தூர் சிவசுப்பிரமணி சுவாமி திருக்கோயில் வளாகத்திலும், குன்றத்தூர் செங்குந்தர் திருமண மண்டபத்திலும், திருமழிசை ஒத்தாண்டேஸ்வரன் திருக்கோயில் வளாகத்திலும், மாலை 6.00 மணிக்கு சைதாப்பேட்டை கைத்தறி உற்பத்தியாளர் சங்கத்திலும் கூட்டங்களைக் கூட்டினார். திரு. தி.ரா.செல்வராஜன், திரு. சரவண பழனிவேலு, திரு. P.K.சாமிநாதன், திரு. M.B.பாண்டுரங்கன், திரு. ப.கி.பொன்னுசாமி, திரு. T.K.ஞானவேல், தளபதி திரு. D.நாகப்பன், திரு. D.ஆறுமுகம் மற்றும் பலர் முன்னனி வீரர்களாகக் கலந்துகொண்டனர்.

1990-ஆம் ஆண்டு மே மாதம் 12, 13 ஆகிய இரண்டு நாள்களில் "15வது மாநில மாநாடு" சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காங்கிரஸ் மைதானத்தில் தலைவர் திரு. சுத்தானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஊர்வலம் சிம்சன் காமராஜர் சிலையிலிருந்து புறப்பட்டு தேனாம்பேட்டை வரை பெரிய அளவில் நடந்தது. 1989, 1990 ஆகிய இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்வுகள் சென்னைப் பெருநகர் சங்கத்திற்கும் தலைவர் அவர்களுக்கும் நட்பு வலுப்பெற்றது.

செயற்குழுக்களில் தலைவர் சுத்தானந்தம்:

தலைவர் திரு.சுத்தானந்தம் அவர்கள் சென்னைப் பெருநகர் நடத்தும் செயற்குழுக் கூட்டங்களில் பெரும்பாலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் எளிமைப் பண்பாளர். ஒரு முறை திரு.சுத்தானந்தம் அவர்கள் 10.12.1989 அன்று தற்செயலாக சென்னைக்கு வருகை தந்தபோது அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அப்போது சென்னைப் பெருநகர் சங்கத்தின் சார்பாக வள்ளல் சபாபதி மெட்ரிக் பள்ளியின் கட்டநிதியாக ரூ.10,101-க்கான காசோலை தலைவர் அவர்களிடம் வழங்கப்பட்டது. நன்றியுடன் அதைப் பெற்றுக்கொண்டு மாநாடு பற்றி அக்கூட்டத்தில் உரையாடியது இன்றும் பசுமையான நினைவுகள் ஆகும்.

தலைவர் சுத்தானந்தமும் உண்ணாவிரதமும்:

05.11.1990 அன்று தலைவர் சுத்தானந்தம் அவர்கள் தலைமையில் சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்திற்கு அருகில் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. மண்டலக் கமிஷன் பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தவும் செங்குந்தர் இனத்தை மிகவும் பிற்பட்டோர் MBC பட்டியலில் சேர்க்கவும் மத்திய, மாநில அரசுகளை வற்புறுத்தக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார். சென்னைப் பெருநகர் தலைவர் திரு. S.D.பொன்னுசாமி அவர்களுடன் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். தலைவர் சுத்தானந்தம் அவர்களுடன் இருந்த உண்ணாநோன்பு சென்னைப் பெருநகர் சங்கத்தின் மலரும் நினைவாக மணம் வீசிக்கொண்டிருக்கிறது.

ஆண்டுவிழாக்களில் தலைவர் சுத்தானந்தம்:

02.10.1997 அன்று சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் வெள்ளிவிழா, சைதாப்பேட்டை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருமண மண்டபத்தில் தலைவர் சுத்தானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது சரஸ்வதி அருள்பெற்ற நம்குலக் கவிஞர் 'ஒட்டக்கூத்தர்', செங்குந்தர் மரபைச் சேர்ந்தவர் என்பதை பாமர மக்களும் தெரிந்துகொள்ளும் வகையில் 'ஒட்டக்கூத்தர் நாடகம்' மூலமாக உலகறியச் செய்தமைக்கு திரைப்பட நடிகர், நாடக மன்னர் திரு. R.S.மனோகர் அவர்களைச் சிறப்பு விருந்தினராக வரவழைத்து பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார். வெள்ளிவிழா மலரையும் தலைவர் தம் பொற்கரங்களால் வெளியிட்ட பெருமையையும் சென்னைப் பெருநகர் சங்கம் பெற்றிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

மேலும் 02.10.1999 அன்று நடைபெற்ற ஆண்டுவிழாவின்போது சங்கக் கட்டடத்தில் கட்ட நிதி அளித்தவர்களின் பெயர்க் கல்வெட்டை திருமதி.பரமேஸ்வரி ரத்தினவேல் அவர்கள் முன்னிலையில் தலைவர் சுத்தானந்தம் அவர்கள் திறந்துவைத்தார்கள். அக்கல்வெட்டைக் காணும்போதெல்லாம் தலைவர் சுத்தானந்தம் அவர்களின் தெய்வத் திருமுகம் எங்கள் கண்முன் நிற்கிறது.

02.10.2002 அன்று நடைபெற்ற ஆண்டு விழாவிற்கு வாழ்த்துரை வழங்க வருகை தந்தவர்களுள் முதன்மையானவர் நமது தலைவர் சுத்தானந்தம் அவர்கள். விழாவில் உரையாற்றியபோது செங்குந்தர் இனத்தை MBCஇல் சேர்க்க முதல்வரைச் சந்தித்த செய்தியைக் கூறினார். மேலும் நம் சமுதாய மக்களுக்கு ஈரோட்டில் நடைபெறுவதைப் போன்று சென்னையிலும் வேலைவாய்ப்பு மையம் ஒன்று உருவாக்கவேண்டும் என்ற தம் உள்ளக்கிடக்கை வெளிப்படுத்தினார்.

தலைவர் சுத்தானந்தம் அவர்கள் எந்த திட்டங்களைக் கொண்டுவந்தாலும் அவருக்கு சென்னைப் பெருநகர் சங்கம் முழு ஒத்துழைப்பினை நல்கி வந்துள்ளது. 18.01.2004 அன்று நடைபெற்ற தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் செயற்குழுக்கூட்டத்தின்போது அதன் கட்டட நிதிக்காக சென்னைப் பெருநகர் சங்கம் சார்பாக ரூ.2,15,093 வசூல் செய்து அதற்கான காசோலையை தலைவர் சுத்தானந்தம் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

சீர்பணிச் செம்மல்:

07.11.2004 சைதாப்பேட்டை SDP சம்பூர்ணம்மாள் திருமண மண்டபத்தில் திரு. S.V. இராஜாபாதர் அவர்கள் தலைமையில் திரு. D.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையில் தலைவர் சுத்தானந்தம் அவர்களுக்கு சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம் **மணிவிழா** எடுத்தது. இவ்விழாவில் நீதியரசர் திரு. T.N.சிங்காரவேலு அவர்கள் தலைவர் சுத்தானந்தம் அவர்களுக்கு **"சீர்பணிச் செம்மல்"** என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பு செய்தமை பொன்னேட்டில் பொறிக்கவேண்டிய பொன்னான நிகழ்வாகும்.

தலைவர் சுத்தானந்தம் அவர்கள் பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை. நீறு இட்ட நெற்றியுடன் தெய்வீக வடிவினராகத் திகழ்ந்தவர்.

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்".

என்ற குறள்மொழிக்கேற்ப செயற்கரிய செயல்களைச் செய்தவர். "கருமம் செய்யக் கைதூவேன் என்று தம் குலத்தை உயர்த்தச் செய்வதற்குரிய முயற்சிகள் அத்தனையும் செய்தார்

"நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்"

எனும் வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப "குடிசெய்வல்" என்று தம் குலத்தை உயர்த்த என்றென்றும் ஓயாது வாழ்நாளெல்லாம் உழைத்த வாய்மையாளர்தான் நமது தலைவர் சுத்தானந்தம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

அவர் வழியில் நடைபோடுவோம். வளர்க சுத்தானந்தம் புகழ்!

செங்குந்தர் குலத் தோன்றல்
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை – அந்நாடு
வேற்று நாடாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவது இல்"

என்ற பழமொழி நானூறு பாடலில் கூறப்பட்டுள்ள மொழிக்கு ஒப்ப வாரியார் சுவாமிகள் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் அறிந்தவர். பட்டி தொட்டிகளிலெல்லாம் இவருடைய வெண்கலக் குரல் ஒலித்தது. "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்னும் மொழிக்கு ஒப்ப சிறப்பு பெற்றவர்.

"எப்பாரும் எப்பதமும் எங்ஙனும் நான்சென்றே
எந்தை நினதருட் புகழை இயம்பிடல் வேண்டும்"

என்ற வள்ளலாரின் அருட்பாவில் வேண்டியுள்ளது போல் உலகெங்கும் சென்று இறைவன் அருட்புகழை இயம்பியவர். அவர்தான் நம் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

காங்கேய நல்லூரில் செங்குந்த வீரசைவ மரபில் சாமியண்ணா என்ற சிவ பக்தர் வாழ்ந்து வந்தார். சாமியண்ணாவின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. தஞ்சம்மாள். இவர்களுக்கு நான்காவது மகனாகப் பிறந்தவர் சிவத்திரு. மல்லையா அவர்கள். மல்லையா அவர்களின் துணைவியார் திருமதி. கனகவல்லி அம்மையார். சிவத்திரு. மல்லையா அவர்களுக்கும் திருமதி. கனகவல்லி அம்மையார் அவர்களுக்கும் பராபவ ஆண்டு ஆவணித் திங்கள் 9ஆம் நாள் (25-8-1906) சஷ்டி திதி சுவாதி நட்சத்திரத்தில் போற்றுதலுக்குரிய திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் நான்காவது மகனாகத் தோன்றினார். இவருடன் பிறந்தவர்கள் மொத்தம் பதினொருவர்.

1. ஜீவாட்சி அம்மாள்
2. கமலாட்சி அம்மாள்
3. மதுசூதன சிவம்
4. கிருபானந்தவாரி
5. உமாமகேஸ்வரி
6. ஸ்ரீ சைலவாசன்
7. திருமாமணாள சிவம்
8. சச்சிதானந்த சிவம்
9. மயூரநாதசிவம்
10. கேதாரீஸ்வரி
11. திருப்புகழ்மணி

ஆகியோர் ஆவர். இவருடைய தந்தையே இவருக்கு ஆசிரியராக இருந்து மூன்று வயது முதல் எழுத்தறிவித்து இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சி பெறச் செய்தார். இசைக் கலையிலும் பயிற்சி அளித்து இசைப் பேருரைகள் (இன்னிசை விரிவுரைகள்) நிகழ்த்துமாறு செய்தார். பன்னிரண்டு வயதிலேயே பத்தாயிரம் பாடலுக்கு மேல் மனப்பாடம் செய்தவர். இதை ஒரு முறை தொலைக்காட்சிப் பேட்டியின்போது அவரே தெரிவித்துள்ளார். ஐந்து வயதில் லிங்கதாரணம் செய்விக்கப்பெற்று, பன்னிரண்டு வயதிலேயே தீட்சை செய்து "வாமதேவ சிவம்" என்ற பெயர் சூட்டப்பட்டது. இருபத்து மூன்று வயதில் சென்னையில் திருப்பள்ளித் தெருவில் (ஆனைகவுனி) பிரம்மஸ்ரீ தென்மடம் வரதாச்சாரியார் அவர்களிடம் முறையான வீணைப் பயிற்சியும் பெற்றவர்.

அக்கால வழக்கப்படி பத்தொன்பது வயது நிரம்பிய பொழுது தாய்மாமா திரு. வே. சிவகுரு முதலியார் அவர்களின் புதல்வி அமிர்தலட்சுமி அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். தம் இசைப் பேருரையின் மூலம் நாளும் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தார். எத்தனையோ அருள் நெறி விளக்க நூல்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். "திருப்புகழ் அமிர்தம்" எனும் மாத இதழின் மூலம் ஆற்றிய தெய்வீக, இலக்கியப் பணிகள் ஏராளம். முருகப் பெருமான் மீது அளவுகடந்த பக்தி கொண்டவர். தனி ஒருவராக முயன்று பல திருக்கோயில்களைப் புதுப்பித்தும் சீர்ப்படுத்தியும் செய்த, என்றும் நிலைபெற்று இருக்கக்கூடிய திருப்பணிகள் ஏராளம்.

இவருடைய இலக்கியச் சொற்பொழிவு, இசைப் பேருரைகளில் அரிய கருத்துகளையும் தத்துவங்களையும் கூறுவார். பல தத்துவங்களுக்கு விளக்கங்கள் அளிப்பார். தெரியாத செய்திகளைத் தன்னுடைய நுண்மான் நுழைபுலத்தால் அறிந்து வெளிப்படுத்துவார். புரியாத கருத்துகளை எளிய, அன்றாட வாழ்வின் நிகழ்வுகளை உதாரணம் காட்டி விளக்குவார். வாழ்வியல் தத்துவங்களை அனைவரும் அறியும்படி விளக்கிடுவார். நகைச்சுவையாகப் பேசுவார். பல்வேறு இலக்கியங்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக் காட்டுவார். சிறிய சிறிய துணுக்குகள், நீதிக் கதைகள் பாடல்கள், புராணக்கதைகள், சமஸ்கிருத சுலோகங்கள் மற்றும் அனுபவங்களை அவ்வப்போது குறிப்பிடுவார். எந்தக் குறிப்பும் நூலும் எதிரில் இல்லாமலே ஆற்றொழுக்காக, அற்புதமாக, அடுக்கடுக்கான செய்திகளைக் கூறுவதில் இவருக்கு நிகர் இவரே.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்னும் திருவள்ளுவரின் மொழிக்கு முழு இலக்கணமாகத் திகழ்ந்தவர். இலட்சக்கணக்கான மக்களின் நெஞ்சங்களில் குடியிருப்பவர். திருப்புகழ் ஜோதி, அருள்மொழி அரசு, ஷட்பதானந்தா, இசைப்பேரறிஞர், கலைமாமணி, அமுதமொழிக் கொண்டல், ப்ரவசன சாம்ராட், இலக்கிய முதுமுனைவர், ஞானக் கதிரவன், முத்தமிழ் வள்ளல் போன்ற நூற்றுக் கணக்கான பட்டங்களைப் பெற்றவர். மக்களால் அவர் 64வது நாயன்மார் என்று போற்றப்படுகிறார். இவ்வளவு சிறப்புகளும் தகுதிகளும் உடைய திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் செங்குந்தர் குலத்தைச் சேர்ந்தவர் என்பது நமக்குப் பெருமை. வணங்கி, போற்றிப் பாராட்டி மகிழ்வது நம் கடமையாகும்.

நம் செங்குந்தர் குலத்துதித்த பெரியார்
இவர் பெருமையை எவர்தான் அறியார்
இறைப்பற்று கொண்ட ஒழுக்க நெறியார்
ஆவி துறந்தும் நம்மை விட்டுப் பிரியார்
தமிழுக்கு அரும்பணி ஆற்றிய பெரியார்
என்றும் தமிழினம் போற்றுதலுக்கு உரியார்
நம் செங்குந்த குலத்துக்கே உரியார்
அவரே திருமுருக கிருபானந்த வாரியார்.

வாரியாரின் விவரக்குறிப்பு

பிறப்பு	:	25-8-1906 - பராபவ ஆண்டு, ஆவணி ஒன்பதாம் நாள் சஷ்டி திதி, சுவாதி நட்சத்திரம்
மரபு	:	செங்குந்தர் வீரசைவ மரபு
ஊர்	:	காட்பாடிக்கு அருகில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள காங்கேயநல்லூர் என்னும் சிற்றூர்
பெற்றோர்	:	தந்தையார் - மல்லையதாசர், மாபெரும் புராணவல்லுனர் தாயார் - கனகவள்ளி அம்மையார்
இயற்பெயர்	:	கிருபானந்தவாரி - கிருபை - கருணை, ஆனந்தம். இன்பம்; வாரி - கடல். சொற்பொழிவால், மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துபவர்.
கல்வி	:	தந்தையாரிடம் கல்வி, 3 வயதில் எழுத்துக்கள் அறிந்தார், 5 வயதில் ஏடு படித்தார், 8 வயதில் வெண்பா பாடும் ஆற்றல், 10 வயதில் 10 ஆயிரம் பாடலுக்கு மேல் மனப்பாடம். தன் தந்தையாரிடமே இலக்கண, இலக்கியங்களைக் கசடறக் கற்றார்.
சிவலிங்கதாரணம்	:	5 வயதில் திருவண்ணாமலை - பாணிபத்திர தேவர் மடத்தில் சிவலிங்க தாரணம் செய்விக்கப் பெற்றார்.
வீணை பயிற்சி	:	4 ஆண்டுகள். குரு : ஆனைகவுளி தென்மடம் பிரம்மஸ்ரீ வரதாச்சாரியார்.
உடன் பிறந்தோர்	:	1. ஜீவாட்சி அம்மாள் 2. கமலாட்சி அம்மாள் 3. மதுசூதன சிவம் 4. கிருபானந்தவாரி 5. உமாமகேஸ்வரி 6. ஸ்ரீ சைலவாசன் 7. திருமாமணாளசிவம் 8. சச்சிதானந்த சிவம் 9. மயூரநாதசிவம் 10.கேத்தாரீஸ்வரி 11. திருப்புகழ்மணி
திருமணம்	:	19 ஆம் வயதில் தாய்மாமன் சிவகுரு முதலியார் மகள் அமிர்தலட்சுமியைத் திருமணம் செய்தார்.
பணி	:	19வது வயதில் சொற்பொழிவு செய்யத் தொடங்கினார். ஆயுள் முழுவதும் ஆன்மீகச் சொற்பொழிவே அவர் பணி.
நடத்திய இதழ்	:	'திருப்புகழ் அமிர்தம்' என்ற மாதஇதழ் 1936இல் தொடங்கி தொடர்ந்து 37 ஆண்டுகள் நடத்தினார்.
விருதுகள்	:	சுமார் 200க்கு மேல் விருதுகள், அதில் முக்கியமானது 'திருப்புகழ் ஜோதி', 'அருண்மொழி அரசு', 'சரஸ்வதி காடாக்ஷம்ருதம்', 'இசைப்பேரறிஞர்', 'கலைமாமணி', 'அமுதமொழிக் கொண்டல்',


அருள்மொழி அரசு
கிருபானந்த வாரியார்

திருப்பணிச் சக்கரவர்த்தி, திருப்பணிச்சரபம், 64-வது திருப்பணித் தொண்ட நாயனார்.

படைப்புகள்	:	ஏறத்தாழ 150 நூல்கள் - 500க்கு மேற்பட்ட கட்டுரைகள், 83 குறுந்தகடு (சொற்பொழிவு),
கலந்து கொண்ட திரைப்படங்கள்	:	துணைவன், திருவருள், தெய்வம்.
திருப்பணிகள்	:	ஏராளமான கோயில் திருப்பணிகள், ஏழை, எளிய மாணவர்களுக்கு உதவி, ஈட்டிய வருவாய் அனைத்தும் அறப்பணிக்கே அர்ப்பணிப்பு
தந்தையார் மறைவு	:	தந்தையார் - 1950-இல் இருக்கும்போதே அவருக்கு சமாதிக் கோயில் கட்டினார். பாணலிங்கத்தின் கீழ் சமாதியானார்.
தாயார் மறைவு	:	தாயார் - 1977இல். தாயார் நந்தியின் கீழ் சமாதியறை.
		துணைவியார் - 16-3-1985-இல் மறைவு.
வாரியார் மறைவு	:	1993 நவம்பர் - லண்டனிலிருந்து இந்தியா வரும் போது விமானத்திலேயே மறைந்தார்.
நினைவு	:	காங்கேயநல்லூரில் திருமுருக கிருபானந்த வாரியாரின் திருக்கோயில். காங்கேய நல்லூரில் அவர் வாழ்ந்த வீடு - நினைவில்லம்.
இந்திய அரசு	:	இவர் உருவம் பொறித்த 5 ரூபாய் மதிப்பிலான தபால் தலை 2006ஆம் ஆண்டு வெளியிட்டு சிறப்பு செய்துள்ளது.

வாரியார் மொழிகள்

வந்தால்	*போகாதது*	-	*புகழும்*	*பழியும்*
வரும்	*போகும்*	-	*இன்பமும்*	*துன்பமும்*
போனால்	*வராதது*	-	*மானம்*	*உயிர்*
தானாக	*வரும்*	-	*இளமை*	*முதுமை*
நம்முடனே	*வருவது*	-	*செய்பாவமும்*	*புண்ணியமும்*

வாரியாரின் நகைச்சுவை

தொகுப்பு : S. ஜெயக்குமார், திருமழிசை

சிரிப்பு என்பது மனிதனுக்கே உரிய கலை. மனிதனுக்கு மட்டுமே சிரிக்கத் தெரியும். "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும். சிரிக்கிறவர்களின் அகமும் முகமும் பொலிவுடன் விளங்கும். ஒவ்வொரு மனிதனுக்கும் நகைச்சுவை உணர்வு வேண்டும். மகாத்மா காந்தியடிகள் "நான் நகைச்சுவை உணர்வுமட்டும் இல்லாமல் இருந்திருந்தால் எப்போதோ காலாவதியாகி இருப்பேன்" என்று கூறியுள்ளார். சிரிக்கும்போது உடல் பயிற்சிக்குள்ளாகிறது. மனம் மென்மை அடைகிறது. இதயம் முறையாக இயங்குகிறது. இரத்த அழுத்தம் சீராகிறது. மூளை அதிக இணைப்புகளை உண்டாக்குகிறது. நகைச்சுவை உணர்வு இருந்தால் எந்தத் தடையையும் எதிர்கொள்ள முடியும். "இடுக்கண் வருங்கால் நகுக" என்றார் வள்ளுவர். துன்பத்தை சிரிப்பின் மூலம் ஆற்றமுடியும். சொல்பவர்களும் சிரித்து கேட்பவர்களும் சிரித்து, அனுபவிப்பது நகைச்சுவையை மட்டுமே.

அன்பிலே தோன்றி தமிழிலே மலர்ந்து, இசையிலே மணம்வீசி, அறமாய் அருளாய்க் கனிந்தவர் வாரியர் சுவாமிகள். பாமரன் உள்ளத்தில் பரமனைப் பதித்தவர். வாரியார் சுவாமிகள் மிகுந்த பக்தியும் நகைச்சுவை உணர்வும் உடையவர். "தம் நகைச்சுவையால் பாமரமக்களின் உள்ளத்தைத் தொட்டவர். அவர் தமது உரையின்போது அவ்வப்போது நகைச்சுவையாகப் பேசுவார். பாமரமக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய கருத்துக்களை நகைச்சுவையில் குழைத்துக் கொடுப்பார். இவரது சொற்பொழிவில் ஆன்மீகம் ஆழம்காணும். நகைச்சுவை நர்த்தனமிடும். நகைச்சுவை என்பது சமயோசித அறிவால் நிகழ்வது. இவருடைய நகைச்சுவைகள் அர்த்தத்துடன் இருக்கும். சொற்பொழிவின் இடைஇடையே சிறுசிறு வினாக்கள் கேட்பார். அந்தக் கேள்விகளுக்கு முதலில் பதிலளிக்கும் பிள்ளைகளுக்கு விபூதியும் கந்தசஷ்டிக் கவசம் புத்தகம் ஒன்றும் பரிசாக அளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தவர். ஒரு செய்திக்கு பல இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டும் வல்லமை உடையவர். இவருடைய சொற்பொழிவின்போது நிகழ்ந்த நகைச்சுவைகள் சிலவற்றை இங்கு காணலாம்.

சொல்லின் செல்வர்

வாரியார் ஒரு சமயம் ஓர் ஊரில் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தார். அவர் மிகுந்த சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, பாதியில் ஒவ்வொருவராக எழுந்து போய்க்கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்து வாரியர் சொன்னார். ராமாயணத்தில் அனுமனை "சொல்லின் செல்வர்" என்று குறிப்பிடுவார்கள். இந்த ஊரிலும் சொல்லின் செல்வர்கள் பலர் இருப்பதைப் பார்க்கிறேன் என்றார். இவர் யாரைச் சொல்கிறார் என்று தெரிந்து கொள்ள ஆவலுடன் நின்றனர். வாரியார் தொடர்ந்து "நான் நல்ல பல விஷயங்களைச் சொல்லின், அதைக் கேட்காமல் செல்பவரைத்தான் சொல்கிறேன்" என்றார். இடையில் எழுந்து சென்றவர்கள் மீண்டும் அவர்கள் இடத்திற்கு வந்து அமர்ந்தனர்.

(சொல்லின் செல்வர் = அனுமன் பேச்சிலே வல்லவன்

சொல்லின் செல்வர் = நல்ல கருத்து சொன்னால் கேட்காமல் செல்பவர்கள்)

வந்தார் வருணபகவான்

வடசென்னையில் உள்ள விநாயகர் கோயிலில் வாரியார் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். தலைப்பு கந்தபுராணம். சொற்பொழிவு நடை பெறுவதற்கு முன்னமே மக்கள் அவர்களுக்குரிய இடத்தில் இடம் பிடித்து அமர்ந்துவிட்டனர். வாரியார் வருகைக்காகக் காத்திருந்தனர். அந்த நேரத்தில் திடீரென்று மழை. அனைவரும் கோவிலுக்குள் சென்று நெருக்கமாக அமர்ந்து கொண்டனர். சொற்பொழிவாற்ற வந்த வாரியார் தான்பேசும் போது எடுத்த எடுப்பிலேயே அதுபற்றி குறிப்பிட்டுப் பேச ஆரம்பித்தார். நிகழ்ச்சி ஏற்பாடு செய்த அன்பர்கள் கந்தபுராணச் சொற்பொழிவு, கந்தபுராணச் சொற்பொழிவு என்று வால் போஸ்ட்டரை வருணலோகம் வரை ஒட்டிவிட்டார்கள். வருணபகவான் பார்த்தார். ஆ! சூரபத்மனின் சிறையிலிருந்து நம்மை விடுவித்த முருகன் கதை அல்லவா? நாமும் கேட்க வேண்டுமே என்று அவரே வந்துவிட்டார். அதுதான் மழை என்றார். எல்லோரும் கைதட்டி சிரித்து மகிழ்ந்தனர். மேலும் நீங்கள் எல்லோரும் நெருக்கமாகவும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும் அதனால் உங்களை வருணபகவான் நெருக்கமாக அமரச்செய்துவிட்டார் என்றார் வாரியார். மேலும் பலத்த கரவொலி எழுப்பி மகிழ்ந்தனர்.

வார்த்தை ஜாலம்

வள்ளி

அரிச்சந்திரனின் மனைவி சந்திரமதி அல்ல, சந்திரவதி. குணவதி, பார்வதி, திலகவதி என்பதுபோல. சம்மந்தி அல்ல. மந்தி என்றால் குரங்கு. சம்பந்தி என்றே சொல்ல வேண்டும் என்பார்.

ஒரு முறை வாரியார் தன் சொற்பொழிவின் போது முருகப் பெருமானின் துணைவி வள்ளி நாயகிக்கு அந்தப் பெயர் வந்ததற்குக் காரணம் என்ன தெரியுமா? என தனக்கே உரிய பாணியில் புதுமையான விளக்கம் அளித்தார். முருகன் நாம் கேட்டதையெல்லாம் தரும் “வள்ளல்”. வள்ளல் என்பது ஆண்பால். அதன் பெண்பால்” வள்ளி. ஆக வள்ளலின் மனைவி “வள்ளி” ஆனார். இவ்விளக்கத்தைக் கேட்கும் எவர் மனமும் இன்புறும்.

கள்

கள்ளைக் குடித்தால்தான் போதைதரும் என்பது இல்லை, ‘கள்’ என்று சொன்னாலே போதும் பலர் மயங்கி விடுவர். ஒருவரை “நீ” என்று சொல்லுவதற்குப் பதில் “நீங்கள்” என்று சொல்லில் பாருங்கள். அவர் எளிதில் மயங்கி விடுவார். எல்லாம் அந்த “கள்” செய்யும் வேலைதான் என்பார் வாரியார்.

இல்லாள்

அதேபோல் “இல்லாள்” என்ற சொல்லுக்கு வாரியார் சுவாமிகள் தரும் விளக்கம் சுவையானது. இல்லாள் = இல்லத்தை ஆள்பவள் என்று பெண்பாலாகத்தான்

குறிப்பிடுகிறோம். அதையே ஆண்பாலாகச் சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னால் "இல்லான்" அதாவது இல்லாதவன் என்று ஆகிவிடும். அதனால்தான் பிச்சைக்காரன் கூட "அம்மா" என்றுதான் பிச்சை கேட்பான்.

காமன்

நமது புராணங்களில் "காமன்" (மன்மதன்) என்று ஒரு தேவன் வருவான். அவன் அருள் இருந்தால்தான் மனிதர்களுக்கு சிருங்கார உணர்வேதோன்றும். இவனுக்குக் "காமன்" என்று ஏன் பெயர் வைத்தார்கள் தெரியுமா? இவன் மதங்களையெல்லாம் கடந்து எல்லா நாட்டவர்க்கும் பொதுவான காதல் தேவனாய் விளங்குகிறான். இவன் எல்லோருக்கும் காமன் என்று நகைச்சுவையாக விளக்கம் தருவார். எல்லோருக்கும் சிருங்கார உணர்வைத் தோற்றுவிக்கும் தேவன் "காமன்" என்னும் தேவன் எல்லோருக்கும் Common.

அறிவு குடியிருக்கிறது

ஒருமுறை வடலூரில் இருந்து ஈரோட்டுக்கு ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார் சுவாமிகள். சுவாமிகள் குளிக்கும் அறைக்குச் சென்று கை கால்களை அலம்பிக்கொண்டு திருநீற்றுப் பையை எடுத்து நெற்றி நிறைய திருநீற்றைப் பூசிக்கொண்டார். அந்த ரயிலில் பயணம் செய்த மாணவன் ஒருவன் ஐயா நெற்றிக்கு ஏன் வெள்ளையடித்துக் கொள்கின்றீர் எனக் கேட்டுச் சிரித்தான். உடனே சுவாமிகள், தம்பி குடியிருக்கிற வீட்டுக்குத் தானே வெள்ளையடிப்பார்கள். குட்டிச்சுவருக்கு வெள்ளையடிக்க மாட்டார்கள். நெற்றியில் அறிவு குடியிருக்கின்றது என்று நான் வெள்ளையடித்துக் கொண்டேன் என்றார். மாணவன் முகம் பேயறைந்தது போல் ஆயிற்று. அம்மாணவன் ரயிலைவிட்டு இறங்கும் பொழுது சுவாமி சிறிது திருநீறு கொடுங்கள் என்று கேட்டு வாங்கிப் பூசிக்கொண்டார்.

மீண்டும் கரூர்

கரூரில் வாரியார் சுவாமிகள் ஆற்றிய தொடர் சொற்பொழிவு முடிவடையும் நாள். பாராட்டுவிழா. பாராட்டிப் பேசிய அன்பர் ஒருவர் மீண்டும் வாரியார் சுவாமிகள் பேச்சை எப்போது கேட்போமோ? என்ற ஏக்கத்தோடு மீண்டும் கரூருக்கு எப்போது வருவீர்கள் சுவாமி? என்று கேட்டார். அதற்கு வாரியார் சுவாமிகள் கரூருக்கா? கருவூருக்கு (கர்ப்பப்பை) (தாயின் கருப்பை, பிறவி) மீண்டும் வரக்கூடாது என்பதற்காகத்தானே இத்தனை ஆண்டுகள் இறைவனை வேண்டி பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். என்னை மீண்டும் கரூருக்கு வாருங்கள் என்று சொல்கிறீர்களே! என்றார் அரங்கம் கரவொலியால் அதிர்ந்தது.

நீறுஇட்டார்

சுவாமிகள் ஒருமுறை கூட்டத்திற்குப் போகும் வழியில் நாத்திகர்கள் (கடவுள் மறுப்பாளர்கள்)

“திருநீறு இட்டார் கெட்டார்”

“திருநீறு இடாதார் வாழ்ந்தார்” என்று வாசகங்களை வைத்திருந்தனர். உடன் வந்தவர்கள் காலம் கெட்டுப் போச்சு, என்ன எழுதி இருக்கிறார்கள் பார்த்தீர்களா? என்றனர். அதற்கு வாரியார் சரியாகத்தானே எழுதி இருக்கிறார்கள் என்றார். என்ன சாமி நீங்களும் இப்படிச் சொல்கிறீர்களே என்றனர். அதற்கு வாரியார் நன்றாகப் பதம் பிரித்துப்பார் என்று கூறி பதம்பிரித்துச் சொன்னார்.

திருநீறு (இட்டார்) இட்டு+ஆர் கெட்டார்?

திருநீறு இடாதார் (இடாது+ஆர்) வாழ்ந்தார்

என்று சொல்ல வாரியாரின் அறிவுத்திறத்தைப் போற்றினர்.

மணிவிழா, Money விழா

1966இல் வாரியார் சுவாமிகளுக்குப் பெரிய அளவில் மணிவிழா நடத்தவேண்டும் என அவரது நண்பர்களும், உற்றார் உறவினர்களும் திட்டமிட்டனர். சுவாமிகள் அதை விரும்பவில்லை. அதற்கு சுவாமிகள் தனக்கே உரிய நகைச்சுவை பாணியில் சொன்ன காரணம், சிலர் மணிவிழா என்று மணி (Money) திரட்டும் விழாவாகச் செய்து கொள்வார்கள் எள்ளளவும் விரும்பவில்லை என்றார்.

தலைவனுக்குத்தான்

ஒருமுறை மதுரை மீனாட்சியம்மன் கோயில் வளாகத்தில் திருநாவுக்கரசரின் பெருமைகள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்திக்கொண்டிருந்தார். திருநாவுக்கரசரை கல் தூணில் பிணைத்து கடலில் போட்டனர். அது கனமற்றதாகி மிதந்தது. பின் கரையேறினார் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் நாத்திக இயக்கத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவர் சரி, உங்க தலைவர் மாதிரி உங்களையும் கல்லோடுகட்டி பொற்றாமரைக் குளத்தில் தூக்கி போட்டுடலாம். அவர் தொண்டராகிய நீங்க தப்பித்து வருகிறீர்களா என்று பார்க்கலாமா? என்று கேட்டார். எல்லோரும் திடுக்கிட்டனர். வாரியார் நிதானமாக சரி என் தலைவர் இருக்கட்டும் . உன் தலைவர் யார்? அவர் மதுரைக்கு வந்தா அவருக்கு நீ என்ன செய்வே? என்று கேட்டார் அதற்கு அவர் எல்லோரும் அவருக்கு மாலை மரியாதை செய்வார்கள். நானும் மாலை மரியாதை செய்வதுதான் என்முதல் வேலை என்றார். அவர் சரி தொண்டனான உனக்கு யாரும் மாலை மரியாதை செய்யமாட்டார்களா என்று வாரியார் கேட்டார். அதற்கு அந்த நபர் அதெப்படி? தலைவருக்குத்தான் மாலை மரியாதை செய்வார்கள், தொண்டனுக்கு எப்படிக் கிடைக்கும் என்றார் அந்தநபர். அதுபோலத்தான் அற்புதசக்தி என் தலைவனான திருநாவுக்கரசருக்கு மட்டும்தான் உண்டு. தொண்டனான எனக்கு அந்த சக்தி இல்லை என்றார்.

சிக்கந்தர் மலை

ஒருமுறை திருப்பரங்குன்றத்தில் சுவாமிகள் சொற்பொழிவு நிகழ்த்திய போது கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து, சுவாமி இந்த திருப்பரங்குன்றத்தை “சிக்கந்தர்” மலை

வழிபாடு

சைதை S. தங்கராஜ் செங்குந்தர், மாநில செயற்குழு உறுப்பினர்

நாம் வீட்டில் இறைவன் திருவுருவப் படங்கள் வைத்து வழிபடுகிறோம். கோயிலில் இறைவனை வடிவங்களில் வழிபடுகிறோம். வழிபடுதல் என்றால் என்ன? வழிபாடு என்பதற்கு விளக்கம் கேட்டால் ஒவ்வொருவரும் ஒரு விளக்கம் சொல்வோம். அத்தனை விளக்கங்களும் ஏற்புடையதாகவே இருக்கும். பொதுவாக ஏற்படுத்தப்பட்ட அல்லது பழக்கப்பட்ட மரபுகளை நியதிகளைப் பின்பற்றி இறைவனைப் பூசிக்கும் அல்லது ஆராதிக்கும் முறையே வழிபாடு. வழிபாடு என்பது மதம், குலம், நாடு, இடம், குடும்பப் பழக்க வழக்கங்கள் முதலானவற்றின் அடிப்படையில் பல்வேறு வழிமுறைகளில் பின்பற்றப்படுகிறது. வழிபாடு, சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப, திருநாள், வீட்டு விசேஷங்கள், பிரார்த்தனைகள் அல்லது வேண்டுதல் போன்ற நிகழ்வுகளுக்கு ஏற்பவும் மாறுபடும்.

வழிபாட்டின் போது நாம் இருகரம் கூப்பி இறைவனை வணங்குகிறோம். வணக்கம் என்பதற்கு வா+இணக்கம்=வாருங்கள் தங்கள் வரவை ஏற்றுக் கொள்கிறோம் என பொருள் விளக்கம் கூறுவர். வாரியர் சுவாமிகள் ஒருமுறை தன் சொற்பொழிவின்போது வணக்கத்திற்கு விளக்கம் கூறியுள்ளார். வணக்கத்தின் போது நாம் வலது, இடது ஆகிய இரு கைகளையும் இணைத்துக் கும்பிடுகிறோம். இடது கையை நாம் பெரும்பாலும் எந்த செயலுக்கும் பயன்படுத்துவதைத் தவிர்ப்போம். இடதுகையால் கொடுப்பதை அவமரியாதையாகக் கொள்வர். அதைத் கீழான வேலையைச் செய்யப் பயன்படுத்துகிறோம். எனவே இடது கையை கீழ்மையுடையதாகவும், வலது கையை மேன்மை உடையதாகவும் கருதப்படுகிறது. கீழான (இடது) மேலான (வலது) இருகைகளையும் சேர்த்து இறைவனை கும்பிடுவதன் தத்துவம் என்னவென்றால், கீழான நாம் மேன்மையுடைய இறைவனோடு ஒன்றவேண்டும் என்பதே இரண்டு கைகளையும் சேர்த்துக் கும்பிடுவதாகும் என்பார் வாரியார் சுவாமிகள்.

வழிபாடு என்பது இறைவனை ஆராதிக்கும் முறை. இறைவனோடு தொடர்பு கொள்ளக் கூடிய ஒரு வழிமுறை. மனத்தை இறைவனிடம் வழிப்படுத்துவது வழிபாடாகும். வழிபாடு என்பது ஒருமுறைமை. ஒரு உயிர்ப்புள்ள முயற்சி. அகநிலைப் பயிற்சி மூலம் தனு, கரண, புவன, போகங்களை அனுபவிக்கும் நம் ஆன்மா, தன்னை உயர்த்திக் கொள்ளத் துணை செய்வது வழிபாடு. குறைபாடுகள் உடைய் இந்த உயிர்கள் மேன்மை அடைய முயலும் ஒரு வழிமுறைதான் வழிபாடு. நன்னெறியில், ஆன்மநெறியில், இறைவனிடத்தில் மனத்தைச் செலுத்தி உய்வதற்கு வழிவகை செய்வது வழிபாடு.

வழிபாடு புறவழிபாடு, அகவழிபாடு எனகொரு வகைப்படும். இறைவனைப் புறத்தே பூஜை புனஸ்காரங்கள் செய்து படையலிட்டு வழிபடுவது புறவழிபாடு. தியானம் செய்து மனத்தை ஒருமுகப்படுத்தி இறைவனை வழிபடுவது அகவழிபாடு. அகவழிபாடே மேன்மையுடையது. மேலும் வழிபாடு தனிவழிபாடு, கூட்டுவழிபாடு என இரண்டு வகைப்படும். வழிபடுவோர் தம் நன்மைகருதி, தான்மட்டும் வழிபடுவது தனிவழிபாடு. பலரும் கூடி பிறருக்காகவும், பொது நன்மைக்காகவும் வழிபடுவது கூட்டு வழிபாடு. இதில் கூட்டுவழிபாடு சிறப்புடையது என்பர்.

என்று பெயர்மாற்றம் செய்ய வேண்டும் என்று இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்த சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து தங்கள் கருத்து என்ன? என்று கேட்டார். அதற்கு வாரியார் இதில் என்ன தவறு இருக்கிறது? ‘‘சிக்கந்தர்’’ மலை என்று பெயர்வைத்தால் வைத்துக் கொள்ளட்டுமே என்றார். அனைவரும் அது எப்படி? அது பிரச்சினையை உண்டுபண்ணாதா எனக்கேட்டனர். இதனைக் கேட்ட வாரியார் முருகனின் தந்தையார் பெயர் என்ன? சிவபெருமான். முருகனுக்கு வழங்கும் வேறுபெயர் என்ன? கந்தன் இதைத்தான் சி. கந்தன், சி. கந்தர், சிகந்தன், சிக்கந்தர் எனக் குறிப்பிட்டு பெயர் வைக்க முனைகின்றனர். இதில் தவறில்லை என்றார். அனைவரும் ஆரவாரித்து மகிழ்ந்தனர்.

சிவாஜி

வாரியார் சுவாமிகள் ஒருமுறை கோயிலில் திருவிளையாடல் புராணம் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு சிறுவனை எழுப்பி, தம்பி முருகனின் அப்பா பெயர் என்ன? என்று கேட்டார். அது திருவிளையாடல் சினிமா வெளியிடப்பட்டு திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கும் காலம். அப்படத்தைப் பார்த்திருந்த அந்த சிறுவன் சிவாஜி என்று சொன்னான். கூட்டத்தினர் கொல்லென்று சிரித்தனர். வாரியர் கையசைத்து அவர்களை அடக்கிவிட்டு, அவன் சரியாகத்தானே சொல்லியிருக்கிறான். நீங்க நேருவை நேருஜின்னு சொல்றீங்க, காந்தியை காந்திஜின்னு சொல்றீங்க, அதைப் போல்தான் இந்த பையன் இறைவன் சிவாவை சிவாஜின்னு சொன்னான் என்றார். கூட்டத்தினர் வாரியாரின் நகைச்சுவை நயத்தை வியந்தனர்.

முருகன் எப்படித் தூங்குவார்

வாரியார் ஒருமுறை திருமணம் ஒன்றுக்குத் தலைமை தாங்க வந்திருந்தார். அதே திருமணத்துக்கு எம்.ஆர்.ராதாவும் வந்திருந்தார். இருவரும் சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சுக்கு இடையே எம்.ஆர்.ராதா, முருகனுக்கு ஆறு தலைகள் இருக்குன்னு சொல்றீங்க. ராத்திரி எந்த பக்கமா படுத்துத் துங்குவார்? என்று கிண்டலாகக் கேட்டார். உடனே வாரியார் கொஞ்சம் பொறுங்கள் என்று கூறி, மணப்பெண்ணின் பெற்றோரை அழைத்து, நேற்று ராத்திரி தூங்கினீர்களா? என்று கேட்டார். எங்கசாமி தூங்கறது கல்யாணம் நல்லபடியா நடக்கணுமே என்ற ஏக்கத்தில் பலநாள் தூங்கவில்லை என்றனர். உடனே வாரியார் எம்.ஆர்.ராதா பக்கம் திரும்பி, பார்த்தீர்களா? ஒரு பெண் கல்யாணத்தை நடத்திவைக்க நினைத்த இவங்களுக்கே தூக்கம் வரல. கோடானகோடி பக்தர்களைக் காக்கும் ஆறுமுகப்பெருமான் எப்படித் தூங்குவார்? என்றார். திகைத்தார் எம்.ஆர்.ராதா.

இப்படியாக வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவின்போது, எண்ணற்ற நகைச்சுவைகள் இடம்பெறும், அவற்றுள் சிலவற்றைத் தங்களுடன் பகிர்ந்து கொண்டேன் படித்து மகிழ்ந்த தங்களுக்கு வாரியார் ஆசிகள் உரித்தாகுக.

இறைவனை வழிபட நால்வகை நெறிகளை பெரியோர்கள் கூறியுள்ளனர். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதாகும். இறைவனைப்பாடுதல், ஆலயவழிபாடு நிகழ்த்துதல் சரியை நெறி. மலரிட்டு வணங்கி அகத்தும் புறத்தும் வைத்துப் பூசித்தல் கிரியை நெறி. உடல் நினைவின்றி இறைவனோடு ஒன்றியிருப்பது யோகமாகும். சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றும் ஞானத்தை அடைவிக்கும் நெறி.

இறைவனை வழிபடுவோம். நம் ஆன்மா உய்ய வழிகாண்போம். அருள் புரிவாய் கருணைக்கடலே!

இன்பம் பொங்குதே

இன்பம் பொங்குதே 2022 அக்டோபர் 2-இல் நம்
சென்னைப் பெருநகர் செங்குந்தர் ஆண்டு திருவிழா
இனி பாடுவோம் இனிய கீதத்தின் கொண்டாட்டமே
ஆனந்தம் ஆனந்தம் பிரமானந்தமே நம் செங்குந்தம் வளர்ந்திடவே ஆனந்தமே
கல்வியை கற்பித்து காப்போம்! கல்வியை வளர்த்திட செல்வத்தை சேர்ப்போம்!
செல்வத்தால் மனங்களை வளர்த்து இல்லார்க்கு ஈந்து சமுதாயத்தை காப்போம்
வருங்காலத்தில் சங்கத்தை வளர்த்து வளர்ச்சி என்னும் வசந்தத்தை காண்போம்
நமக்கு கிடைத்த சென்னைப் பெருநகர் செங்குந்த தலைவர் ஆறுமுகம் ஐயா அவர்கள்
வயது பாராமல் சமுதாயத்திற்குச் சேவை செய்யும் அற்புத மாமனிதரே!
நமக்கு கிடைத்த தூய உள்ளமே! உன் எண்ணமே சமுதாயத்தின் தூய நெறி!
ஒளிரும் சொக்கத் தங்கமே! உன் கீழ் வளரும் நம் சங்கமே!
தொய்வில்லா வளர்ச்சி கண்டு வளருமே!
அவர்கீழ் கண்ட கூட்டமோ, மரியாதையுடன் பாசத்தில் வளர்ந்து வருங்காலம் மிளிருமே!
அவர் நிழலில் என்றும் ஒற்றுமை பாங்கு மலர்ந்து இனிய பொன்விழா தொடருமே!
பௌர்ணமி நிலவுபோல் ஆண்டு விழா பல வந்தும்,
அசறாமல் செவிக்கு இனிய மேடைப் பேச்சுகள் தந்து,
வாயிற்கும், வயிற்றிற்கும் சுவையான அன்னமிட்டு,
கல்வி கற்போர்க்கு ஊக்க நிதியும் தந்து, சமுதாயத்தை சீர்தூக்கும் எங்கள் தலைவா!
எங்கு சென்றாலும் உன் முகம்பார்த்து வாரி வழங்கும் வள்ளல்களுக்கும்
உன்னுடன் உழைப்பைத்தரும் நல் உள்ளங்களுக்கும்
பாராட்டும் பரிசும் பதக்கமும் தரும் உங்களை மனமார நமது சங்கம் வாழ்த்தி மகிழ்கிறது!
சமுதாய ஒன்றுமை ஐயாவின் பாசப்பற்றுமையே!
அரவணைப்பில் எங்களுக்கு அண்ணனே! பாச நேசத்திற்கு நற்பண்பாளரே!
நம் சமுதாயத்திற்கு ஏற்றமிகு ஏணி போன்ற அன்பாளரே!
உங்கள் கீழ் இன்று காணும் பொன்விழா கூட்டமே, ஒற்றுமையால் கூடிய கூட்டமே!
இனி ஐயா தலைமையில் ஆண்டுதோறும் இந்த இனிய விழா நடக்க
ஆண்டவன் அருளிடும் பொன்விழா இடறில்லா தொடர்விழா!
எல்லோர் வாழ்த்தையும் ஒருசேரப்பெற்ற பொன்விழா!
தொடர்கதைப்போல மலரும் பூத்த மலர்போல் மங்கா வளரட்டும் நம் சமுதாயமே!
இனி மகிழ்ச்சி பொங்கட்டும், நம் சொந்தங்கள் எல்லாம் வாழ்க வளமுடன் நாளெல்லாம்!

- சைதை S. தங்கராஜ் செங்குந்தர், மாநில செயற்குழு உறுப்பினர்

P. SOMASUNDARAM
FOUNDER

S. RAMESH
PROPRIETOR



5/3, Perumal Koil Street Extn.,
Saidapet, Chennai - 600 015.
Mobile : 9381020793

S.S. BLUE METAL WORKS

Nallambakkam Road,
Oonamancherry villege
Chennai

DIRECTOR
The Sri Saidai Mutal Benefit Fund Nidhi Ltd.
Kalaimagal Mutal Benefit Fund Nidhi Ltd.
South Madras Mutal Benefit Fund Nidhi Ltd.

ஆருத்ரா தரிசனம்

நடராஜ பெருமானின் சிறப்பு அபிஷேகத் திருக்கோலம் "ஆருத்ரா தரிசனம்" ஆகும். திருவாதிரை நட்சத்திரத்திற்கு சமஸ்கிருத மொழியில் "ஆருத்ரா" என்று பெயர். மார்கழி மாதத்தில் முழுமதியுடன் கூடிய திருவாதிரை நாளில் "**வியாக்கிரபாதர்**" என்ற முனிவருக்குச் சிவபெருமான் தனது ஆனந்தத் தாண்டவத்தைக் காண்பித்து அருளிய தரிசனமே ஆருத்ரா தரிசனம்.

"**மாத்யந்தினர்**" என்பவர் சிறந்த சிவபக்தர். சிவபெருமானின் தரிசனத்தை நேரடியாகக் காணும் ஆவல் ஏற்பட்டது. எனவே, அவரது தந்தை "**தில்லைவனம்**" என்று சொல்லப்படும் இன்றைய சிதம்பரத்திற்குச் சென்று அங்குள்ள சிவலிங்கத்தை வழிபட்டு வருமாறு மாத்யந்தினரை அனுப்பிவைத்தார் (தில்லை என்பது ஒருவகை மரம்). மாத்யந்தினர் தில்லை வனத்தை வந்து சேர்ந்தபோது ஓரிடத்தில் சிவலிங்கம் ஒன்று ஒளிவீசிய நிலையில் காணப்பட்டது. இதுவே தனது தந்தை குறிப்பிட்ட சிவலிங்கம் எனக்கருதி அதை வழிபட்டு வந்தார்.

அந்த வனத்தில் உள்ள மரங்களில் பூக்கும் பூக்களை அதிகாலையில் எழுந்து பறித்து மாலையாகத் தொடுத்துச் சிவலிங்கத்திற்கு அணிவிப்பார். அதிகாலை இருளில் மலர்கள் சேகரிக்கும்போது அவற்றுடன் வாடிய, உதிர்ந்த மலர்களும் சேர்ந்து வந்தன. இறைவனுக்குப் புதிதாய் மலர்ந்த மலர்கள்தான் பூஜைக்கு உரியது. வாடிய மலர்களும் சேர்ந்து வந்துவிடுவதால் அதுகுறித்து "மாத்யந்தினர்" அழுதார். அப்போது அசரீரி "மகனே நீ மரங்களின் உச்சிக்கும் சென்று நல்ல பூக்களைப் பறிக்கும் வகையில் பற்றி ஏறுவதற்குப் புலிநகங்களைக் கையிலும் காலிலும் தருகிறேன். புலிக்கு இருளிலும் கண் நன்றாகத் தெரிவதுபோல எவ்வளவு இருட்டாயினும் உன் கண் தெளிவாகத் தெரியச் செய்கிறேன் என்றார்". அதன்படி சிறந்த மலர்களைப் பறித்து பூஜை செய்து வந்தார். புலிக்கு "**வியாக்கிரம்**" என்று பெயர். எனவே, புலி நகமும், பார்வையும் பெற்றதால் மாத்யந்தினர் "வியாக்கிரபாத முனிவர்" என்று வழங்கப்பட்டார். வியாக்கிரபாத முனிவருக்கு மனைவியாக வாய்த்தவள் வசிஷ்டரின் சகோதரி. அவர்களுக்கு "உபமன்யு" என்ற மகன் பிறந்தான். குழந்தை காட்டில் சமைத்த கஞ்சியைக் குடிக்க மறுத்து அழுதான். சிவபெருமான் தன் பக்தனின் குழந்தைக்காக தில்லைக் காட்டிற்குப் பாலை வரவழைத்துக் குழந்தைக்குப் புகட்டச் செய்தார். அத்துடன் அக்காட்டில் தன் திருநடனத்தையும் அவருக்குக் காண்பித்து அருளினார். அவ்வாறு வியாக்கிரபாத முனிவருக்காக சிவபெருமான் தில்லை வனத்தில் நடனமாடிய நாள் மார்கழி மாதம் திருவாதிரை நாளாக - ஆருத்ரா தரிசன நாளாகக் கொண்டாடப்படுகிறது. அந்த தில்லை வனமே இன்றைய சிதம்பரம் நடராஜர் கோவில். ஆருத்ரா நாளில் எல்லா சிவன் கோவில்களிலும் நடராஜப் பெருமானுக்கு இரவு முழுவதும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு இறைவன் அருள்பெற்று உய்வோமாக.



CHENNAI RICE INDUSTRIES INDIA(P) LTD

116/1,2,4B,N.Thayirpalayam Village, Chittode Via, Nasiyanur-638 102.
Mail:chennaigateoffice@gmail.com cgriceindustries@gmail.com

NST
SYMBOL OF QUALITY

N. Sadayappa Trading Company



N. Sadayappa Trading Company

Manufacturer of Premium Cotton Lungies

New No.104 (Old No.82), Ramasamy Street, Mannady, Chennai - 600 001.

REGISTERED
NST SYMBOL OF QUALITY
910 ® BRAND
N. SADAYAPPA TRADING COMPANY
CHENNAI 600 001
REGD. No. 1424440

910
N. SADAYAPPA TRADING COMPANY
SPECIAL QUALITY
CHENNAI - 600 001.

GST No. : 33AAAFS1689P1ZP

☎

044 - 2523 4115
0-99520 97409
0-97890 98129

NST
عثمان
FINER QUALITY
usman ™
TRADE MARK
HANDLOOM TEXTILES
N. SADAYAPPA TRADING COMPANY
CHENNAI - 600 001
REGD. No. 593252

N. SADAYAPPA TRADING COMPANY
usman SPECIAL QUALITY
CHENNAI - 600 001

127



Late.M.பாலுசாமி முதலியார்



M. ராமச்சந்திரன் முதலியார்

MUTHU MAHAL A/c

முத்து மஹால் A/c



S.F. NO : 23 / 2, PERUNDURAI MAIN ROAD, NANJANAPURAM,
VEPPAMPALAYAM BUS STOP, ERODE - 638 107.

PH : 0424 - 2330200, 99948 18181, 93632 31313

50வது ஆண்டு
இனிய பொன்விழா
வாழ்த்துக்கள்

இன்றைய வீர இளைஞர்களின் அடையாள கைலிகளின் நிறுவனம்...

TRADE MARK NO.: 1232994
199
BRAND
Made in India
Mfrs : N.K.S. LUNGI COMPANY
Chennai - 600 001.

Use Always
N·K·S®
Trade Mark

N·K·S
TRADE MARK No : 2787069
090®
BRAND
100% COTTON LUNGIES
Mfrs : N.K.S. LUNGI COMPANY
Chennai - 600 001.

மார்க்

கைலிகள்

N.K.S. லுங்கி கம்பெனி

சென்னை – பொதட்டூர்பேட்டை – B.R. பள்ளி – ஏகாம்பரகுப்பம்

திரு. Lion N.K. நரசிம்மன்	திரு. N.கிருஷ்ணன் D.Pharm	திரு. N.S. துளசி B.A.,



ஸ்ரீ ஜுவல்லர்ஸ்

34, அக்ரஹார வீதி, ஈரோடு - 638 001.

உரிமையாளர்கள் :

திரு. M.V. தெய்வசிகாமணி



திரு. V. சீனிவாசன்



2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ம் நாள், தலைவர் திரு. ஜெ.எஸ். அவர்கள் பொற்கரங்களால் திறக்கப்பெற்ற நிறுவனம். நீங்கள் போன் செய்து எங்களை தொடர்பு கொண்டால், வீட்டிற்கு வந்தே ஆர்டர் எடுத்து நகைகள் செய்து தருகிறோம். நன்றி.



அனைத்து புதிய டிசைன்களிலும் நகைகள் வாங்க சிறந்த இடம்.

தொடர்புக்கு :

94433 18983, 94428 36369

வளர்க செங்குந்தம் ! வாழ்க செங்குந்தம் !! வெல்க செங்குந்தம் !!!



சென்னைப் பெருநகர் செங்குந்த மகாசன சங்கம்

பொன்விழா ஆண்டு மற்றும் ஐம்பெரும் விழா 02.10.2022

இன்று தாங்கள் எங்கள் அனகாபுத்தூர் மாணவர், மாணவியர்களுக்கு கல்வி ஊக்கப் பரிசு & உதவித்தொகை வழங்க அனைவரையும் அழைத்ததற்கு மிக்க நன்றி ! மற்றும் தாங்கள் எங்களது 15-08-2022 (S.S.மஹால்) அன்று நடந்த முதலாண்டு நிறைவு விழாவிற்கு வந்திருந்து நம் குலச் சொந்தங்களின் 10, 11 & 12 ம் வகுப்பு மாணவர், மாணவியர்களுக்கு அனகை செங்குந்தர் நல பேரவை சார்பில் பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றியதற்கு மிக்க நன்றி !



முப்பெரும் விழா – அனகை செங்குந்தர் நல பேரவை
நாள் : 15-08-2022 S.S.மஹால், பம்மல்

இவ்விழாவிற்கு வருகை தரும் பெருமதிப்பிற்குரிய அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

அனகை செங்குந்தர் நல பேரவை

தலைவர். நல்லதம்பி. T.சண்முகம் செயலாளர். P.அன்பழகன் பொருளாளர். P.பார்த்தசாரதி B.E.,



நமது திருக்கோயில்கள்

அருள்மிகு ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயில்

திருமழிசை

மக்கள் இறைவனிடம் அன்பைச் செலுத்துவதற்கும், இன்னலைக் குறைத்துக் கொள்வதற்கும் அமைதியை நாடுவதற்கும் உரிய இடம்தான் திருக்கோயில்கள். ஒருமைப்பாட்டின் சின்னமாகத் திகழ்வன திருக்கோயில்கள்.

அத்தகைய திருக்கோயில்களில் ஒன்றுதான் திருமழிசை ஒத்தாண்டேஸ்வரர் திருக்கோயிலாகும். அக்கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைவன் திருப்பெயர் அருள்மிகு ஒத்தாண்டேஸ்வரர். இறைவி திருப்பெயர் அருள்மிகு குளிர்ந்த நாயகி அம்மை. வடமொழியில் மனோனுகூலேசுவரர் என்றும் சீதளாம்பிகை என்றும் வழங்குவர். இத்திருக்கோயில் சோழர் காலக்கோயில் என்பதற்கு இக்கோயிலில் உள்ள கல்வெட்டும் தலபுராணமும் சான்றாகும். (குளிர்ந்தநாயகி சன்னதிக்கு வடக்கில் கல்வெட்டு உள்ளது).

சோழர் காலக் கோயில் என்பதற்கு இத்தலத்தில் இறைவன் காட்சி தந்து வெட்டுண்ட கையை மீண்டும் அவன் அருளால் பெற்றவன் சோழன் கரிகால் பெருவளவன் என்பர். கரிகால் பெருவளத்தான் என்றும் கரிகாற் சோழன் என்றும் அழைப்பது காவிரிக்கு, கல்லணை கட்டியவன் பெயரேயாகும். அவன் பெயரைத் தலப் பெருமை நினைவுபடுத்துவதால் இது சோழர் காலக்கோயில் என்க.

யானை படுத்திருப்பது போன்று யானை முதுகு போன்று மூலத்தான அடிபீடம் அமைய, அதன்மேல் விமானம் அமைந்துள்ளதால் இதை 'கஜப் பிரஷ்டம்' என்றும் 'களிற்று நிலை' என்றும் கூறுவர். இத்தகைய அமைப்பு சோழர் காலத்தது என்க. இது போன்ற அமைப்புடையதே திருவேற்காடு வேதபுரீஸ்வரர், திருமுல்லைவாயில் மாசிலாமணி ஈஸ்வரர் திருக்கோயில்களாகும்.

கோயில் தலபுராணம்

கரிகால்பெருவளவன் சிவதரிசனத்தின் பொருட்டு யானையின் மீதமர்ந்து, திருமழிசை என்னும் புவிசாரம் நிறைந்த சிவதலத்தில் வருங்கால், யானையின் அடி ஊணாங்கொடியில் சிக்கியது. அரசன் தன் உடைவாளால் அக்கொடியை வெட்டினான். அக்கொடியின் கீழ் தான்தோன்றியாய், சுயம்பாகத் தோன்றிய அருவுருவ வடிவாகிய லிங்கத்தின் மீதுபட்டு இரத்தம் கசிந்தது. அதைக்கண்ட சோழன் அபசாரம் நடந்து விட்டதே என்று தன் கையை வெட்டிக்கொண்டான். ஈசன் சோழனுக்குக் காட்சி தந்து கை தந்தார். ஈசன் ஒத்து ஆட்கொண்டதனால், ஒத்து ஆண்டதனால் ஒத்தாண்டேஸ்வரர் என்றும், கைதந்து ஆட்கொண்டதால் கை தந்தபிரான் என்றும் வழங்குவர்.

கீழ்வரும் பாடல்கள் இத்தலத்தின் பெருமையை உணர்த்துவதைக் காண்மின்.

'வேழமிவர்ந்து வரும் சோழர்கன்று விடையினது
பாழி யெருத்த மிவர்ந்தொரு கைதந்து பார்மழிசை

வாழு மொத்தாண்டர் குளிர்ந்தாளுமையுடன் வான்மகிழ
சூழுமடியவர் போற்றிட நின்றாரைச் சொன்மின்களே'.

'உம்பர்புகழ் மாமழிசை ஒத்தாண்ட ஈச்சரனை
தும்பிமுக னைத்தந்த தொல்லோனை இம்மகியில்
மாதங்க மூர்ந்த வளவன்கை தந்தானை
மாதங்கக் கொண்டோனை வாழ்த்து'.

மூலவர் சிறப்பு

சோழனின் வாளால் வெட்டுப்பட்ட வடு லிங்கத்தின்மீது இருப்பதை இன்றும் காணலாம். லிங்கத்திற்குப் பின்னால் இறைவன் இறைவி முழு திருஉருவம் கொண்டு காட்சி அளித்து அருள் பாலித்து வருகிறார். இறைவன் அருவம், அரு உருவம், உருவம் என்னும் முப்பொருளாய் மூவடிவாய் விளங்குபவன். உருவமே இல்லாது இருப்பது அருவம். உருவமும் அன்றி அருவமும் அன்றி விளங்கும் லிங்க வடிவம் அருஉருவம். நம்மைப் போன்று ஐம்பொறிகளோடு உருவத்தோடு விளங்குவது உருவம்.

இத்தகைய மூன்று நிலைகளில் பின்னிரண்டு நிலைகளோடு தோன்றி மூன்று நிலைக்கும் உரிய திருக்கோயிலாக விளங்குவது இதன் சிறப்பாகும்.

தல விருட்சம்

ஆதியில் மரங்கள் சூழ்ந்த சோலையில், இயற்கைச் சூழலில் இறைவனை எழுந்தருளச் செய்து வணங்கி வந்தனர். பின் அங்குக் கோயில் எழுப்பப்பட்டது. முன்பு எந்த மரத்தின் கீழ் இறைவன் அமர்ந்திருந்தாரோ அதுவே அத்தலத்தின் தல விருட்சமாகப் பின்பு அமைந்தது என்பர். அந்த வகையில் இக்கோயிலின் தல விருட்சம் வில்வ மரமாகும். வில்வ மரம் மருந்தாகப் பயன்பட்டு உடல் நோயைப் போக்குவது போன்று இத்தலத்தின் இறைவனும் உளநோயைப் போக்குபவர் என்று போற்றப்படுகிறார்.

கோயிலின் பிற சிறப்புகள்

கோயில் எதிரில் அழகான திருக்குளம் அமைந்துள்ளது. இது ஊருக்கே ஓர் அழகைத் தந்து கொண்டிருக்கிறது. 'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே' என்பதே தத்துவமாக விளங்குபவர் ஆடல் அரசர் என்னும் நடராசர். அவர் திருஉருவம் இக்கோயிலில் உற்சவ மூர்த்தியாக உள்ளது. அந்த நடராசர் கண் நோக்கு அவர் திருப்பாதத்தைப் பார்ப்பது போன்று உள்ளது. இது போன்ற அமைப்புடைய உற்சவ மூர்த்தியை வேறு இடத்தில் காண்பது அரிதாகும். இதில் அடங்கி உள்ள தத்துவம் பிறவிப் பெருங்கடல் நீந்த இறைவன் அடி சேர்க, இடைவிடாது நினைக்க என்பதை உணர்த்துவது என்க. அடுத்து இறைவன் அருளைப் பெற அவன் திருப்பாதத்தைக் கண்டு, நினைந்து வணங்கு என்பதையும் இறைவி என்றால் அவள் திருமுகத்தைக் கண்டு நினைந்து வணங்கு என்பதையும் நினைவூட்டுவதாக இவ்வுருவம் அமைந்துள்ளது. சிறப்பிற்குரிய அழகான ரிஷபநாயகர் இக்கோயிலில் உள்ளது மற்றொரு சிறப்பாகும்.

இது தேவையான அளவுடைய திருக்கோயிலாகத் திகழ்கின்றது. மிகப் பெரிய கோயிலும் அன்று; சிறிய கோயிலும் அன்று; நடுத்தரமான கோயில் என்றே சொல்லலாம். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இத்திருக்கோயிலுக்கு இராசகோபுரம் கட்டி 18-5-97 அன்று குடமுழுக்கு விழா நடத்தப்பெற்று வானளாவ உயர்ந்து பக்தர்களுக்குத் தரிசனம் தந்து விளங்குகிறது. 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' அன்றோ?

இக்கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழாவும், கந்தசஷ்டி லட்சார்ச்சனை விழாவும், சூரசம்ஹார விழாவும், ஆடிப்பூர லட்சார்ச்சனை விழாவும், ஐப்பசியில் அன்னாபிஷேகமும், கார்த்திகையில் இலட்ச தீபத் திருவிழாவும், மாசியில் மஹா சிவராத்திரியும் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு விழாவின்போதும் இசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் போன்ற நிகழ்ச்சிகள் செங்குந்தர் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும் மாதத்திற்கு இருமுறை பிரதோஷ விழாவும், சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். சமீபத்தில் 7-2-2022 அன்று இக்கோயிலின் கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

அருள்மிகு திருநாகேசுவரர் சுவாமி திருக்கோயில் திருநாகேச்சரம் (குன்றத்தூர்)

தமிழகத்தில் தலைநகரான சென்னைக்கு 20 கி.மீ. தொலைவில் குன்றத்தூர் திருநாகேச்சுரம் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப்பெயர் திருநாகேசுவரர் என்பதாகும். இங்கு அமைந்திருக்கும் ஆலயம் இறைவன் திருவுருவம் அமைத்து, அதைச் சுற்றி எழுப்பப்பட்டதாகும். அமைத்தவரோ பெருமைக்குரிய மகான் மட்டுமல்லர். பெரும் புலவரும், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவருமான 12ஆம் திருமுறையாகிய பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார் பெருமான் ஆவார்.

இப்படிப்பட்ட சிறப்புக்குரிய இத்திருக்கோயில் ஊரின் மத்தியில் மூன்று ஏக்கர் பரப்பளவில் எழுப்பப்பட்டடுள்ளது. திருக்குளமும், பூந்தோட்டமும் இதன்கண் அமைந்துள்ளன. திருக்கோயில் 300x300 சதுர அடிகள் கொண்டதாக விளங்குகிறது.

திருக்குளத்தின் பெயர் சூரிய புட்கரணி ஆகும். தல விருட்சம் சண்பகமரம், நாகத்தின் கீழ் லிங்க வடிவமாகத் திருநாகேசுவரர் அமர்ந்திருக்கிறார். அருகில் போகசக்தி அம்மன் நின்ற நிலையில் வரம் கொடுக்கும் வடிவில் அமைந்திருக்கிறார். காமாட்சியம்மன் தனியிடம் பெற்று நின்று பிரசித்தி பெற்றிருக்கிறார். மற்றும் விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத சுப்ரமணியர், சண்டீசுவரர், வீரவாகு ஆகிய மூர்த்திகளோடு சேக்கிழார், சமயக்குரவர் நால்வரின் திருவுருவங்களும் ஆலயத்தில் அமைந்துள்ளன.

மேற்கண்ட மூலவ மூர்த்திகளுக்கான உற்சவ மூர்த்திகளும் அமைந்துள்ளன. அத்துடன் சிவபெருமான் உற்சவமூர்த்தியாக வரும்போது சோமாஸ்கந்தராகவும், சந்திரசேகரராகவும், நடராஜராகவும், பிட்சாடனராகவும் தனித்தனி வடிவம் பெறுகிறார்.

இந்தத் திருக்கோயிலில் இதன் பழமையையும் சிறப்பையும் தெளிவாக விளக்கும் வகையில் 45 கல்வெட்டுகள் உள்ளன. மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1178-1218), மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி.1246-1271) முதலிய பல மன்னர்களின் ஐந்து நூற்றாண்டுகால கல்வெட்டுகள் இதில் காணப்படுகின்றன. இவ்வளவு சிறப்புகள் பெற்ற இத்திருக்கோயிலின் மூலவரை நாகேசுவரர் என்ற பெயரில் சேக்கிழார் பெருமான் ஏன் அமைத்தார் என்பது சுவை மிகுந்த வரலாறாகும்.

சேக்கிழார் தொண்டைநாட்டின் இருபத்து நான்கு கோட்டங்களில் புலியூர் கோட்டமென வழங்கிய நம் குன்றத்தூரில் வேளாளர் மரபில் நற்குடியில் தோன்றியவர். சோழப் பேரரசை ஆண்டு வந்த இரண்டாம் குலோத்துங்கன், சேக்கிழாரைத் தனது அரசவையின் முதலமைச்சராக்கினான். சேக்கிழார் பெருமான் தாம் அமைச்சராகப் பணிபுரிந்த நேரத்தில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருநாகேசுவரத்திற்குச் சென்று அங்கு குடிகொண்டிருந்த நாகேசுவரப் பெருமானை வழிபட்டு வந்தார். நாக அரசன் ஆதிசேடன் பூசித்ததால் அத்தலத்தின் இறைவன் நாகேசுவரர் என்று பெயர் பெற்றார். அங்குள்ள குளத்தில் சூரியன் மூழ்கித் தனது சாபம் நீங்கப் பெற்றதால் அக்குளத்திற்குச் 'சூரிய புட்கரணி' என்று பெயர் ஏற்பட்டது.

அர்த்த நாரீசுவரர் வடிவம் வேண்டி அன்னை பார்வதி அங்கு சண்பகமரத்தின் கீழிருந்து தவம் புரிந்ததால் சண்பக மரம் தல விருட்சமாயிற்று. அத்தலம் அவரது ஆன்மார்த்த தலமாக விளங்கியதோடு, அவருக்கு இறைவன் திருவடி ஞானமும் கிடைக்கப்பெற்ற இடமாகும். அதனால் சேக்கிழார் தம் குன்றத்தூரிலும் தாம் வழிபடும் தெய்வமான நாகேசுவரைத் தொடர்ந்து வழிபட வேண்டும் என்ற பேரார்வத்துடன் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து நாகேசுவரர் என்று பெயரிட்டார்.

சூரியன் வழிபட்டதை நினைவு கூர்ந்து இங்குள்ள திருக்குளத்திற்கு அங்குள்ளதேபோல் சூரிய புட்கரணி என்று பெயரிட்டார். அன்னைக்கு நிழல் தந்த சண்பக மரத்தையே இங்கு தலவிருட்சமாக அமைத்தார். இவ்விதம் சேக்கிழார் பெருமான் திருக்கோயில் அமைத்து, அதற்கு வட திருநாகேசுவரம் என்று பெயரிட்டு பூசைகள் நடக்க ஏற்பாடுகள் செய்வித்தார்.

திருக்கோயில் பரிபாலனத்தைச் செங்குந்தர் வசம் ஒப்படைப்பதெனத் தீர்மானித்து தொண்டை நாட்டில் செங்குந்தர் எந்தெந்த ஊரில் வசிக்கின்றனர் என ஆராய்ந்து அவர்களுள் சைவத் தொண்டிலும், கல்வியிலும் சிறந்த சான்றோரை வரவழைத்து வீதிகள் அமைத்து வீடுகள் அமைத்துக் குடியமர்த்தி நிர்வாகத்தை ஒப்படைத்தார்.

செவிவழிச் செய்தி

மூலவ மூர்த்தியான நாகேசுவரப்பெருமான் பற்றிய செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. ஒருமுறை சிவலிங்கத்தின் தலைப்பகுதியில் சிறிது உடைபட்டுப் போயிருந்தது. அதை கண்ணுற்ற பெரியவர்கள் பலர் மூளியாகிவிட்ட மூர்த்தியை மூலஸ்தானத்தில்

வைப்பது முறையல்ல என்று சொல்ல, அன்றைய ஆலயப் பொறுப்பாளர்கள் மூலவ மூர்த்தி அகற்ற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார்கள். ஆகவே ஆலயத்து மற்றொரு பகுதியில் வைக்கப்பட்டிருந்த அருணாசலேசுவரரைக் கொண்டுவந்து மூலஸ்தானத்தில் வைத்துவிட்டு அங்கிருந்த சுவாமியை சூரிய புட்கரணி திருக்குளத்தில் போட்டுவிட்டனர். அன்றைய தினமே அவர்கள் யாவரும் அதிர்ச்சியடையத்தக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. தெளிந்திருந்த திருக்குளத்தின் தண்ணீர் சிறிது சிறிதாகச் செந்நிறமடையத் தொடங்கியது. வெகுவிரைவில் திருக்குளம் முழுவதும் ரத்தச் சிவப்பாகியது. அதைக்கண்ட யாவரும் வேதனையடைந்தனர். இதன் விளைவு என்னவாகுமோ என நடுங்கினர். அன்றைய இரவு ஆலயப் பணிகளில் ஈடுபாடு கொண்டு அங்கேயே வாழ்ந்திருந்த சிவனடியார் ஒருவரின் கனவில் நாகேசுவரர் தோன்றினார். அதில் அவர் உணர்த்தியபடி மூலவ மூர்த்தியைப் பக்தியோடு எடுத்துச் சென்று பழைய இடத்தில் பிரதிஷ்டை செய்தனர். திருக்குளமும் தெளிந்த நீராகியது. அத்தோடு நீண்டகாலமாக நாகேசுவரப் பெருமானை நாகங்கள் வந்து வணங்கிவிட்டுச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. மாசி மாதத்தில் 18, 19, 20, 21, 22 ஆகிய நாட்களில் சூரிய ஒளிக் கதிர்கள், முன்னர் சூரியன் நாகேசுவரரை வழிபட்டு திருக்குளத்தில் மூழ்கி சாபநிவர்த்தி பெற்றதற்கு அடையாளமாக, மூலவர் மீது தவழ்கின்றன என்பது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.

திருவிழாக்கள்

சித்திரை மாதத்தில் சித்திரைப் பௌர்ணமியின் போது சுவாமிக்கும் அம்மனுக்கும் திருமணம் நடத்துவதைப் பத்தாவது நாளாகக் கொண்டு பத்து நாட்கள் பிரமோற்சவம் நாகேசுவரருக்கு நடத்தப்படுகிறது. வைகாசி மாதத்தில் திருக்கோயில் மூலவரைப் பிரதிஷ்டை செய்த சேக்கிழார் பெருமானுடைய பூச நட்சத்திர விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஆனி மாதம் ஸ்ரீநடராஜப் பெருமானுக்குத் திருமஞ்சன விழா நடைபெறுகிறது. ஆடி மாதம் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஸ்ரீ வேம்புலியம்மனுக்குப் பத்து நாள் உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அத்துடன் இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பொன்னியம்மனுக்குப் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தி மூன்று நாட்கள் வைபோகமான திருவிழா மாமாங்க உற்சவமாக நடைபெற்று வருகிறது. தற்போது நாகேஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருப்பணிகள் நடைபெற்று வருகிறது.

> நல்லெண்ணெய், இலுப்பை நெய் அல்லது பசுநெய்யில் மட்டுமே விளக்கு ஏற்றப்பட வேண்டும். 'கடலை நெய் கலக்கம் விளைவிக்கும்'
>
> – பழமொழி.

பொன் மாரியம்மன் திருக்கோயில்

மூன்றாம்கட்டளை

பொன்மாரி அம்மன் திருக்கோயில் 125 ஆண்டுகளுக்கு மேலாக சிறந்து விளங்கி வருகிறது. சக்தி வாய்ந்த பொன்மாரி அம்மனுக்கு ஆடி மாதம் நான்கு ஐந்தாவது வாரம் கும்பமிட்டு கூழ் வார்த்தலும், விமரிசையாக நடைபெற்று வருகிறது. மேலும், இவ்வூரின்கண் அமைந்துள்ள செல்வ விநாயகர் கோயிலும் பழமையான அக்னீஸ்வரர் கோயிலும் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சம்பத்து விநாயகர் திருக்கோயில்

மேப்பூர்

சம்பத்து விநாயகர் திருக்கோயில் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறப்புற்று விளங்கி வரும் திருக்கோயில் ஆகும். இக்கோயிலைப் புதுப்பித்து 24-01-2011 அன்று குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நிகழ்த்தப்பட்டது. மேலும் **வள்ளி தேவசேனா சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்** 1992 ஆம் ஆண்டு ஆறு கிரவுண்டு நில பரப்பளவில் கட்டப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. இக்கோயில்களில் கத்திரி வைகாசி உற்சவம் ஒரு நாள் விழாவாகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும் சிறிய அளவில் கனக சபை நடராஜர் கோயில் கட்டப்பட்டு 2011, வைகாசி 14ல் கத்திரி உற்சவத்தன்று திறக்கப்பட்டு வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகிறது,

அருள்மிகு திருக்காரணீசுவரர் திருக்கோயில்

திருக்காரணி

சென்னை சைதாப்பேட்டையைச் சேர்ந்தது திருக்காரணி என்னும் பகுதி. அதில் அருள்மிகு சொர்ணாம்பிகை என்னும் பொற்கொடியம்மை உடனுறை திருக்காரணீசுவரப் பெருமான் திருக்கோயில் உள்ளது. இக்கோயில் சைதாப்பேட்டை இரயில் நிலையத்திற்கு அருகில் இருக்கிறது. இக்கோயில் ஆதொண்டர் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டு செங்குந்த மரபினரின் பராமரிப்பில் இருந்து வருகிறது. அஃது ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுப் பழமை உடையதாகத் தெரிகிறது.

திருக்காரணிப் பகுதியில் திருக்காரணீசுவரர் திருக்கோயிலைச் சார்ந்த சுற்றுக்கோயில்கள் செங்குந்த மரபினர்களின் தனிக் கோயில்களாகவும் அமைந்துள்ளன. திருக்காரணீசுவரர் கோயில் தெருவில், தேரடிக்கருகில் உள்ள ஞானவிநாயகர் கோயில், வாத்தியார் சுப்பராய முதலி தெருவில் உள்ள செல்வ விநாயகர் கோயில், கூத்தாடும் பிள்ளையார்க் கோயில், காரணித் தோட்டம் விநாயகர் கோயில் ஆகிய கோயில்கள் உள்ளன.

200 ஆண்டுகளுக்கு முன் குருலிங்க சாமி என்னும் வீர சைவ மகான் இக்கோயிலை வழிபட்டுப் பொருளாளராக விளங்கியிருக்கிறார். அவருடைய சமாதிக் கோயில் தேரடிக்கருகில் இருக்கிறது.

தல வரலாறு

இந்திரன் தன்னிடமிருந்த தெய்வப் பசுவாகிய காமதேனுவை ஒரு மண்டல காலம் வசிஷ்டர் பின் அனுப்பி வைத்தார். இப்பசு, வசிஷ்ட முனிவர் பூஜைக்கு இடையூறு செய்ததால் முனிவர் கோபம் கொண்டு 'காட்டுப் பசுவாகப் போகக் கடவாய்' என்று சபித்தார். இதை அறிந்த இந்திரன் தன் வாகனமாகிய கார் என்னும் மேகங்களை அழைத்து மயிலை நகருக்கும் திருவான்மியூருக்கும் நடு மத்தியில் மேற்கே சில கடிகை தூரத்தில் மழை பெய்து குளிர்ச்சி செய்யும்படி கட்டளையிட்டார். அவ்விடத்தில் குறுஞ்சோலைகள் ஓங்கி வளர்ந்து செழித்து வந்தன. இச்சோலைக்குள் இந்திரன் தங்கி ஒரு சிவலிங்கத்தை நிறுவி அதற்கு மேற்புறத்தில் தடாகம் ஒன்று உண்டாக்கி நாள்தோறும் காலம் தவறாது பூசித்து வந்தான். சில நாள் சென்றபின் சிவபிரான் கருணை கூர்ந்து இந்திரன் முன் பிரசன்னமாகி காட்டுப் பசுவின் சாபத்தை நீக்கி, தெய்வப் பசுவாக மாற்றி இந்திரனிடம் ஒப்படைத்தார். பிறகு இந்திரன் வேண்டுகோளுக்கிணங்க கரிய மேகங்களால் சூழப்பட்டு கார் (மேகம்) வருவித்துக் குளிர்ச்சி அடையச் செய்த இந்தப் பகுதிக்கு "காரணி" என வழங்கவும், அங்கு கோயில் கொண்டெழுந்தருளிய சிவனுக்கும் காரணீஸ்வரர் என வழங்கவும் மேற்குப் புறத்தில் நிர்மாணித்த தீர்த்தத்திற்கு "கோபதி சரஸ்" என வழங்கவும் சிவனருள் கிடைத்தது.

சோழர்கள் சந்திர வமிசத்தைச் சார்ந்தவர்கள். இவ்வமிசத்தில் உதித்த ஆதித்த சோழன் தன் மகன் குலோத்துங்க சோழனை இளவரசனாக்கினான். குலோத்துங்கன் ஒரு நாள் வேட்டைக்கு ஏகிய வனத்தில் ஒரு ரிஷி கன்னிகையைக் கண்டு மோகம் கொண்டு அக்கன்னிகைக்கு ஆதொண்டை பூமாலை சூட்டி காந்தர்வ விகாகம் செய்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்தவர்தான் ஆதொண்ட சக்ரவர்த்தி. இவர் சோழ இராஜ்யத்தின் வட பாகத்தை ஆண்டு கொண்டிருந்தபோது பல தெய்வத் தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தார். இவர் சைதை எனும் ஊரில் சையீந்நிஸ்வரரைத் தரிசித்து வரும் வழியில் ஸ்ரீசிவ சைதன்னிய முனிவரைத் தரிசிக்க நேர்ந்தது. ஆதொண்டர் முனிவரை வணங்கி இவ்வடியேனுக்குப் புண்ணியம் நிறைந்த சிவமூர்த்திங்கள் எங்குளதோ அவைகளைச் சொல்வீரானால் யான் அங்கு சென்று ஆன்ம கோடிகள் உய்யும் பொருட்டு திருப்பணிகள் முடிப்பேன் என்றார். முனிவர், இந்திரன் முன்னொரு காலத்தில் லிங்கப் பிரதிஷ்டை செய்த இடத்தைக் காட்டி அங்கு தெய்வத் திருப்பணிகள் செய்வாய் என்று ஆசி கூறினார். அதன்படியே ஆதொண்டர், அச்சிவபிரானுக்கு ஆகம விதிப்படி கர்ப்பக் கிரகம், அந்தராளம், அர்த்த மண்டபம், மகா மண்டபங்கள் கட்டி வைத்து சுற்று மதில்களும் எழுப்பி மற்ற திருப்பணிகளும் செய்து வைத்தார். அவ்வெல்லைக்குள் உத்தம பக்த ஜனங்களைக் குடியேற்றியும் அவர்களுக்கு வேண்டிய சுகாதார வசதிகளை ஏற்படுத்தியும் தானும் கிரமப்படி காரணீசுவரரை நித்தம் தரிசித்து வந்தார். இது புராண வரலாறு.

திருவிழாக்கள்

பிரதி வருடம் சித்திரை மாதம் சுக்கிலபட்சம் பஞ்சமி திதி, மிருகசீரிடம் நட்சத்திரத்தில் பிரம்மோற்சவம் ஆரம்பித்து சதுர்த்தசி திதியில் பூர்த்தியாகிறது. பிரம்மோற்சவம் 10 நாள்கள் வெகு விமரிசையாக நடைபெறுகிது. ஐந்தாம் நாள் இரவு வெள்ளி ரிஷபவாகன தரிசனமும் எட்டாம் நாள் பகல் அறுபத்து மூன்று நாயன்மார்களோடு பஞ்ச மூர்த்திகள் தரிசனமும் கிடைத்தற்கரிய பேறாகும்.

நூல்கள்

இம்மூர்த்திகளைப் பற்றி ஸ்ரீ காரணீஸ்வரர் இரட்டை மணிமாலை என்ற நூலில் 20 பாடல்களும், ஸ்ரீ காரணி சொர்ணாம்பாள் நவமணிமாலை என்ற நூலில் ஒன்பது பாடல்களும் ஒரு வாழ்த்துப்பாவும் உள்ளன.

செங்குந்த கோட்டம் அருள்மிகு கற்பக விநாயகர் சிவசுப்ரமண்ய சுவாமி திருக்கோயில்

திருவல்லிக்கேணி

இத்திருக்கோயில் திருவல்லிக்கேணி ஜாம் பஜார் பகுதியில் நெசவாளர் தெருவில் அமைந்துள்ளது. இத்தேவஸ்தானத்திற்காக 1803ஆம் ஆண்டு சென்னை ஆளுனரிடமிருந்து நிலம் பெற்று ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வாடகை கொடுக்கப்பட்டு வருகிறது. திருவல்லிக்கேணி பகுதியில் வாழ்ந்து வந்த செங்குந்த குலப்பெருமக்களால் 1803ஆம் ஆண்டில் இக்கோயில் நிறுவப்பட்டு நம் குல மக்களாலேயே இன்றும் பராமரிக்கப்படுகிறது.

மூர்த்திகள்

அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி, அருள்மிகு வள்ளி, தெய்வானை.

திருவிழாக்கள்

ஆண்டுதோறும் ஐப்பசித் திங்கள் சஷ்டி ஆறு நாட்கள் உற்சவமும், சூரசம்ஹாரம், திருக்கல்யாண உற்சவமும், வைகாசித் திங்களில் விசாக உற்சவமும், மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. "சீர்புகழும் சென்னை புரி திருவல்லிக்கேணி நகர் செங்குந்தர் வீதி வாழும் சிவனருள் பாலனே, சிவசுப்பிரமணியனே" என்று பாடியிருக்கிறார் அருட்கவி சேதுராமன் அவர்கள். இக்கோயிலில் ஒரு வில்வ மரம் வெகு நாட்களாக இருக்கிறது.

ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

அனகாபுத்தூர்

அனகாபுத்தூர் அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சுமார் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். செங்குந்தர் மரபினரால் கட்டப்பட்ட ஆலயம். இக்கோயில் 1971இல் புதுப்பிக்கப்பட்டு பங்குனி உத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பிறகு 1993ஆம் ஆண்டு பங்குனி உத்திரத்தில்

மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 60 அடி உயரம் கொண்ட ஐந்து நிலை இராஜகோபுரம் எழுப்பப்பட்டு 8-4-2009இல் அதே பங்குனி உத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஒவ்வொரு கும்பாபிஷேகமும் பங்குனி உத்திரத்தன்று நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் தல விருட்சம் வன்னி மரமாகும். இக்கோயிலில் மாணிக்கவாசகருக்கு விமானத்துடன் கூடிய தனி சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. இவருக்கு ஆனி, மகநட்சத்திரத்தில் பிரம்மாண்டமான விழா பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. மேலும் இத்திருக்கோயிலில் தட்சிணாமூர்த்தி, சிவபெருமான், சமயபுரத்தம்மன், ஸ்ரீ ஐயப்பன், துர்க்கையம்மன், சரஸ்வதி, சனி பகவான் ஆகிய தெய்வங்களுக்குத் தனி சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் தை மாதம் நான்காவது வாரத்தில் திருவிளக்கு பூஜையும், மாசி மக நட்சத்திரத்தில் மாசி மகம் பெருவிழாவும் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. வடகிழக்கு திசையில் பல்வேறு சிற்பங்களுடன் கூடிய அழகான நுழைவு வாயிலும் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இக்கோயிலுக்கு பல்வேறு காலகட்டங்களில் நடிகர் திலகம் சிவாஜிணேசன், திருக்கோயில் ஆசிரியர் திரு. ந.ரா.முருகவேள், தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி, திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், நடிகர் திரு. P.S.வீரப்பா அவர்கள், சபரிமலை ஐயப்பசுவாமி கோயிலின் மேல் சாந்தி திரு. நீலகண்ட தந்திரி சுவாமிகள், மதுரை ஆதினம் லோககுரு ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பராமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வருகை தந்துள்ளனர்.

செங்குந்தர் தனவிநாயகர் ஆலயம்

பம்மல்

பம்மல் செங்குந்தர் தன விநாயகர் ஆலயம் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறப்புறத் திகழ்கின்ற திருக்கோயில். விநாயகர் சதுர்த்தி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கோயில் செங்குந்தர் குல மக்களால் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அருள்மிகு காமாட்சி உடனுறை அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில்

(சுக்கிராச்சாரியார் கண் பெற்ற தலம்)

மயிலாப்பூர்

சென்னை, மயிலாப்பூரில் தெற்கு மாட வீதியில் பிரதான சாலையில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது அருள்மிகு காமாட்சி உடனுறை அருள்மிகு வெள்ளீசுவரர் ஆலயம். இந்த ஆலயம் முழுமையாகக் கட்டப்பட்டு சுமார் 150 ஆண்டுகளுக்குமேல் ஆகிறது என தற்போதுள்ள ஆவணங்கள் வழியாக அறியப்படுகிறது. இந்த ஆலயம் மயிலையைச் சுற்றி அமைந்துள்ள சப்த சிவ ஸ்தலங்களுள் மூன்றாவதாகக் கூறப்படுகிறது.

கோயில் ஸ்தல வரலாறு:

வேதஸ்தான பதிவேடுகளை ஆராய்ந்ததில் இக்கோயில் 150 ஆண்டுகளுக்கு முன்னதாக தோற்றுவிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. ஆரம்பத்தில் ஸ்ரீ விநாயகர் சந்நிதி தோற்றுவிக்கப்பட்டு, பின்னர் மற்ற எல்லா சந்நிதிகளும் தோற்றுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. மயிலை செங்குந்த மரபினர்கள் தங்களது சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் செங்குந்த மரபினர்களில் பெரும்பாலோர் நெசவுத் தொழிலையே நடத்தி வந்தனர். கைத்தறி ஒவ்வொன்றுக்கும் வரி விதித்தும், மற்றும் நிச்சயதார்த்தம், திருமணம் முதலிய சடங்குகளுக்குக் கட்டணம் வாங்கியும் இக்கோயில் செங்குந்த மரபினரால் கட்டப்பட்டது. கோயில் கட்டளைகளுக்கு வேண்டிய நிதியில் பெரும்பகுதி செங்குந்த மரபினர்களே வைத்துள்ளார்கள். இக்கோயிலின் பிரம்மோத்சவத்துக்குத் தேவையான ரதமும், எல்லா வாகனங்களும் உள்ளன. இக்கோயில் நிர்வாகம் 1874ஆம் ஆண்டு முதல் தற்போது 2022 வரையில் செங்குந்த மரபினர்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட தர்மகர்த்தாக்களால் செய்யப்பட்டு வருகின்றது. இந்த கோயில் இந்து சமய அறநிலைய நிர்வாகத் துறையினரின் ஆளுகைக்கு உட்பட்டது.

பல்லூழி காலத்திற்கு முன் வேதாரண்யம் என்னும் திருமறைக்காட்டுச் சிவாலயத்தில் நள்ளிரவில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியைத் தூண்டிவிடுவார் இல்லாமையால் அணையும் தருவாயில் இருந்தது. அப்பொழுது அந்த விளக்கில் உள்ள நெய்யை பருகுவதற்கு எலி ஒன்று வந்து நெய்யைப் பருகும்போது தீபத்தின் திரியை மூக்கால் நகர்த்திவிட்டது. அதனால் விளக்கு ஒளிவீசி எரியத் தொடங்கியது.

தன்னை அறியாமலேயே அந்த எலி விளக்கொளியை தூண்டியதாயினும் சிவபரஞ் சுடர் அதனை மறுபிறப்பிலே அசுரர் குல அரசன் மகனாக மாவலிச் சக்கரவர்த்தி என்னும் பெயருடன் பிறக்குமாறு அருள் செய்தார். பேராற்றலையும் மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் கட்டி ஆளும் அரசுரிமையையும் அடைந்த மாவலிச் சக்கரவர்த்தி, தான் பரமசிவத்தின் பாத கமலங்களை அடைவதே பிறவிப்பயன் என்று தெரிந்து பெரிய வேள்வி ஒன்றைச் செய்தார்.

அந்த வேள்வியின் முடிவில் ''யார் எதைக் கேட்டாலும் வழங்குவேன்'' என்று பறை சாற்றினார். திருமால் வாமன வடிவினராக வேள்விச்சாலையை அடைந்தார். தமது திருவடிகளால் மூன்று அடி மண்ணை தானமாக வழங்க வேண்டும் என்றார். மாவலியும் களங்கமற்ற மனத்துடன் மூன்றடி மண்ணை வழங்குவதாக வாக்களித்தார். ஆனால் வந்தவர் ''யாசகர் அல்லர், அசுர குலத்தை அழிக்க வந்த திருமாலே" என்பதை அசுரகுல குருவான சுக்கிராச்சாரியார் அறிந்தார்.

''இவன் யாசகன் அல்ல. மூன்றடி மண் வேண்டுமெனக் கோருவது மாயம்" என்று மாவலியை தானம் செய்ய ஒட்டாது தடுத்தார்.

உண்மை நிலையை மாவலி தன் தவவலிமையால் அறிந்தார். ஆயினும், "என் அறவாக்கினை மீறேன்" என்று தாரைவார்த்து தானம் கொடுக்க கெண்டியைத் தூக்கினார். அக்கனமே சுக்கிராச்சாரியார் வண்டுருவம் கொண்டு தண்ணீர் வரும் கெண்டியின் மூக்கு வழியை அடைத்தார். திருமால் சுக்கிராச்சாரியாரின் சூழ்ச்சியைச் தெரிந்து, தர்பைப் புல்லினால் கெண்டியின் வழியை அடைத்துக் கொண்டிருந்த வண்டை குத்தினார். தானம் தடையின்றி முடிந்தது. மாவலியும் அறம் வழுவாதாற்றிய பெருமைக்கேற்ற பெரும் பதவியைப் பெற்றார்.

தர்பைப் புல்லினால் குத்தப்பட்டமையால் சுக்கிராச்சாரியாரின் கண்கள் குருடாயின. எனவே, அவர் அந்த முக்கண்ணனாகிய சிவபெருமான் தான் இழந்த கண்களை தர வல்லவர் என்று திருமயிலைக்கு வந்தார். சுக்கிரன் குளம் என்னும் (தற்போது சித்திரக்குளம் எனப்படும்) புண்ணிய தீர்த்தத்தை உருவாக்கினார். சிவபெருமானை இலிங்க வடிவில் குருந்தை மரத்தின் கீழே எழுந்தருளச் செய்து பல்லாண்டு காலம் முறைப்படி சுக்கிராச்சாரியார் பகவானை வேண்டினார்.

கருணைக் கடலாகிய சிவபெருமான், சுக்கிரனின் பக்திக்கு மனம் இறங்கி, திருமால், பிரம்மன் ஆகியோருடன் காட்சி தந்து சுக்கிராச்சாரியாருக்கு கண்ணொளி வழங்கி ஆசி புரிந்தார். இழந்த கண்களை மீண்டும் வழங்கி அருளினார்.

வெள்ளி என்னும் சுக்கிரன் பூசித்த தலம் என்றும் ஸ்தல மகிமையை விளக்கும் வகையில் உட்கோயில் ஒன்று வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் வடகிழக்கில் இருக்கிறது. அங்கே குருந்தை மரத்தடியில் சிவபெருமான் இலிங்க வடிவில் எழுந்தருளி இருப்பதையும், வடக்கு நோக்கி சுக்கிரன் வணங்கியவாறு இருக்கும் திருக்கோலத்தையும் கண்டு களிக்கலாம். "சுக்கிரேஸ்வரர் கோயில்" என்று குறிப்பிட்டிருப்பதையும் அங்கு காணலாம். சுக்கிரேஸ்வரர் அருளினால் தான் கோரியது பெற்ற பக்தர் ஒருவரால் சுக்கிர பகவானுக்கு முன் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அறங்காவலர்களாக இருந்தவர்களின் பெயர்கள் ஒரு கல்வெட்டில் இந்த ஆலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆலயத் திருப்பணி மற்றும் உற்சவங்களுக்காக, நன்கொடை ஈந்தவர்கள் விவரங்களை இவ்வாலயத்திலுள்ள பல கல்வெட்டுக்கள் மூலம் நாம் அறியலாம்.

ஆலய சன்னதிகள்:

செங்குந்த மரபினாரால் நிர்மாணிக்கப்பட்ட, சுதை சிற்பங்கள் நிறைந்த ஐந்து நிலை ராஜகோபுரம் 25ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ராஜகோபுரத்தை வணங்கி உள்ளே நுழைந்தால் நாம் அருள்மிகு தென்கூர் செல்வ விநாயகர் சன்னதியைக் காணலாம். தெற்கு நோக்கிய தனிச்சன்னதியில் விநாயகர் சித்தி, புத்தி சமேதராய் நின்ற கோலத்தில் காட்சி தருவது வேறெந்த ஆலயத்திலும் காண இயலாத சிறப்புக் காட்சியாகும். இந்த சன்னதி நேரெதிரே தான் தென்கூர் செல்வ விநாயர் கோயில் தெரு அமைந்துள்ளது.

மிகவும் வரப் பிரசாதியாக இந்த விநாயகர் திகழ்கிறார். வெற்றிகரமான பிரயாணம் செய்பவர்களும், புதிதாக வாகனங்கள் வாங்கியவர்களும் இங்கு பூஜை செய்து வழிபடுவது வழக்கமாகும்.

இதையடுத்து கிழக்கு நோக்கிய வண்ணம் தனிச் சன்னதியில் கருவறையில் அருள்மிகு வெள்ளீஸ்வரர் லிங்கத் திருமேனியுடன் காட்சி தருகிறார். நாகாபரண அலங்காரத்தில் சிவபெருமானைத் தரிசிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். சிவபெருமான் சன்னதியெதிரே நந்தியம்பெருமான் தனி மண்டபத்தில் காட்சி தருகிறார். பிரதோஷ நாட்களில் நந்தியம்பெருமானுக்கு அபிஷேகம் மற்றும் விசேஷ அலங்காரங்கள் செய்யப்படுகிறது. நந்தியம்பெருமான் சன்னதிக்குப் பின்னால் கொடிமரம், பிரம்மசந்தி அமைந்துள்ளது. கருவறை நுழைவு வாயில் முன்பு வலது, இடது புறம் விநாயகர், முருகர் கல் சிற்பங்கள் உள்ளன. இதற்குச் சற்று மேலே நாம் பாதுகாவலர்களாக நிற்கும் பூத கணங்களைக் காணலாம்.

சிவபெருமான் சன்னதிக்கு வலதுபுறத்தில் தெற்கு நோக்கிய திசையில் தனிச் சன்னதியில் அருள்மிகு காமாட்சியம்மன் எழுந்தருளியுள்ளார். நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன், மேலிரு கரங்களில் மலரை ஏந்தியும், கீழிரு கரங்களில் அபய, வரத முத்திரை தாங்கியும் பூரண அலங்காரத்துடன் அன்னையின் பின்புறம் ஸ்ரீலஸ்ரீ பன்றிமலை சுவாமிகள் வழங்கிய ஸ்ரீசக்கரம் ஸ்தாபனம் செய்யப்பட்டு புன்னகை தவழும் திருமுகத்துடன் அருள்பாலிக்கின்றார். அன்னையின் அழகு நம்மை சன்னதியை விட்டு வெளியேற மறுக்கும் வண்ணம் ஈர்ப்பாக உள்ளது.

கருவறையை ஒட்டியுள்ள உள் பிரகாரத்தில் தெற்குப் பகுதியில் ஆலய உள் பிரகாரச் சுற்றுச் சுவரை ஒட்டி நுழைவாயில் தொட்டு மேடையில் விநாயகருடன், சமயக் குரவர் நால்வர்கள் (திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர்) காட்சி தருகின்றனர். இதைத் தொடர்ந்து சிவசூரியன் மற்றும் சப்த கன்னிமார்களாகிய பிரம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி. சாமுண்டி ஆகியோர் அமர்ந்த நிலையில் தனித்தனியே அருள்பாலிக்கின்றனர். வீரபத்திரர் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இதையடுத்து நாகேந்திரர், திருவண்ணாமலை எம்பெருமான் உண்ணாமலையம்மனுடன் இருப்பதை நாம் காணலாம். அடுத்து வடக்குப் பக்கத்தில் சுவரையொட்டியுள்ள மேடையில் சரஸ்வதி, லட்சுமி, சந்தானகுரவர் நால்வர்கள் (மெய்கண்டசிவம்,அருள்நந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம்), சேக்கிழார், உலகளந்த பெருமாள், காசி விஸ்வநாதர், நந்திகேஸ்வரர், தண்டாயுதபாணி ஆகியோர் எழுந்தருளியுள்ளார்கள்.

கருவறை கோஷ்டத்தில் மஹா கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மன், கோமுகியில் சண்டிகேஸ்வரர் காட்சி தருகின்றனர். அடுத்து தனிச் சன்னதியில் துர்க்கையம்மன் வடக்கு நோக்கிய திசையில் அருள்பாலிக்கின்றார். இதன் நேரெதிரே

செல்கையில் நாம் இறைவன் பள்ளியறையையும், சோமாஸ்கந்தரரையும், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானையும் உற்சவர் கோலத்தில் காணலாம்.

தென்மேற்கில் சற்று நடக்கையில், நாம் வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமார சுவாமியை தனிச் சன்னதியில் வணங்கலாம். சன்னதி முன்பு வலது மற்றும் இடது புறத்தில் சிறிய வடிவத்தில் அருணகிரிநாதர் மற்றும் வீரவாகு வடிக்கப்பட்டுள்ளனர். அருள்மிகு முத்துக்குமாரசுவாமி நான்கு திருக்கரங்களுடன் காட்சி தருகிறார். மேலிரு கரங்களில் வஜ்ராயுதம் மற்றும் சூலாயுதம் தாங்கிக் கொண்டு, கீழிரு கரங்களில் அபய மற்றும் வரத முத்திரைகள் கொண்டு அருள்பாலிக்கின்றார்.

இந்தச் சன்னதியிலிருந்து நாம் நேரே செல்கையில், வடக்கு திசையில் சிவகாமி அன்னையுடன் நடராஜர் உற்சவர் திருமேனிகளை நாம் காணலாம். வைகாசிப் பெருவிழா 8ஆம் நாள், சுக்கிர பகவானுக்கு கண் பார்வையளிக்கும் நிகழ்விற்கு வீதியுலா கண்டருளும் நடராஜர், பிரம்மன், திருமால், சுக்கிரன், வாமனர், மஹாபலிச் சக்கரவர்த்தி, சரபேஸ்வரர் மற்றும் சமயக் குரவர்கள் நால்வர் (திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர்) ஆகியோரது உற்சவ மூர்த்திகளையும், வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமான் உற்சவ மூர்த்திகளையும் எழுந்தருளச் செய்துள்ளனர். அதையடுத்து கண்ணாடி அறையில் ஆறுமுக சுவாமி, வள்ளி தெய்வானை சமேதராக காட்சியளிக்கிறார். இவருக்கு பிரதி மாத விசாகத்தில் அபிஷேகம் விமரிசையாக நடைபெறும். வெளியே வருகையில் நின்ற கோலத்தில் பைரவர் காட்சி தருகிறார்.

நாம் வெளியே வருகையில் வெளிப்பிரகாரத்தில் அருள்மிகு சுக்கிரேஸ்வரரை தனிச்சன்னதியில் காணலாம். சக்கிரபகவான் குருந்த மரத்தடியில் லிங்க வடிவில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை நின்ற நிலையில் வழிபட்டு நிற்கும் காட்சியை நாம் காணலாம். இந்த நிகழ்வு தல வரலாற்றிகு முத்தாய்ப்பாய் அமைந்துள்ளது எனலாம்.

இந்த சன்னதிக்கு அருகில், இரண்யகசிபுவைக் கொன்ற பிறகு நரசிம்மப் பெருமாள் அடைந்த உக்கிரத்தைத் தணிக்கும் பொருட்டு, சிவபெருமான் உருக்கொண்ட அருள்மிகு சரபேஸ்வரர், தனிச் சன்னதியில் எழுந்தருளியுள்ளார். எட்டுக் கால்களும், இரண்டு பெரிய சிறகுகளும், சிங்க முகமும், நீண்டு வளர்ந்த மூக்கும் கொண்ட நரியின் வாலும் கொண்ட சரபேஸ்வரர் பட்சி உருவமெடுத்து, எட்டுக் கால்களாலும் அவரைப் பற்றி அலகுகளால் கிழித்து, தோலை உரித்து பின் ஆலிங்கனம் செய்து நரசிம்மப் பெருமாளை அடக்கியதாக அறிகிறோம். சரபம் என்றால் சிங்கத்தை அடக்கவல்ல எண்காற்பறவை என்பதாகும். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ராகு கால வேளையில் (மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை) சிறப்பான அபிஷேகம் மற்றும் அலங்காரங்கள் இச்சன்னதியில் நடக்கின்றன. இச்சன்னதியின் வெளியே வலது புறம் ப்ரத்யங்கிரா தேவியும், இடதுபுறம் சூலினி துர்க்கையும் உள்ளனர்.

இவ்வாலயத்தில் விசாலமான கல்மண்டபம் உள்ளது. இதில் தான் விழாக் காலங்களில் எம்பெருமான் மற்றும் உபய உற்சவ விக்ரகங்கள் வீதியுலா காணும் முன், அலங்காரம் செய்யப்படுகிறது. இந்த மண்டபத்தின் வெளியிலுள்ள தூணில் ஆஞ்சநேயர் மற்றும் விநாயகர் திருவுருவம் செதுக்கப்பட்டுள்ளன.

அருள்மிகு சரபேஸ்வரர் சன்னதிக்கு எதிரே தனிச்சன்னதியில் அருள்மிகு சனீஸ்வரரைக் கண்டு வணங்கலாம். இவருக்குப் பக்கத்தில் நவக்கிரஹ சன்னதி அமைந்துள்ளது.

நந்தியம்பெருமான் சன்னதிக்கு இடதுபுறமுள்ள உள்ள கொடியேற்றும் மண்டபத் தூண்களில் பஞ்சமுக கணபதி, முருகர், பட்டினத்தார், வள்ளலார், வீரபத்திரர், தட்சன், பிரம்மன், திருமால் போன்றவர்களின் திருவுருவங்கள் நாம் கண்டு ரசிக்கும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன.

அபிராமி அந்தாதி, தேவாரப்பதிகம், கந்தசஷ்டிக் கவசம், தல வரலாறு, சண்முகக் கவசம் போன்றவை ஆலயச் சுற்றுச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன. சுந்தரமூர்த்தி நாயனார் இழந்த தனது கண் பார்வையை பெற வேண்டிப் பாடிய பதிகத்தில் உள்ள இரு பாடல்கள் இவ்வாலயச் சுவரில் பதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாலய பிரார்த்தனைகள்:

அருள்மிகு சரபேஸ்வரருக்கு ஆறு வாரம் ஞாயிற்றுக்கிழமை ராகு கால வேளையில் பூஜை செய்தால் துஷ்ட சக்திகள் விலகும். பயம் அகலும், வாழ்வின் நலன்கள் கிட்டும், சுக்ரேஸ்வரர் சன்னதியில் மனமுருக வேண்டிக் கொண்டு அங்குள்ள கல்வெட்டில் உள்ள பதிகங்களை 16 முறை பாடினால் கண் பார்வை குறைபாடுகள் நீங்குவதாக பலனடைந்தவர்கள் கூறுகின்றனர்.

நினைத்த காரியம் நிறைவேறவும், மனக்குறைகள் நீங்கவும், திருமணம் நடக்கவும் காமாட்சியம்மனை வேண்டி பலனடைகின்றனர். செல்வம் பெருகவும், திருமணத் தடை நீங்கவும் வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமியை வழிபடுகின்றனர்.

எதிரிகளின் தொல்லை, பயம் அகல, காரிய சித்தி பெற தேய்பிறை அஷ்டமியில் பைரவரை வணங்குகின்றனர்.

ஏழரைச் சனி பிடியிலிருந்து நிவாரணம் பெற ஒவ்வொரு சனிக்கிழமையும் நெய் அல்லது எள்ளு எண்ணெய் விளக்கேற்றி சனீசுவரரை வழிபடுகின்றனர். காரியத்தடை நீங்க வேலைவாய்ப்பு கிடைக்க, வெளிநாட்டில் வேலை கிடைக்க ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் சாற்றி வழிபடுகின்றனர்.

குடும்பத்தகராறு நீங்கவும், வழக்கில் வெற்றி பெறவும், இழந்த செல்வத்தை மீட்கவும் வராகி அம்மனைத் தொழுகின்றனர்.

இவ்வாலய திருவிழாக்கள்:

இலட்சதீபம், வைகாசிப் பெருவிழா, வசந்த உற்சவம், ஆடிப்பூரம், விநாயகர் சதுர்த்தி, பவித்ரோ உற்சவம், நவராத்திரி விழா, மஹா கந்தசஷ்டி, கார்த்திகை தீபம்,

திருவெம்பாவை மாணிக்கவாசகர் உற்சவம், பொன்னூஞ்சல் உற்சவம், ஆருத்ரா தரிசனம், தை புனர்பூசம் நட்சத்திரம், கும்பாபிஷேக தினம், சங்கராந்தி உற்சவம், கணு உற்சவம், மாசி கடலாட்டி விழா, பங்குனி இலட்சதீபம் போன்ற உற்சவங்கள் வெகு விமர்சையாக நடத்தப்படுகிறது.

அருள்மிகு கற்கட விநாயகர் திருக்கோயில்

மேற்கு சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

கி.பி.1946-ஆம் ஆண்டு பெருமாள் கோயில் தோட்டக் கிராமத்தில் வாழ்ந்த செங்குந்த குலத்தவரால் அருள்மிகு கற்கட விநாயகர் திருக்கோயில் எழுப்பப்பட்டது. கிட்டத்தட்ட 64 ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி. 2010-ஆம் ஆண்டு இக்கோயில் புனரமைக்கப்பட்டு திருக்குடமுழுக்குப் பெருவிழா நடந்தேறியது. இத்திருக்கோயிலானது ஸ்ரீ கற்கட விநாயகர் கோயில் டிரஸ்டினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

சென்னைப் பெருநகரில் அமைந்துள்ள விநாயகர் ஆலயங்களிலே தனிச்சிறப்பு வாய்ந்ததாக இக்கோயில் அமைந்துள்ளது. விநாயகருக்கென்று பத்து நாட்கள் பிரம்மோற்சவப் பெருவிழா நிகழ்த்தப்படுவதே அத்தனிச்சிறப்பிற்குக் காரணமாகும். ஸ்ரீ அமிர்தவல்லி உடனுறை ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஐயனும் பரிவாரத் தெய்வங்களாக எழுந்தருளி மக்களுக்கு அருள்புரிகின்றனர்.

சூரபத்மனை வதைத்த சூரசம்ஹார போரில் முருகப்பெருமானுடன் பக்கத்துணையாக தோள் தந்த ஸ்ரீ வீரபாகு வழி வந்தவர்கள் செங்குந்தர்கள். அச்செங்குந்தர்களை எந்நாளும் காத்தருளும் கந்தவேலன், வள்ளி தெய்வானையுடன் ஸ்ரீ சிவசுப்பிரமணியராக எழுந்தருளி காட்சி அளிக்கின்றார். சபரிமலையில் பதினெட்டாம் படி கடந்தால் பக்தர்களுக்கு அருள்புரியும் ஸ்ரீ ஐயப்ப சுவாமி இக்கோயிலில் பக்தர்களுக்கு எளிமையாக தரிசிக்கும் வகையில் தனி சன்னதியில் அழகுற எழுந்தருளியுள்ளார்.

தமிழகத்தில் வேறு எங்கும் காணக்கிடைக்காத அருட்சேவையாக அமைந்தது இக்கோயிலில் ஸ்ரீ அரங்கநாதர் தரிசனம். ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீ அரங்கநாதரைக், ஸ்ரீ கருடாழ்வார் அனுமதியுடனும் எதிர்கொண்டு காத்தருளும் ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயரின் அருள் ஆசியுடனும் இணைந்து தரிசிப்பது பக்தர்களுக்கு அமைந்த ஆனந்த பக்தி நெறியாகவே உள்ளது.

நவகிரகங்களைத் தன்னகத்தே கொண்ட அருள்புரியும் அருள்மிகு கற்கட விநாயகர் ஆலயத்தில் ஒன்பது கிரகங்களும் அவர்களின் துணைவியருடன் அவர்களுக்குரிய வாகனங்களில் அமர்ந்த கோலத்தில் வேண்டுபவரின் குறையைத் தீர்த்து அருள்புரிந்த வண்ணம் உள்ளனர். ஒன்பது கோள்களும் சிறப்பாக அமைந்திருக்கும் இவ்வாலயத்தில் குருப் பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி, இராகு-கேது பெயர்ச்சி போன்ற நாட்களில் சிறப்பு யாகங்களும், அபிஷேக ஆராதனைகளும் நடந்தேறி வருகின்றன.

மேலும் தேய்பிறை அஷ்டமிகளிலும், கார்த்திகை செவ்வாய்க் கிழமைகளிலும் ஸ்ரீ கால பைரவருக்குச் சிறப்பு அபிஷேக வழிபாடுகள் நடைபெறுகின்றன.

புராட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரியின் பத்து நாள்களும் ஸ்ரீ அமிர்தவல்லி அம்மன் வெவ்வேறு அழகிய கோலத்தில் அலங்கரிக்கப்பட்டு கொலு மண்டபத்தில் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

பத்து, பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பிற வகுப்பு மாணவர்களுக்கு உண்டாகும் தேர்வு பயத்தைப் போக்கவும், நல்ல மதிப்பெண் பெற்று அவர்கள் வாழ்வில் நல்ல நிலையை அடையவும், அவர்களின் பொதுத்தேர்வுக்கு முன் ஸ்ரீ கற்கட விநாயகர் ஆலயத்தில் அருள்புரியும் ஸ்ரீ ஹயக்ரீவர் குருபகவானுக்குச் சிறப்பு யாகம் செய்து, அபிஷேக ஆராதனையும் செய்யப்படுகிறது. அந்த யாகத்தின் முன் வைத்து வழிபட்ட எழுதுகோல் மற்றும் ஏடுகளும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்குவதன் மூலம் குருபகவான் மற்றும் விநாயகரின் அருளாசி மாணவர்களுக்கு முழுமையாக கிடைக்கப்பெறுகின்றது.

பெருஞ் சிறப்பும் புனிதமும் கொண்ட அருள்மிகு கற்கட விநாயகர் கோயிலில் தற்பொழுது திருப்பணிகள் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன. ஆனைமுகன் அருள்பெற்ற அடியார்களை சிறப்பிக்கும் வகையில் “ஆனைமுகன் அடியார்கள் இராஜகோபுரப் பணி” தற்பொழுது நடைபெற்று வருகிறது. திருப்பணிகள் நிறைவு பெற்றபின் ஆனைமுகனின் அருள்பெற்ற நன்னாளில் ஜீரணோத்தாரன அஷ்டபந்தன திருக்குடமுழுக்குப் பெருவிழா நடைபெற உள்ளது.

வேண்டுவோர், வேண்டியதை வேண்டியவாறு, வேண்டுமளவிற்குத் தருபவர் ஸ்ரீ கற்கட விநாயகர்!

கற்பகத் தருவாய், காமதேனுவாய் இருப்பவரின் பாத பற்றினைப் பற்றுக! பலனை எல்லாம் பெறுக!

ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில்

ஆலந்தூர், சென்னை - 16

முன்னுரை:

சென்னைப்பட்டினம் என்று அழைக்கப்பெற்ற காலத்தில் இப்பகுதி பிருங்கிமாநகர் என அழைக்கப்பட்டது அப்போதய காலம் கி.பி.18ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி. பின் மெட்ராஸ் என தழுவிய காலத்தில் ஆலங்குடி என அழைக்கப்பட்டது. தற்போதைய நிலையில் சென்னை என பெயர் மாற்றி, ஆலங்குடி ஆலந்தூர் என பெயர் மருவி அழைக்கப்பட்டு வருகின்றது. இம்மாற்றம் கி.பி.19ஆம் நூற்றாண்டில் மாற்றம்பெற்றது.

இத்திருக்கோயில் உருவான வரலாறு:

கி.பி.18ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் ஆங்கிலேயர்களின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த முதலியார்ச் சமுதாயத்தைச்

சார்ந்த தற்போது செங்குந்தர் என்று அழைக்கப்படுகிற குலத்தில் பணியாற்றிய சிப்பாய்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு வழிபாட்டுத் தலம் அமைக்க வேண்டும் என்று ஆங்கில ராணுவ அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்து அவர்களின் வாய்மொழி உத்தரவின்படி கி.பி.1880ஆம் காலகட்டத்தில் சிறிய விநாயகர் திருத்தலம் அமைக்கப்பட்டுள்ளது. அதுவே ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் எனப் பெயர்பெற்றது. இத்திருக்கோயில் அமைந்த காலம் முதல் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் செங்குந்தர் மரபினர்களால் நிர்வகிக்கப்பட்டுள்ளது.

கி.பி.1965ஆம் ஆண்டில் இத்திருக்கோயில் மறுசீரமைக்கப்பட்டது. அப்பொழுது ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிங்காரவேலர் மற்றும் நவகிரகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1987இல் ஸ்ரீதுர்கை அம்மன், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ ஐயப்பன் ஆகியோரின் மூலவர் திருமேனிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு திருப்பணிகள் செய்து மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 2018-ஆம் ஆண்டில் நடராஜர் திருஉற்சவ மூர்த்தி விக்கிரகம் அமைக்கப்பட்டு திருவாதிரை நட்சத்திரத்தில் மாதம் தோறும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றது. அன்று முதல் அனைத்து உற்சவங்களும் சீரும்சிறப்புமாக நம்குல சமுதாயத்தைச் சார்ந்த மக்களின் சீரிய முயற்சியுடன் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

மாதாந்திர உற்சவங்கள்:

கிருத்திகை, சஷ்டி, திருவாதிரை, பரணி, உத்திரம், சங்கடஹரசதுர்த்தி, பிரதோஷம், தமிழ் மற்றும் ஆங்கில மாத பிறப்பு ஆகிய அனைத்து உற்சவங்களிலும் சிறப்பு அபிஷேகம் அலங்கார ஆராதனைகள் நடைபெறுகின்றன.

ஆண்டு உற்சவங்கள்:

விநாயகர் சதுர்த்தி, மகா கந்த சஷ்டி, கார்த்திகை தீபம், ஆருத்ரா, அனுமன் ஜெயந்தி, தைப்பூசம், ஸ்ரீராமநவமி ஆகிய தினங்களில் சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனைகளும் தொடர்ந்து திருவீதி உலாவும் நடைபெறுகின்றன.

இத்திருக்கோயிலின் சிறப்புகள்:

இத்திருக்கோயில் பரிகாரஸ்தலம் என்று நம்பப்பட்டு வருகின்றது. ராகு கேது, தோஷ நிவர்த்தி குழந்தை பாக்கியம், வேலைவாய்ப்பு ஆகிய அனைத்திற்கும் விநாயகரை வழிபட்டு மற்றும் திருமண தடை நீங்க ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சிங்கார வேலருக்குத் திருக்கல்யாண உற்சவம் செய்து இறைவழிபாடு செய்து வழிபடுகிறார்கள்.

அருள்மிகு சந்தன விநாயகர் திருக்கோயில்

மாம்பலம் தோப்பேட்டை

சென்னை சைதாப்பேட்டையில் திருக்காரணீஸ்வரர் திருக்கோயில் குளத்திற்கு அருகில் பழைய மாம்பலம் தெருவில் சடையப்ப முதலி தெருவிற்கு நேர்க் குத்தாக

இத்திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் சுமார் 160 ஆண்டுகளுக்கு மேலாக சிறந்து விளங்குகிறது. 1896ஆம் ஆண்டுக்கு முன் இத்திருக்கோயில் சுமார் 15அடி X 12 அடி என்ற அளவில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருந்தது. 1896இல் சொ.சுந்தரமுதலியார் அவர்களின் குமாரர் அங்கு முதலியார் அவர்களால் 100அடி X 110அடி நிலம் தானமாக வழங்கப்பட்டு, தோப்பேட்டை கிராம மக்களால் பெரிய கோயிலாகக் கட்டப்பட்டு 1905இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அப்போது மூலவராக விநாயகரும் மூஷிகமும் பலிபீடமும் மட்டுமே இருந்தது.

1942இல் அப்போதுள்ள பெரியவர்களால் 2 அடி அகலமும் 9அடி உயரமும் உள்ள சுற்றுச்சுவர் கட்டப்பட்டு முன் மண்டபமும் எழுப்பப்பட்டது. 1980ஆம் ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகள் முன்னிலையில் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. பின்னர் 2000ஆம் ஆண்டில் மூலவர் சன்னதிக்கு உள்பிரகாரம் கட்டப்பட்டு ஸ்ரீ ஆதி சந்தனவிநாயகர், ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்ரமண்யர் மற்றும் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ விஷ்ணு கணபதி, ஸ்ரீ துர்கை சிலைகள் பிரதிஷ்டை செய்ததுடன் ஸ்ரீ ஜெயவீர ஆஞ்சநேயருக்கும், காலபைரவர், மற்றும் நவகிரகங்களுக்கும் தனித் சன்னதி அமைக்கப்பட்டது. முன்பு 4 அடி உயரமே இருந்த கோபுரவாசலும் தளத்துடன் கட்டி முடிக்கப்பட்டது. மேலும் அப்போது நிர்வாக அறங்காவலர்களாக இருந்த திரு. R. ஞானசம்பந்தம் செங்குந்தர், திரு. M. வேதாசலம் செங்குந்தர் அவர்களால் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது.

2017ஆம் ஆண்டில் கோபுரம், சிற்பங்களுக்கு வண்ணம் பூசியும் திரு. R. ஞானசம்பந்தம் செங்குந்தர், திரு. S. சந்திரசேகர் செங்குந்தர் மற்றும் திரு. S.பன்னீர்செல்வம் செங்குந்தர் அவர்களால் மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடத்தப்பெற்றது.

திருக்கோயில் ஐம்பொன்சிலைகள்

ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ சிவகாமி அம்பாள், மாணிக்கவாசகர் ஆகிய சிலைகள் உள்ளன.

திருக்கோயிலில் நடைபெறும் உற்சவங்கள்

திருக்கோயிலில் மாதந்தோறும் விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தி விழாவும், கார்த்திகை மாதத்தில் சோமவார அபிஷேகமும், மார்கழி மாதத்தில் தினந்தோறும் காலை அபிஷேகமும், தேய்பிறை அஷ்டமியன்று ஸ்ரீ கால பைரவருக்கு அபிஷேகமும், வாரந்தோரும் குருவிற்கும் ஸ்ரீ துர்கைக்கும் அபிஷேகமும் நடைபெறுகிறது. ஸ்ரீ நடராஜருக்கு ஆனி திருமஞ்சனம் மற்றும் மார்கழி திருவாதிரை சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது. ஸ்ரீ ஜெயவீர ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்துப்படி மற்றும் வெண்ணெய் காப்பும் விசேஷ நாட்களில் நடைபெறுகிறது. தல விருட்சமாக அரசும் வேம்பும் இணைந்து விநாயகர் மற்றும் நாகர்களுடன் அருள்பாலிக்கின்றனர். வருடத்தில்

ஒரு நாள் ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி அன்று சுவாமி வீதியுலா வந்து அருள்பாலிக்கின்றார். அவ்வப்போது ஸ்ரீ சந்தன விநாயகர் சந்தன காப்புடன் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார். இன்றைய நாள் வரை செங்குந்தர் குல மக்களால் இக்கோயில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

அருள்மிகு கைலாய விநாயகர் திருக்கோயில்

பழைய மாம்பலம் 18வது கிராமம், சென்னை - 600 033.

அருள்மிகு. கைலாய விநாயகர் திருக்கோயில் 1926ஆம் ஆண்டு ஆ.மாசிலாமணி செங்குந்தர் அவர்களால் நிறுவப்பட்டு 1956ஆம் ஆண்டு வரை பராமரிக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டுவரை மா.மாணிக்கம் செங்குந்தர் அவர்களால் பராமரிக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை மா.அப்பாதுரை செங்குந்தர் அவர்களால் பராமரிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு முதல் மா.சொக்கலிங்கம் செங்குந்தர் அவர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கோயிலின் முதல் கும்பாபிஷேகம் 1-6-1984ஆம் ஆண்டும், இரண்டாம் கும்பாபிஷேகம் 7-3-2003ஆம் ஆண்டும் சிறப்புடன் நடைபெற்றது. ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தி விழா வெகுவிமர்சையாக அன்னதானம் மற்றும் வீதிஉலாவுடன் நடைபெற்று வருகிறது. மேலும் சித்திரைத் திங்கள் முதல் நாள் அன்று "ஊஞ்சல் சேவையும், அன்னதானமும் மற்றும் மாணவர்களிடம் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இலவச நோட்டுபுத்தகமும் வழங்கப்பட்டு வருகிறது.

உயிர்கள் உய்வு பெறும் வகையில் இறைவன் ஆற்றும் ஐந்தொழில்கள்

1. உயிர்கள் அறிவு விளக்கம் பெறும்பொருட்டு தனு, கரண, புவன போகங்களைப் **படைக்கிறான்.**
2. உயிர்களுக்குப் பயன்படுமாறு அவற்றைக் **காக்கிறான்.**
3. உயிர்களுக்கு உண்டான இளைப்பு நீங்கும் பொருட்டு அரனாகி அவற்றை **ஒடுக்குகிறான்.**
4. உயிர்களின் அனுபவத்திற்கு வாரா வினைகளை காட்டாமலும், உயிர்கள் அனுபவிக்கும்போது போகத்தைக் காட்டி தன்னையும் மகேசனாய் இருந்து **மறைக்கிறான்.**
5. உயிர்களுக்கு இறைப்பற்று மீதூர்ந்தால் அவை தன் திருவடி நிழல் வந்து பேரின்பம் நுகரும் வண்ணம் சதாசிவனாய் இருந்து **அருள்கிறான்.**

63 நாயன்மார்கள் ஆற்றிய சிவபக்திச் செயல்கள்

1. **திருநீலகண்டர்** : சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுத்து அறம் புரிந்த குயவர்.
2. **இயற்பகையார்** : இல்லையென்னாது எதையும் அளித்தவர். தம் மனைவியையே சிவனடியார்க்கு மனமுவந்து அளித்த வணிகர்.
3. **இளையான்குடி மாறன்** : வறுமையுற்றபோதும் நள்ளிரவிலும் அடியார்க்கு அமுது அளித்த வேளாளர்.
4. **மெய்ப்பொருள் நாயனார்** : அடியார்கள் திருவேடத்தையே மெய்ப் பொருளாகக் கொண்டவர்.
5. **விறன்மிண்ட நாயனார்** : தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார்களை வணங்காமையால் சுந்தரரையும் பகைத்த வேளாளர்.
6. **அமர்நீதி நாயனார்** : அடியார் கொடுத்த கோவணம் மறைந்ததற்காக ஈடு செய்ய தன் மனைவி, மக்கள், சொத்துக்களுடன் தன்னையும் சிவனடியார்க்கு அர்ப்பணம் செய்த வணிகர்.
7. **எறிபத்த நாயனார்** : கையிலிருந்த மழுவாயுதத்தால் சிவனடியார்களின் பகைவரைக் (பட்டத்து யானையை) கொன்று சைவத்தை வளர்த்தவர்.
8. **ஏனாதிநாத நாயனார்** : திருநீற்றின் பொலிவைக் கண்டு அதிசூரனைக் கொல்லாமல் தாமே இறந்தவர்.
9. **கண்ணப்ப நாயனார்** : சிவபெருமானுக்குத் தம் கண்களையே கொடுத்த வேடுவர்.
10. **குங்கிலியக் கலய நாயனார்**: நாடோறும் சிவபெருமானுக்குக் குங்கிலியத் தூபமிட்ட மறையவர்.
11. **மானக்கஞ்சாற நாயனார்** : தம் மகளின் நீண்ட கூந்தலைச் சிவனடியாரின் பஞ்சவடிக்காக அளித்த வேளாளார்.
12. **அரிவாட்டாய நாயனார்** : பூசைப் பொருள்கள் தவறித் தரையில் உள்ள நிலவெடிப்பில் சிந்தியமையால் தம் ஊட்டியை (கழுத்து) தாமே அறுக்க முனைந்த வேளாளர்.

13. ஆனாய நாயனார் : பஞ்சாட்சரத்தை வேய்ங்குழலில் இசைத்து முக்தி பெற்ற யாதவர்.

14. மூர்த்தி நாயனார் : சந்தனக் கட்டை கிடைக்காதபோது தம் முழங்கையைத் தேய்த்து இறைவனுக்குக் காப்பிட முனைந்த வணிகர்.

15. முருக நாயனார் : மலர் மாலைகள் தொடுத்து இறைவனை வழிபடும் திருப்பணியில் ஈடுபட்ட மறையவர்.

16. உருத்திர பசுபதி நாயனார் : நாடோறும் திருவுருத்திர மந்திரங்களை ஓதி முத்தியடைந்த மறையவர்.

17. திருநாளைப் போவார் நாயனார்: பறையர் குலத்தில் தோன்றியவர். தில்லையில் தீக்குள் புகுந்து வேதியராகி முக்தியடைந்தவர்.

18. திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் : அடியார்களின் ஆடைகளின் அழுக்கை நீக்கி உதவியவர்.

19. சண்டேசுவர நாயனார் : சிவபூசைக்குரிய பாற்குடங்களை உதைத்த தந்தையின் காலை வெட்டிய மறையவர்.

20. திருநாவுக்கரசு சுவாமிகள்: சைவமும் தமிழும் தழைக்கத் தேவாரம் பாடியவர். பல அற்புதங்களைச் செய்தவர். புறச்சமய இருளை நீக்கிய வேளாளர்.

21. குலச்சிறை நாயனார் : பாண்டிய மன்னனின் முதல் அமைச்சராக இருந்து சைவ நெறியைக் காத்தவர்.

22. பெருமிழலைக் குறும்ப நாயனார் : சுந்தரமூர்த்தி நாயனாரையே தொழுது அவரோடு சிவப்பேறு பெற்றவர்.

23. காரைக்காலம்மையார் : இறைவனருளால் இருமுறை மாயமாங்கனி பெற்றவர்.

24. அப்பூதியடிகள் : திருநாவுக்கரசரின் திருப்பெயரை ஓதிச் சிவப்பேறு பெற்ற அந்தணர்.

25. திருநீலநக்க நாயனார் : திருஞானசம்பந்தரின் திருமணத்தைத் தரிசித்துச் சிவப்பேற்றை அடைந்த மறையவர்.

26. நமிநந்தியடிகள் நாயனார் : சமணர்கள் எண்ணெய் தர மறுத்தமையால் குளத்து நீரையே கொண்டு விளக்கு எரித்த மறையவர்.

27. திருஞானசம்பந்தர் : ஞானப்பால் உண்டவர். பல அற்புதங்கள் செய்தவர். தேவாரம் பாடிச் சைவமும் தமிழும் தழைக்கச் செய்த மறையவர்.

56. பூசலார் நாயனார் : மனக்கோயில் கட்டிச் சிவபெருமானை பிரதிஷ்டை செய்த மறையவர்.

57. மங்கையர்க்கரசியார் : நின்றசீர் நெடுமாறனாரின் மனைவியாவார், திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரவேற்றுத் தம் கணவரைச் சைவராக்கியவர்.

58. நேச நாயனார் : சிவனடியார்களுக்கு உடை, கோவணம், கீள் (அரைஞாண்) முதலியன கொடுத்துக் காத்த சாலியர்.

59. கோச் செங்கட் சோழ நாயனார் : திருவானைக்கா திருமதில் பணிகளைச் செய்தவர். 70 சிவன் கோயில்கள் கட்டியவர்.

60. திருநீலகண்ட யாழ்ப்பாணர் : திருஞானசம்பந்தரின் பாடல்களை யாழில் அமைத்துப் பாடியவர்.

61. சடைய நாயனார் : சுந்தரரின் தந்தையார்.

62. இசை ஞானியார் : சுந்தரரின் அன்னையார்.

63. சுந்தரமூர்த்தி நாயனார் : சடையனார், இசை ஞானியார் ஆகியோரின் மைந்தர். சிவபெருமான் தோழர். தேவாரம் பாடிச் செந்தமிழ் வளர்த்த ஆதி சைவர்.

தொகை அடியார்கள்

1. **தில்லைவாழ் அந்தணர்** : தில்லையில் நடராசப் பெருமானுக்கு வழிபாடு புரியும் அந்தணர்கள்.
2. **பொய்யடிமையில்லாத புலவர்** : சங்ககாலப் புலவர் நாற்பத்தொன்பதின்மர்.
3. **பத்தராய் பணிவார்** : திருவாரூரில் புற்றிடங்கொண்ட பெருமானை முழுமுதல் கடவுளாய் வழிபட்ட தொகையடியார்கள்.
4. **பரமனையே பாடுவார்** : சிவபெருமானை மட்டுமே பாடுபவர்கள், பிற தெய்வத்தை பாடாதவர்கள்.
5. **சித்தத்தை சிவன்பாலே வைத்தார்** : சிவயோக நெறியில் சித்தத்தை வைத்து முத்தியடைந்தவர்கள்.
6. **திருவாரூர்ப் பிறந்தார்** : திக்கயிலாயத்தில் உள்ள சிவ கணங்களே இவர்கள்.
7. **முப்போதும் திருமேனி தீண்டுவார்** : மூன்று காலங்களிலும் சிவபெருமானை அபிஷேகம் செய்து அர்ச்சிப்பவர்கள்.
8. **முழுநீறு பூசிய முனிவர்** : உடல் முழுவதும் திருநீறு பூசி சிவபெருமானையே பூசித்து வருபவர்கள்.
9. **அப்பாலும் அடிசார்ந்தார்** : முத்தமிழ் நாடுகளுக்கு அப்பால் உள்ள நாடுகளில் வாழ்ந்த சிவனடியார்கள்.





உ



தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

காவாய் கனகத் திரளே போற்றி!
கயிலை மலையானே போற்றி! போற்றி!

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாசன சங்கம்

பொன்விழா ஆண்டு

With best wishes from :

SUNDER PALAYAKAT CO. MADRAS - CALCUTTA SINCE - 1985

SUNDER PALAYAKAT CO

HANDLOOM LUNGI MERCHANTS

Our Famous Brands

Afghan® ABBA® DADU® Abdulla®

104, (Old No. 90) New Street, Mannady, Chennai - 600 001
e-mail : sunder90spc@gmail.com | Mobile : 77080 66997, 80561 78777

பொன் விழா வாழ்த்துகள்

CHENNAI SASWATHA NIDHI LIMITED

Regd. Office : 76/1, Jones Road, Saidapet, Chennai - 600 5.
Phone : 43569400

FIXED DEPOSIT	
12 Months	8.25%
24 Months	8.5%
36 Months	8.75%

FIXED DEPOSIT	
12 Months	8.75%
24 Months	9%
36 Months	9.25%

FIXED DEPOSIT

Period	Rate of Interest	Deposit Amount	Maturity Value
12 Months	8.25%	Rs.1,000/-	Rs.1,085/-
24 Months	8.5%	Rs.1,000/-	Rs.1,183/-
36 Months	8.75%	Rs.1,000/-	Rs.1,297/-

RECURRING DEPOSIT

Period	Rate of Interest	Deposit Amount	Maturity Value
12 Months	8.25%	Rs.100/-	Rs.1,254/-
24 Months	8.5%	Rs.100/-	Rs.2,626/-
36 Months	8.75%	Rs.100/-	Rs.4,122/-

JEWEL LOAN

12 Months	10.75%	Loan Per Gram	Rs.3,500/-

PROPERTY LOAN	
60 Months	16%
84 Months	16%

இயக்குநர்கள்

A. ஸ்ரீதேவி, B.B.M.
R. சங்கீதா, B.A.
V. ஜெயக்குமார், B.A.
D. கவிதா, M.Sc.
G. இராமபிரபு, B.B.A. (தலைவர்)
C. பொன்னம்பலம், B.B.A.


வாழ்க வளமுடன்
S.S.MAHAL A/C
G.P.PARTY HALL A/C
Marriage Hall Capacity - 500
Dinning Hall Capacity - 150
Car Parking - 50 Nos
Two Wheelers - 300 Nos
Lift Service
A/C Rooms
Lighting Genset
Unlimited Gas Cylinders
Security Services
Best Cleaning Services
#191, Pammal Main Road, (Old Shanmuga Theatre) Pammal, Chennai - 600 075.
Cell : 94440 42114 / 98411 71544 / 80721 36353
SS SPORTZ
SS SPORTZ VILLAGE
Pavazhamalai Street, Thiunavukarasu Avenue, Manikandan Nagar,
Near by P DOT-G Apartment, Kundrathur, Chennai-69 www.ssportz.com
BADMINTON
SWIMMING
ARCHERY
GYM
INDOOR CRICKET
INDOOR FOOTBALL
SKATING
Contact : 96770 55560 / 98411 71544
160

சென்னை பெருநகர் செங்குந்தர் சங்கத்தின் பொன்விழா ஆண்டு

அதன் பணி மேலும் தொடர பொன்விழா நல் வாழ்த்துக்கள்.








அறிஞர் அண்ணா அரங்கம் A/C

எங்களின் மண்டபம் குளிர் சாதனம் மற்றும்
தங்கும் அறைகள், பார்க்கிங் வசதியுடன் (Veg & Non Veg)
மிக குறைந்த கட்டணத்துடன் செயல்படுகிறது.

நெ.39, துலுக்கத்தெரு, குன்றத்தூர், சென்னை-69.
போன் : 29850045.

28. ஏயர்கோன் கலிக்காம நாயனார் : சுந்தரர் சிவபெருமானைத் தூது அனுப்பியதால் அவரைப் பகைத்துப் பின்னர் சூலை நோய் அடைந்து சுந்தரரின் தொடர்பைப் பெற்ற வேளாளர்.

29. திருமூல நாயனார் : 18 சித்தர்களுள் ஒருவர், சிவயோக ஞானி, திருமந்திரம் பாடிய சித்தர். (திருமந்திரம் சைவ சிந்தாத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது).

30. தண்டியடிகள் நாயனார் : திருவாரூர்க் கமலாலயக் குளத்தைப் பிறவிக் குருடராக இருந்தும் திருத்தும் பணியில் ஈடுபட்டவர்.

31. மூர்க்க நாயனார் : சூதாடி வென்ற பொருளால் சிவனடியார்கட்கு அன்னதானம் செய்த வேளாளர்.

32. சோமாசி மாற நாயனார் : சிவ வேள்விகள் புரிந்து சுந்தரரை வழிபட்டுச் சிவபதம் அடைந்த மறையவர்.

33. சாக்கிய நாயனார் : நாடோறும் கற்களையே மலராகச் சிவலிங்கத்தின் மீது எறிந்து தம் பக்தியை வெளிப்படுத்திய வேளாளர்.

34. சிறப்புலி நாயனார் : திருவைந்தெழுத்தை ஓதித் தாம் புரிந்த வேள்வியைச் சிவபெருமானுக்கே தத்தம் செய்த மறையவர்.

35. சிறுத்தொண்ட நாயனார் : இல்லை என்னாமல் பிள்ளைக்கறி சமைத்துச் சிவனடியாரை வழிபட்டவர்.

36. கழறிற்றறிவார் நாயனார் : உவர்மண் பூசிய சலவைத் தொழிலாளனை, சிவவேடத்தை நினைவூட்டியதாக வணங்கியவர்.

37. கணநாத நாயனார் : திருஞானசம்பந்தரை வழிபட்டுத் திருக்கயிலையை அடைந்த மறையவர்.

38. கூற்றுவ நாயனார் : நடராசப் பெருமானின் திருவடியே தம் மணிமுடியாக வழிபட்டவர்.

39. புகழ்சோழ நாயனார் : தாம் வெட்டிய பகையரசர்களின் தலை ஒன்று சடைமுடி தரித்திருப்பதை அறிந்து மனம் நொந்து தீப்புகுந்தவர்.

40. நரசிங்க முனையரைய நாயனார் : போலிச் சிவனடியாரிடமும் அன்பு காட்டிய பெருந்தகையார்.

41. அதிபத்த நாயனார் : நாடோறும் தம் வலையில் அகப்படும் முதல் மீனை இறைவனுக்குப் படைத்த மீனவர்.

42. கலிக்கம்ப நாயனார் : சிவவேடங்கொண்ட பணியாளனையும் வழிபட்டவர். மறுத்த மனைவி கையை வெட்டிய வணிகர்.

154

43. கலிய நாயனார் : எண்ணெயும் விறகும் இல்லாதபோதும் தமது ரத்தத்தால் விளக்கு எரித்து கோயிலில் ஒளியுண்டாக்கிய வாணியர்.

44. சக்தி நாயனார் ; சிவனடியார்களை இகழ்ந்தவர் நாவைத் தண்டாயம் என்னும் குறடுபோலும் கருவியால் இழுத்து கத்தியால் அரிந்த வேளாளர்.

45. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்: ஆட்சியைத் துறந்து சிவத்தலங்களை வழிபட்டு க்ஷேத்திரத் திருவெண்பா என்னும் நூலை இயற்றியவர்'

46. கணம்புல்ல நாயனார் : கணம்புல்லை விற்று நெய் வாங்க தீபத்திருப்பணி புரிந்தவர். நெய் இல்லாததால் தலைமயிரையே எரித்தவர்.

47. காரி நாயனார் : 'காரிக்கோவை' என்னும் நூல் இயற்றி அதன் ஊதியத்தைக் கொண்டு தமிழ்ப் பணி புரிந்தவர்.

48. நின்றசீர் நெடுமாற நாயனார் : சமண சமயத்தவராக இருந்து திருஞானசம்பந்தரால் சைவ சமயத்துக்கு திரும்பப் பெற்றவர்.

49. வாயிலார் நாயனார் : சிவபெருமானுக்கு மனத்தினாலேயே திருக்கோயில் அமைத்து திருமஞ்சனம், தூப தீபம் செய்துவந்த வேளாளர்.

50. முனையடுவார் நாயனார் : கூலிக்குப் போர் செய்து திரட்டிய பொருளை அடியார்களுக்கு வழங்கிய வேளாளர்.

51. கழற்சிங்க நாயனார் : பூமண்டபத்தின் கீழே இருந்த மலரை முகர்ந்து பார்த்த தம் மனைவியாரின் கையை வெட்டியவர். பல்லவ மன்னர்.

52. இடங்கழி நாயனார் : தம் செல்வத்தையும் அம்பாரத்தையும் சிவனடியார்கள் கொள்ளை கொள்ள விட்டுவிட்ட ஒரு குறுநில மன்னர்.

53. செருத்துணை நாயனார் : கழற்சிங்கரின் மனைவி பூமண்டபத்திலிருந்த மலரை முகர்ந்து பார்த்ததால் அவ்வம்மையாரின் மூக்கையறுத்த வேளாளர்.

54. புகழ்த்துணை நாயனார் : சிவபெருமான் திருவருளால் பஞ்சத்தில் நாள்தோறும் ஒவ்வொரு பொற்காசு பெற்றவர்.

55. கோட்புலி நாயனார் : சிவபெருமானுக்குப் படைப்பதற்காகத் தாம் சேமித்து வைத்த நெல்லை உண்ட சுற்றத்தினரைக் கொன்று நேர்மையை நிலைநாட்டிய வேளாளர்.

155

கடலூர் மாவட்டம்

தென் தமிழக வரலாற்றில் கடலூர் மாவட்டம் ஆன்மீகம் வரலாறு, தியாகம் அனைத்து துறைகளிலும் முன்னிலை வகிக்கும் மாவட்டமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. அதன் தொகுப்பினை கீழே காண்போம்.

ஆன்மீகம் :

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று அருளிச்சென்ற இராமலிங்க அடிகளார் பிறந்து வளர்ந்து, திருஅருட்பா அருளிச்செய்து ஜோதியில் ஐக்கியம் ஆகி முக்தி பெற்றது யாவும் கடலூர் மாவட்டமே ஆகும்.

நடனக் கலைகளுக்கு இலக்கணமாக விளங்கி யாவும் தன்னுள் அடக்கம் என்று இயம்பி "கண்டேன் கண்டேன்" "அவன் திருப்பாதம் கண்டேன்" என்று அரிசனக் குலத்தில் பிறந்த நந்தனார் வாயால் பாடவைத்து அவருக்குக் காட்சிதந்து முக்தி அளித்து இயற்கையின் படைப்பில் அனைத்து உயிர்களும் சமமே, உயர்ந்த சாதி - தாழ்ந்த சாதி என்று ஏதும் இல்லை என்று சமரச சன்மார்க்கத்தை உலகுக்கு உணர்த்திய தில்லை கூத்தன் எம்பெருமான் நடராஜப் பெருமான் ஐக்கியமான சிதம்பரம் கடலூர் மாவட்டமே.

சிவத்தலங்களில் மட்டும் அல்ல, சிவ புராணங்களிலும் சிறப்பாக வர்ணிக்கப்படும் சிதம்பரம் கடலூர் மாவட்டமாகும்.

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா" என்று சுந்தரர் அடிகளால் பாட வைத்த பெருமைக்குரிய திருத்தலம் திருவெண்ணெய்நல்லூர், கடலூர் மாவட்டம் ஆகும்.

"கற்றுணை பூட்டியோர் கடலினில் பாய்ச்சினும் நன்றுணையாவது நமச்சிவாயவே" என அப்பர் அடிகள் பிறந்த ஊர் பண்ருட்டியை அடுத்த திருவதிகை, கடலூர் மாவட்டம் ஆகும். அப்பர் அடிகள் கடலிலிருந்து கரைசேர்ந்த இடம் கரையேறவிட்ட குப்பம் கடலூர் வண்டிப்பாளையம் அருகில் உள்ளது. அந்த இடத்தில் ஆண்டுதோறும் விழா எடுக்கப்படுகிறது.

வரலாறு :

"வான்பொய்த்தாலும் தான் பொய்க்காது வற்றாக் கருணை காவேரி" என்று அகத்திய முனிவரால் பாடல்பெற்ற காவிரி ஆறு அணைக்கரை வழியாக வழிந்தோடி வந்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி தரும் மிகப்பெரிய வீராணம் ஏரி இருப்பது காட்டுமன்னார்கோவில் கடலூர் மாவட்டமாகும்.

முன்னாள் முதல்வர் மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா அம்மையார் அவர்களின் முயற்சியால் இன்றும் சென்னை மாநகரின் குடிநீர் தேவையை பூர்த்திசெய்து வருகிறது.

பிரஞ்சுக்காரர்கள் நம் நாட்டை ஆண்டபோது "Portonovo" என்று அழைக்கப்பட்ட பரங்கிப்பேட்டைக்கு அருகில் கடல் மூலமாக வந்ததாக சான்று உள்ளது.

இன்றும் கடலூர் பழைய பட்டணத்தில் "கிளைவ் தெரு" போன்ற பிரஞ்சுப் பெயர்கள் வழக்கத்தில் இருந்து வருகிறது.

கடலூர் பழைய மாவட்ட ஆட்சியர் வளாகம் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டு பல நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கும். இன்றும் அவைகள் கட்டடக்கலைக்குச் சான்றாகத் திகழ்கிறது.

தென்னகத்தில் மிகப்பெரிய சர்க்கரை ஆலையாக இன்றும் செயல்பட்டுவரும் EID PARRYS Ltd. இருக்கும் நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டமாகும். பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் அமைந்துள்ளது தனிச்சிறப்பு. "பலாப்பழம்" எனற்ால் பண்ருட்டிதான் நினைவுக்கு வரும். அந்தப் பகுதியின் மண் நிலம் வாகு அதற்குத் தனிச்சுவையைக் கொடுத்து என்றும் இன்றும் பெயர் சொல்ல வைக்கும் பண்ருட்டி கடலூர் மாவட்டமாகும்.

தியாகம் :

தமது வயலின் விவசாயத்திற்கு ஆழ்துளை போர்போடும்போது தண்ணீருடன் பழுப்பு நிற துகள்களும் மிக அதிகமாக கலந்து வருவதைக் கண்ணுற்று நிலக்கரி படிமங்கள் உள்ளது என அறிந்து அப்போதைய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, தமிழக முதல்வர் கர்மவீரர் காமராஜர் ஆகியோரை நேரில் பலமுறை சென்று சந்தித்து அவர்களது ஆய்வின்படி அவைகள் "பழுப்பு நிலக்கரி" தான் என அறிந்ததும் அனைத்து நிலங்களையும், அதாவது 600க்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்களை அரசுக்கு தானமாக வழங்கி அதன்மூலம் மின்சாரம் எடுத்து இந்தியாவிற்கு ஒளிகொடுக்கவும், பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட வித்திட்டு அவர்களது வாழ்வில் என்றும் அனையா தீபஒளி ஏற்றிய ராவ் பகதூர், வள்ளல் M. ஜம்புலிங்கம் செங்குந்தர் ஐயா அவர்கள் பிறந்தது கடலூர் மாவட்டம் திருக்கண்டீஸ்வரமாகும்.

கார் உள்ளவரை - கடல்நீர் உள்ளவரை - என்பதுபோல நெய்வேலி பழுப்பு நிலக்கரி மற்றும் அனல் மின் நிலையம் உள்ளவரை ராவ்பகதூர் ஜம்புலிங்கம் ஐயா அவர்களின் தியாகத்தை பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

கடலூர் மாவட்டத்தின் மேலும் பல்வேறு சிறப்புகளை சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் அதற்கு பக்கங்கள் போதாது.

கடைசியாக ஒன்று... நம் சமுதாய பணிகுறித்து கடலூர் மாவட்டத்தின் பங்கு...

திருவாரூர் வள்ளல் சபாபதி செங்குந்தர் அவர்களால் வரைபடுத்தப்பட்ட நமது செங்குந்த மகாஜன சங்கம் நூறு ஆண்டுகளைக் கடந்து பீடுநடைபோட்டு வருகிறது.

சென்னை சபாபதி பள்ளி வாங்கியபோதும் சரி, அதன் கட்டடம் கட்டப்பட்டபோதும் சரி அதற்கு கடலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் பெருமளவு நிதிதிரட்டி தந்து துணை நின்றது.

அதேபோல சென்னை அரண்மனைக்காரன் தெரு கட்டடம் மறைந்த நம் ஒப்பற்ற தலைவர் நெசவாளர் நேசன் J.சுத்தானந்தன் அவர்கள் மாளிகையாக கட்டியபோது அனைத்து மாவட்டங்களைவிட கடலூர் மாவட்டம் அதிக நிதி சேர்த்துக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது.

நம்குல மாதஇதழ் செங்குந்த மித்திரன் வெளிவர தொய்வு ஏற்பட்டபோதெல்லாம் அதிக அளவில் சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுத்தது கடலூர் மாவட்டமே ஆகும்.

பெண்ணாடம் ஆ.ராஜவேலு அவர்கள் முன்னாள் தலைவர் M.P. நாச்சிமுத்து அவர்கள் மறைந்தபோது திரு. J.சுத்தானந்தம் அவர்கள் ஒருமனதாக மாநில தலைவராக வருவதற்கு பெரும் பங்காற்றினார்கள்.

அதேபோல J.S. அவர்கள் மறைந்தபோது அடுத்த தலைவர் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலையில் நீதமன்ற வழக்கு ஒன்று இருந்ததால் அதனை சாதுர்யமாக கையாண்டு நீதிமன்ற உத்திரவின்படி அட்ஹாக் கமிட்டி தலைவராக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற கெடுவிற்கு முன்பாகவே அனைத்து மாவட்டங்களிலும் ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தி J.S.-க்கு பிறகு ஜனநாயகமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மாநில தலைவர் திரு. பெண்ணாடம் ஆ.ராஜவேலு என்ற சிறப்பையும் பெற்றார்.

கடலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவராக மறைந்த திரு. வை.ஆனந்தன் அவர்கள் நீண்டகாலம் பணியாற்றி திரு. ஆ.ராஜவேலு அவர்களுடன் மாவட்டத்தின் அனைத்து ஊர்களுக்கும் சென்று உறுப்பினர்களைச் சேர்த்தும், கிளைச் சங்கங்களை ஏற்படுத்தியும், மாநில அளவில் அதிக உறுப்பினர்களையும், அதிக கிளைச் சங்கங்களையும் உள்ளடக்கிய மாவட்டமாகத் திகழ வழிவகை செய்தார்கள்.

திரு. வை.ஆனந்தன் ஐயா அவர்களது மறைவிற்கு பிறகு பெண்ணாடம் திரு. ஆ.ராஜவேலு அவர்கள் மாவட்ட தலைவராக திறம்பட பணியாற்றி வருகிறார்கள்.

நன்றி, வணக்கம்.

P. கோவிந்தசாமி
பொதுச்செயலாளர்
கடலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்
கடலூர்.

திருமழிசை



திரு. T.N.சண்முகம்
தலைவர்



திரு. T.K.விஜயபாரதி
செயலாளர், செ.கு.உ.



Dr. T.K.தேவராஜன்
பொருளாளர், செ.கு.உ.



திரு. S.ஜெயக்குமார்
செயற்குழு உறுப்பினர்



திரு. T.V.கருணாகரன்
செயற்குழு உறுப்பினர்



திரு. T.S.குருமூர்த்தி
செயற்குழு உறுப்பினர்



திரு. S.கோபாலகிருஷ்ணன்
செயற்குழு உறுப்பினர்

திருநாகேஸ்வரம் (குன்றத்தூர்)



திரு. T.E.ராஜ்பாபு
தலைவர், செ.கு.உ.



திரு. M.A.சிவசாமி
செயலாளர், செ.கு.உ.



திரு. R.விஸ்வநாதன்
பொருளாளர், செ.கு.உ.



திரு. T.V.சரவணன்
செயற்குழு உறுப்பினர்



திரு. S.சபாபதி
செயற்குழு உறுப்பினர்



திரு. T.T.கிருபாகரன்
செயற்குழு உறுப்பினர்



திரு. T.N.செந்தில்குமார்
செயற்குழு உறுப்பினர்

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க கிளை நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள்

மயிலாப்பூர்



திரு. S.இளங்கோ
தலைவர், செ.கு.உ.



திரு. J.கார்த்திகேயன்
செயலாளர், செ.கு.உ.



திரு. S.பிரபாகரன்
பொருளாளர், செ.கு.உ.



திரு. S.நாகராஜன்
செயற்குழு உறுப்பினர்



திரு. R.விஜயகுமார்
செயற்குழு உறுப்பினர்



திரு. M.S.மூர்த்தி
செயற்குழு உறுப்பினர்

திருக்காரணி



திரு. S.தங்கராஜ்
தலைவர், செ.கு.உ.



திரு. D.ஸ்ரீதர்
செயலாளர், செ.கு.உ.



திரு. R.தனசேகரன்
பொருளாளர், செ.கு.உ.



திரு. N.அண்ணாமலை
செயற்குழு உறுப்பினர்



திரு. T.சசிகுமார்
செயற்குழு உறுப்பினர்



திரு. B.செந்தில்முருகன்
செயற்குழு உறுப்பினர்

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க கிளை நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள்

மேற்கு மாம்பலம்



திரு. D.ஆறுமுகம்
தலைவர், செ.கு.உ.




திரு. K.ஆறுமுகம்
செயலாளர், செ.கு.உ.



திரு. N.பன்னீர்செல்வம்
பொருளாளர், செ.கு.உ.



திரு. R.K.செல்வமணி
செயற்குழு உறுப்பினர்



திரு. N.G.சுப்பிரமணியன்
செயற்குழு உறுப்பினர்



திரு. S.வாசுதேவன்
செயற்குழு உறுப்பினர்

மாம்பலம் - தோப்பேட்டை



திரு. R.ஞானசம்பந்தம்
தலைவர், செ.கு.உ.



திரு. R.கந்தசாமி
செயலாளர், செ.கு.உ.



திரு. S.பன்னீர்செல்வம்
பொருளாளர், செ.கு.உ.



திரு. S.ராமலிங்கம்
செயற்குழு உறுப்பினர்



திரு. V.ஜெயகுமார்
செயற்குழு உறுப்பினர்



திரு. S.இந்திரஜித்
செயற்குழு உறுப்பினர்

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க கிளை நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள்

அனகாபுத்தூர்



திரு. V.ரத்தினம்
தலைவர்



திரு. T.நடராஜ்
செயலாளர்



திரு. N.ரவி
பொருளாளர்



திரு. N.மனோகரன்
செயற்குழு உறுப்பினர்



திரு. T.பானுமூர்த்தி
செயற்குழு உறுப்பினர்



திரு. T.அழகேசன்
செயற்குழு உறுப்பினர்



திரு. A.பன்னீர்செல்வம்
செயற்குழு உறுப்பினர்



திரு. M.தனபால்
செயற்குழு உறுப்பினர்




திரு. D.சசிகுமார்
செயற்குழு உறுப்பினர்

திருவல்லிக்கேணி




திரு. N.வேதகிரி
தலைவர், செ.கு.உ.



திரு. S.S.குமார்
செயலாளர், செ.கு.உ.



திரு. S.D.பழனி
பொருளாளர், செ.கு.உ.



திரு. S.திருக்காளத்தி
செயற்குழு உறுப்பினர்

பெரம்பூர்



திரு. பொன். இளங்கோவன்
கிளை பொறுப்பாளர்

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க கிளை நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள்

பம்மல்



திரு. V.மணி
தலைவர், செ.கு.உ.



திரு. K.ஞானப்பிரகாசம்
செயலாளர், செ.கு.உ.



திரு. D.சேகர்
பொருளாளர், செ.கு.உ.



திரு. S.தெய்வசிகாமணி
செயற்குழு உறுப்பினர்



திரு. D.ரமேஷ்
செயற்குழு உறுப்பினர்



திரு. M.நடராஜன்
செயற்குழு உறுப்பினர்

ஆலந்தூர்



திரு. A.P.வேதாத்திரி
தலைவர், செ.கு.உ.



திரு. A.G.பழனிசாமி
செயலாளர், செ.கு.உ.



திரு. G.பொன்மணி
பொருளாளர், செ.கு.உ.



திரு. S.K.பிரபாகரன்
செயற்குழு உறுப்பினர்



திரு. A.கார்த்திகேயன்
செயற்குழு உறுப்பினர்



திரு. A.கணேஷ்
செயற்குழு உறுப்பினர்

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க கிளை நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள்

மேப்பூர்




திரு. K.ஆறுமுகம்
தலைவர், செ.கு.உ.



திரு. S.பாஸ்கர்
செயலாளர், செ.கு.உ.



திரு. T.முருகன்
பொருளாளர், செ.கு.உ.



திரு. S.கபிலன்
செயற்குழு உறுப்பினர்



திரு. R.சுந்தரம்
செயற்குழு உறுப்பினர்



திரு. S.முரளி
செயற்குழு உறுப்பினர்

மூன்றாம் கட்டளை



திரு. P.சம்பத்
தலைவர், செ.கு.உ.



திரு. R.மணிக்கம்
செயலாளர், செ.கு.உ.



திரு. L.சேகர்
பொருளாளர், செ.கு.உ.



திரு. S.ஸ்ரீகாந்த்
செயற்குழு உறுப்பினர்



திரு. N.பாலமுருகன்
செயற்குழு உறுப்பினர்



திரு. B.ரவிச்சந்திரன்
செயற்குழு உறுப்பினர்



நன்றி

சென்னைப் பெருநகர்
செங்குந்த மகாஜன சங்கத்தின்
50 ஆண்டு நிறைவு பொன்விழாவுக்கு வருகைதந்த
முதன்மை சிறப்பு விருந்தினர்களுக்கும்,
அனைத்து மாவட்ட, தலைவர், செயலாளர்,
பொருளாளர் மற்றும் அனைத்து
நிர்வாகிகளுக்கும், ஆந்திரா,
கர்நாடா மற்றும் புதுச்சேரி
மாநில நிர்வாகிகளுக்கும்,
நன்கொடை வழங்கிய பேரருளாளர்களுக்கும்,
சென்னைப் பெருநகர்
சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும்
பொறுப்பாளர்களுக்கும்,
கிளைச் சங்கங்களின் நிர்வாகிகள்
மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கும்,
ஒத்துழைப்பு நல்கிய நல் உள்ளங்களுக்கும்,
உணவு தயாரித்து வழங்கிய
பொறுப்பாளர்களுக்கும், பொன்விழா
மலருக்கு வாழ்த்துரை வழங்கிய
பெரியோர்களுக்கும், விளம்பரம் அளித்து
உதவிய நல்லோர்க்கும்,
பொன்விழா மலரை ஆக்கித்தந்த
தலைமை ஆசிரியருக்கும்,
சடையப்பா திருமண மண்டபத்தை
இலவசமாக அளித்து உதவிய
பெரியோர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,
மாணவச் செல்வங்களுக்கும்,
நம் சொந்தங்களுக்கும் சங்கத்தின் சார்பாக
கோடானு கோடி நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்

D. ஆறுமுகம்
தலைவர்
சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்கம்

சென்னைப் பெருநகர் செங்குந்த மகாஜன சங்க கிளை நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள்

மேற்கு சைதாப்பேட்டை



திரு. S.ரமேஷ்
தலைவர், செ.கு.உ.



திரு. G.மாணிக்கம்
செயலாளர், செ.கு.உ.



திரு. சொக்கலிங்கம்
பொருளாளர், செ.கு.உ.



திரு. P.S.சங்கர்
செயற்குழு உறுப்பினர்



திரு. M.ராஜவேலு
செயற்குழு உறுப்பினர்



திரு. V.சாமிநாதன்
செயற்குழு உறுப்பினர்

தாம்பரம்



திரு. M.குழந்தைவடிவேலு
தலைவர், செ.கு.உ.



திரு. A.ஆலாலசுந்தரம்
செயலாளர், செ.கு.உ.



திரு. G.சேகர்
பொருளாளர், செ.கு.உ.



திரு. G.பாஸ்கரன்
செயற்குழு உறுப்பினர்



திரு. R.தண்டபாணி
செயற்குழு உறுப்பினர்



திரு. M.சுப்பிரமணியன்
செயற்குழு உறுப்பினர்

செங்குந்தர் குலத்துச் செம்புலவர்கள்

கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர்

பழங்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த நம் செங்குந்தர் மரபைச் சார்ந்த சான்றோர், கற்றோர் பலருள் ஒட்டக்கூத்தர் முக்கியமாக வைத்து எண்ணத்தக்கவர். ஆயிரம் பிறைக்கும் மேலாகக் கண்டவர். சமய ஒழுக்கத்தாலும், தேர்ந்த தமிழ்ப் புலமையாலும் சீரிய அரசியல் அனுபவத்தாலும் புகழ் பெற்று விளங்கியவர். சூழலுக்கு ஏற்ப பொருத்தமாகக் கவிபாடி மகிழ்வித்ததால் ஆசுகவியாகத் திகழ்ந்தார். பொருள் இன்பங்களோடு கூடிய பாடல்களைச் செவிக்கு இன்பம் ஊட்டும் வகையில் பாடியதால் மதுரகவியாக விளங்கினார். சிவபெருமான் தக்கன் செய்த யாகத்தை வீரபத்திரனைக் கொண்டு அழித்த வரலாற்றைப் பரக்கப் பாடியதனால் பெருங்கவியாகப் போற்றப்பட்டார். இவருடைய இயற்பெயர் கூத்தன். இவர் கூத்த முதலியார் என்று வழங்கப் பெற்றார். இவர் பிறந்த ஊர் 'மலரி' என்பதைத் தண்டியலங்காரத்தில் உள்ள மேற்கோள் செய்யுள் மூலம் அறியலாம்.

சோழப் பேரரசன் விக்கிரமச் சோழன் காலத்தில் அரசவைக்க கவிஞராகவும், இரண்டாம் குலோத்துங்கனுக்கு ஆசிரியராகவும், அரசவைக் கவிஞராகவும் இரண்டாம் இராசராசனுக்கு அரசவைக் கவிஞராகவும் விளங்கினார். இம்மூன்று வேந்தர்களைப் பற்றியும் பாடிய உலா இலக்கியம் 'மூவருலா' ஆகும். இவர் இயற்றிய நூல்கள் மூவருலா, (விக்கிரமச் சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் ராசராசன்) குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப் பரணி, காங்கேயன் நாலாயிரக் கோவை, அரும்பைத் தொள்ளாயிரம். ஈட்டி எழுபது முதலியன.

படிக்காசுப் புலவர்

புகழ்பெற்ற தொண்டை மண்டலத்தில் சற்றேறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் பொற்களத்தூரில் தோன்றியவர். இவர் நவ வீரர் வழிவந்த நம் செங்குந்தர் மரபைச் சார்ந்தவர் ஆவார். தொண்டை மண்டலத்திலிருந்த புலவர்கள் அனைவரும் இவரைத் தேடிவருவர். நல்ல தமிழ்ப் புலமை கொண்டவர், பழைய ஓலைச் சுவடிகளிலிருந்து அரும்பெரும் புராதன நூல்களையெல்லாம் பெயர்த்து எழுதி பல அருமையான நூல்களை வெளிக் கொணர்ந்தவர்.

ஞானியாரடிகள்

கும்பகோணத்தை அடுத்த திருநாகேச்சரத்தில் வீரசைவ செங்குந்தர் மரபில் 15-5-1873 அன்று அண்ணாமலை - பார்வதி, தம்பதியர்க்குத் திருமகனாகத் தோன்றினார். இயற்பெயர் பழனியாண்டி. தம் பதினேழாம் அகவையில் திருக்கோவிலூர் ஆதீனம் திருப்பாதிரிப் புலியூர் திருமடத்தில் ஐந்தாம் குருமூர்த்திகளாக 52 ஆண்டுகள் குரு

பீடத்தில் அமர்ந்து சைவமும், தமிழும் தழைத்தோங்க தமிழகம் முழுவதும் சென்று சொற்பொழிவு ஆற்றியவர். ஞானியாரடிகள் எனப்போற்றிக் கொண்டாடப் பெற்றவர்.

இரட்டைப்புலவர்கள்

சோழவள நாட்டில் அமிலாந்துரை என்ற பாடல் பெற்ற தலத்தில் புகழ்பெற்ற செங்குந்தர் மரபில் தோன்றியவர்கள். இவர்களது பெயர்கள் முறையே இளஞ்சூரியர், முதுசூரியர் என்பது தமிழ் நாவலர் சரிதையின் மூலம் தெரிய வருகிறது. ஆனால் பொதுப் பெயராக இரட்டையர் என அழைக்கப்பட்டனர். ஒருவர் கண்பார்வையற்றவர். மற்றொருவர் கால் முடமானவர், குருடாய் உள்ளவர்மேல் முடமாய் உள்ளவர் முதுகிலோ, தோளிலோ ஏறிக்கொண்டு உலாவத்தொடங்கினர். முடவர் பாடலின் ஒரு பகுதியைப் பாட குருடர் அப்பாடலில் இரண்டாம் பகுதியைப் பாடி முடிப்பார். வாழ்நாள் முழுவதும் தல யாத்திரையிலேயே கழித்தார்கள். அளவற்ற பாடல்கள் பாடி, பல அற்புதங்களை நிகழ்த்தியவர்கள். (திருவாமத்தூர் கலம்பகம்)

பாவேந்தர் பாரதிதாசன்

புதுவை நகரில் புகழ் பெற்ற நம் செங்குந்தர் குலத்தில் வணிகராகவும் ஏற்றுமதி வணிகராகவும் திகழ்ந்த கனகசபை முதலியாரின் மகனாய்த் தோன்றியவர். இயற்பெயர் சுப்புரத்தினம். பாரதியாரின் மீது பற்றுகொண்டு தன் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். தேசியக் கவி பாரதியார் மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்ட பாடல்கள் எழுதினார். அவரைப் போல் பாரதிதாசன் சமுதாய எழுச்சி, தமிழ் மொழிப் பற்று, தமிழர் இனப் பற்று இவைகளை வளர்க்கவும், சமுதாய உயர்வு தாழ்வை, அறியாமையை அகற்றவும் எழுச்சிப் பாடல்களைப் பாடினார். எளிய நடையில் இனிய தமிழில் எழுதினார். இயற்கை, தமிழ், சீர்திருத்தம், கல்வி, குடும்பம், நாடு போன்ற பல்வேறு செய்திகளை மையமாகக் கொண்டது அவர் பாடல்கள். எனவே அவரை மக்கள் கவிஞராக, சமுதாயக் கவிஞராக எல்லோராலும் பாராட்டப்படுகிறார். பல கவிஞர்களைத் தம் கவியால் கவர்ந்தவர். பல கவிஞர்களை உருவாக்கியவர். ஏறக்குறைய 64 நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார். குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, இளைஞர் இலக்கியம், அழகின் சிரிப்பு இசையமுது, தமிழியக்கம் போன்றவை முக்கியமானவை ஆகும்.

ஒட்டக்கூத்தர், படிக்காசுப் புலவர், இரட்டைப் புலவர்கள், தஞ்சைவாணன் கோவை எழுதிய பொய்யாமொழிப் புலவர், பகழிக்கூத்தர், காங்கேய முனிவர், சிதம்பர சுவாமிகள், கச்சியப்ப முனிவர், கோனேரியப்ப நாவலர், அருணாசல சுவாமிகள், அண்மைக் காலத்துப்புலவர்கள் காஞ்சி நாகலிங்க முதலியார், ஞானியாரடிகள், **பாரதிதாசன் போன்றோர் நம் குலத்தைச் சார்ந்த புலவர் பெருமக்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.**

'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' - ஒரு விளக்கம்

'ஒட்டக்கூத்தன்' பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற தொடரைக் கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தரைத் தாழ்த்திப் பேசுவதற்கே பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இந்த வாசகம் ஒட்டக்கூத்தருக்குப் பெருமை சேர்ப்பதாகும் என்பதை உணர்த்தியவர் தமிழறிஞர் டாக்டர். சிலம்பொலி சு.செல்லப்பன் அவர்கள்.

ஆண்டுதோறும் ஆவணித் திங்களில் கவிச்சக்கரவத்தி ஒட்டக்கூத்தர் பெருமானுக்கு, திருமயிலை வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் மட்டுமே விழா கொண்டாடப்படுகிறது. 12-9-1986 அன்று திருமயிலை வெள்ளீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற ஒட்டக்கூத்தர் விழாவில் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்குநராக இருந்த டாக்டர். சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் 'ஒட்டக்கூத்தரின் கவிநயம்' என்ற தலைப்பிலே சிறப்பானதோர் சொற்பொழிவு ஆற்றினார். காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஒட்டக்கூத்தரைப் பற்றிக் கூறப்பட்டுவரும் கட்டுக்கதைகளை எல்லாம் மறுத்து ஒட்டக்கூத்தரின் பெருமைகளைப் புலப்படுத்தினார். ஒட்டக்கூத்தரின் கவிநயங்களைப் புரிந்துகொள்வதற்கு ஒரு தாழ்ப்பாளை மட்டும் திறந்தால் போதாது. அவரின் கவிதைகளை ஒருமுறைக்கு இருமுறை படிக்கவேண்டும் இரண்டாவது தாழ்ப்பாளைத் திறந்தால்தான் கூத்தரின் கவிதைகளின் உள்ளே புகமுடியும் என்று கூறினார். 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பதற்கு இதுதான் சரியான உண்மையான உட்பொருள். இந்தப் பழமொழி ஒட்டக்கூத்தரின் கவிதைகளின் சிறப்பைத்தான் குறிக்கிறதே தவிர கூத்தப்பெருமானைத் தாழ்த்துவதற்கு அல்ல என்றும் அறுதியிட்டுக் கூறினார். இக்கருத்து புலவரேறு நஞ்சையாப் பிள்ளை அவர்களால் கூறப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்ற தொடருக்குத் தவறான பொருள் கொள்வதற்கு முற்றுப்புள்ளி வைத்தார் சிலம்பொலியார்.

உன்னுடைய பிரார்த்தனைக்கு இறைவன் மூன்று வழிகளில் மட்டுமே அளிக்கிறார்.
(1) இறைவனிடம் வேண்டுவனவற்றை உடனே அளிக்கிறார்.
(2) தாமதித்து அளிக்கிறார்.
(3) அதற்கு பதிலாக வேறொன்றை அளிக்கிறார்.
இறைவன் எப்போதும் இல்லையென்று சொல்லுவதில்லை.

வணங்கத்தொடங்கும்போதே நாம் வளரத் தொடங்குகிறோம்.

தியாகச் செம்மல்கள்

திருப்பூர் குமரன்

ஈரோடு தாலுகா, சென்னிமலை என்னும் சிறுநகரில் செங்குந்தர் குலத்தில் நாச்சிமுத்து - கருப்பாயி அம்மாள் தம்பதியருக்கு 04-03-1904இல் மூன்றாவது மகனாகக் குமரன் பிறந்தார். இவரது இயற்பெயர் **குமாரசாமி**.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே படித்த குமரன் நெசவுத்தொழில் கற்பதற்காகத் தாய்மாமன் ஊரான பள்ளிப்பாளையம் அனுப்பப்பட்டார். தொழில் கற்று வந்து சென்னிமலையில் சொந்தமாக நெசவு செய்து ஈரோட்டில் ஒரு கடையில் வாடிக்கையாகக் கொடுத்து விட்டுச் செல்வார். பொதுவாகக் கடை உரிமையாளர்கள் துணியின் தரம், நெசவு செய்த விதம் போன்றவை சரியில்லை என ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லி நெசவாளர்களின் வயிற்றில் அடிப்பது வழக்கம். இதைப்போலவே குமரனுக்கும் நேர்ந்தது. கடைக்காரர் ஐந்து ரூபாயைப் பிடித்துக்கொண்டு மீதியைக் கொடுத்தார். ஓய்வின்றி நாள் முழுக்க உழைத்தும் ஊதியமும் இன்றி உள்ள பொருளுக்கும் வழியின்றிப் போகும் இந்தத் தொழில் இனி வேண்டாம் என முடிவு செய்தவராகத் திருப்பூர் வந்தார். அங்கு எல்.ஈ.ஆர்.ஆர். என்ற நிறுவனத்தில் பணியில் சேர்ந்து விரைவிலேயே உரிமையாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார். 1921இல் தனது 17ஆம் வயதில், பத்து வயது சிறுமியான ராமாயி அம்மாளை அந்தக்கால வழக்கப்படி இளம் வயது திருமணம் செய்து கொண்டு, மனைவியுடன் திருப்பூர் வந்த குமரன், அவ்வூரில் இயங்கிய திருப்பூர் "தேசபந்து வாலிபர் சங்கத்தில்" உறுப்பினராகச் சேர்ந்தார்.

கோயில்களில் பஜனை பாடுவதைப் போலவே இவர்களும் தேசத்தைப் பற்றியும் காந்தியடிகளைப் பற்றியும் தினமும் பஜனை பாடுவார்கள். குமரன் காலை எழுந்ததும் தேசபக்தி பஜனை செய்துவிட்டு தொழிற்சாலைக்குப் போய்விடுவார். மாலையிலும் இப்படியே செய்வார். மிகவும் துடிப்புள்ள இளைஞராக விளங்கிய இவருக்கு மெலிந்த தேகம் தான். ஆனால் அதற்குள் எதற்கும் அஞ்சாத வலுவான இதயம் இருந்தது. அதனால் தான் அடக்குமுறையை எதிர்த்துப் போராடுதல், கள்ளுக்கடை மறியல், பட்டாசுக்கடை மறியல் போன்றவற்றில் தைரியமாக ஈடுபட்டார். ஒரு சமயம் தீபாவளி சமயத்தில், அந்நியப் பொருளான வெடியை வாங்கி, காசைக் கரியாக்காதீர்கள் என வேண்டி, பட்டாசுக்கடை முன்பு மறியல் செய்தார். வியாபாரம் மந்தமானதால், வெறுப்புற்று ஒரு கடைக்காரர் பட்டாசுக்கட்டு ஒன்றில் தீவைத்து குமரன் மீது வீசினார். உடல் முழுவதும் தீப்புண் ஏற்பட்டது. கொண்ட கொள்கையில் குலைந்து போகாமல், ஐந்து வயது சிறுவன் ஒருவனுடன் தனியாளாக மறியலுக்கு வந்திருந்த குமரன் அந்த நிலையிலும் நிலைத்து நின்று மறியலை வெற்றிகரமாக நடத்தினார். அது முதல் அவரது வீட்டினர் பட்டாசைத் தொட்டதும் கிடையாது. வெடித்ததும் கிடையாது. காந்தியடிகள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து நாடெங்கும் மறியல்களும், சட்டமறுப்பும் நடைபெற்றது. திருப்பூரில் 6.1.1932இல் மக்கள் கூடி, சட்டமறுப்புப் போராட்டத்தை 10-01-1932இல் பி.ஏ.எஸ்.சுந்தரம்

தலைமையில் நடத்துவது எனவும் முடிவு செய்தனர். மறியல் செய்வோர் பெயரில் குமரனின் பெயரும் இருந்தது.

குமரனின் தீவிரமான போக்கு வீட்டினருக்குக் கவலையளித்தது. இளம் மனைவியுடன் ஒரு நாள் கூட குடும்பம் நடத்த நினைக்காமல் எப்போதும் தேசம், தேசம் என்று பேசும் இந்த 28 வயது இளைஞனை வீட்டினர் கண்டித்தனர். அதை மீறி கூட்டத்தில் கலந்து கொண்டார் குமரன். கூட்டம் என்றால் இப்போது வேடிக்கை பார்க்கக் கூடும் கூட்டத்தைப் போன்றதல்ல அது. பள்ளியில் வரிசையாக பிள்ளைகள் நடந்து செல்வார்களே! அதைப்போல இருவர் இருவராக இணைந்து தேசியக்கொடியுடன் தேசத்தைப் போற்றிக் கோஷமிட்டுச் செல்லும் கூட்டம். எந்தக் கூட்டத்திலும் ஒழுங்கைக் கடைபிடிக்கும் குமரன் இந்தக் கூட்டத்தின் போது மிகவும் உணர்ச்சி வசப்பட்டவராகக் கோஷமிட்டபடி நடந்தார். அவரது கைகளில் இந்தியக் கொடியைக் கம்பீரமாகத் தூக்கிப் பிடித்திருந்தார். கூட்டத்தலைவர் சுந்தரம், குமரனை மெதுவாகப் போகும்படி எச்சரித்தார். ஆனால் விடுதலை வேட்கை அவரை விரைவாய் நடக்க ஏவியது. மீண்டும் முன்னால் சென்றுகொண்டிருந்தார். அப்போது யாரும் எதிர்ப்பார்க்காத விதமாக முப்பது காவலர்களும், இரண்டு அதிகாரிகளும் திடீரெனப் பாய்ந்து தேசத்தொண்டர்களைத் தாக்கினார்கள். கூட்டத்தின் முன்னால் சென்று கொண்டிருந்ததால் குமரனுக்குத்தான் முதலடி விழுந்தது. அந்த அடியிலேயே இடப்புறக்காதின் மேல்பக்க மண்டையோடு உடைந்து சிதறியது. தொடர்ந்து காவலர்கள் அதே இடத்தில் அடித்ததால் மண்டை நொறுங்கியது. பிரம்புகள் மூளைக்குள் பாய்ந்து பதிந்தது. இதனால் மூளை செயல் இழந்துவிட குமரன் பேச்சு மூச்சற்றுக் கீழே விழுந்தார்.

உணர்வற்ற நிலையிலும் ஒல்லியான அவருடைய கரங்கள் தேசியக் கொடியை இறுகப் பிடித்திருந்தது. காவலர்கள் கொடியைப் பிடுங்க முடியாதபடி கொடியை இறுகப் பிடித்தபடி மயங்கி இருந்தார். இதனாலேயே அவரைக் **கொடிகாத்த குமரன்** எனப் போற்றுகிறார்கள். குமரனுடன் இணையாக நடந்து வந்தவர் ஆர்.ராமன் நாயர். இவரும் அடிபட்டு மயங்கி விழுந்தார். இந்தக் கூட்டத்தை நடத்திய பி.ஏ.எஸ். சுந்தரத்தின் கைகால்கள் உடைக்கப்பட்டன. அவருடைய உடலின் பல எலும்புகள் நொறுக்கப்பட்ட நிலையில் அவரும் விழுந்தார். இந்த நிலையில் அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது அப்போதைய திருப்பூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்த முகம்மது என்பவர் அவர்களைச் சரிவர கவனிக்க வேண்டாம். நாய்கள் சாகட்டும் என மருத்துவரான கோபாலகிருஷ்ணன் மேனன் என்ற மலையாள மருத்துவரிடம் கத்தினான். அவர் இன்ஸ்பெக்டருடன் வாதிட்டு அவரை வெளியேற்றியபின் குமரனுக்குத் தீவிர சிகிச்சையளித்தார். சிசிச்சை பலனளிக்காமல் 11-01-1932இல் இறைவனடி சேர்ந்தார். இளம் வயதிலேயே நாட்டுப்பற்று மிக்கவராய் நம் தேச மக்களுக்காக இன்னுயிர் நீத்த குமரனின் வாழ்க்கை நமக்குப் பாடமாகும். தியாகச் செம்மலானத் திருப்பூர் குமரன் செங்குந்தர் குலத்துக்கு மட்டுமல்ல, தேசத்திற்கே பெருமை சேர்த்தவர். அவர் வழி நின்று நாட்டுப்பற்று கொண்டவராய் விளங்கி நம் குலத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்போம்.


வெற்றிவேல்
வீரவேல்
செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
ஒட்டக்கூத்தர் முதலியார்
திருமுருக கிருபானந்த வாரியார்
அருணகிரிநாத செங்குந்தர்
வீரதீர செங்குந்தர்
வீராந்தக செங்குந்தர்
வீரமார்த்தாண்ட செங்குந்தர்
வீரராக்கத்த செங்குந்தர்
வீரபாகு செங்குந்தர்
வீரகேசரி செங்குந்தர்
வீரமகேந்திர செங்குந்தர்
வீரமகேசுவர செங்குந்தர்
வீரபுராந்தக செங்குந்தர்
முருகப் பெருமானின் போர்ப்படைத் தளபதிகள்
வீரபாகு உள்ளிட்ட செங்குந்த கைக்கோள நவவீரர்கள்



தென்கிழக்கு ஆசியாவை ஆண்ட மாமன்னர்
இராஜேந்திர சோழனின் மனைவி

இராணி வீரமாதேவி செங்குந்தர்



கன்னட ராஷ்டிரகூட வல்லான் படையெடுப்பை
வென்று தமிழகத்தை காப்பாற்றிய

மன்னர் வீரநாராயண செங்குந்தர்



செங்குந்தர் மரபு சிதம்பரம் மௌன தேசிகர் ஆதினம்

சபாபதி தேசிகர்


17.11.1880 - 21.04.1949
காஞ்சீபுரம் முன்னாள் சேர்மன், 72 செங்குந்தர் நாடுகளை
உள்ளடக்கிய கடைசி ஆண்டவர் பட்டம் கொண்ட நாட்டாண்மை
ம.த. சாமிநாத முதலியார்


(09.10.1865 - 09.07.1950)
செங்குந்தர் சங்க நிறுவனர்
காஞ்சி நாகலிங்க முனிவர்


(25.12.1898 - 14.03.1973)
ஈரோடு கல்வித்தந்தை, ஈரோடு முன்னாள் சேர்மன்,
OC பிரிவில் இருந்த செங்குந்த கைக்கோளர்
சமுதாயத்திற்கு BC இட ஒதுக்கீடு பெற்றுத் தந்த
எஸ். மீனாட்சிசுந்தரம் முதலியார்



நெசவாளர் நேசன், உத்யோக ரத்னா

ஜெ. சுத்தானந்தன் முதலியார்



ஈரோடு செங்குந்தர் கல்விக்கழகம், பழனி முருகன்
கோவில் தங்க தேர், வைரவேல், தங்க மயில், வின்ச்
ரயில் ஆகியவற்றின் நிறுவனர், சைவப் பெருவள்ளல்

வி.வி.சி.ஆர். முருகேச முதலியார்



தர்மபுரி கள்ளுக்கடை மறியல், சட்டமறுப்பு, உப்பு சத்தியாகிரகம், நீல்
சிலையை அகற்றும் போராட்டங்களின்போது பல்வேறு கட்டங்களில் 8
ஆண்டுகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்ட சுதந்திர போராட்ட வீரர்

டி.என். தீர்த்தகிரி முதலியார்


28.04.1913 - 27.06.1987
நெசவாளர்களின் முன்னேற்றத்துக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த
பத்மஸ்ரீ எம்.பி. நாச்சிமுத்து முதலியார்


(28.08.1926 – 14.01.2018)
பத்ம விபூஷன்
4 மாநில முன்னாள் கவர்னர் & இந்திய
உளவுத்துறை இயக்குனர்
டி.வி. ராஜேஸ்வரன் முதலியார் IPS


(22.06.1890 - 28.10.1970)
தென்னிந்தியாவுக்கு மின்சாரம் தரும்
NLC நிறுவனத்தை உருவாக்கிய
Rao Bahadur டி.எம். ஜம்புலிங்க முதலியார்


(13.10.1840 - 06.03.1911)
19ஆம் நூற்றாண்டின் மாபெரும் கொடை வள்ளல்
ராஜா சர்
சவலை இராமசாமி முதலியார் CIE


செங்குந்த கைக்கோளர் குலத்தில் பிறந்த
காளஹஸ்தி ஞானப்பூங்கோதை அம்மன்